# மன்னர் சரபோஜி

## பிறந்த நாள் விழா மலர்

24·9·89



1·13064

சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

# மன்னர் சரபோஜி
# பிறந்தநாள் விழா மலர்

*
* *


பதிப்பாசிரியர் :

பன்மொழிப்புலவர், பேராசிரியர்

**மு. சதாசிவம்**, எம். ஏ., எம். லிட்.,

இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்.


*
* *


சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர் - 613009

1989.

முதற்பதிப்பு 1989

மன்னர் சரபோஜி 212-வது பிறந்தநாள் விழா
24—9—1989

## மலர்க் குழுவினர்

திரு. சீ. கிருஷ்ணன், நிர்வாக அலுவலர் அவர்கள்

திரு. குடவாயில் பாலசுப்பிரமணியன், எம்.ஏ., அவர்கள்

திரு. சிரோமணி, புலவர் என். சீனிவாசன் அவர்கள்

திருமதி புலவர் ச. திலகம் பி.லிட்., அவர்கள்

திரு. டி. வி. பாலசுப்ரமணியன் அவர்கள்

,, என். சுப்ரமணி அவர்கள்

,, க. மனோகரன் அவர்கள்

,, எம். பன்னீர்செல்வம் எம்.ஏ., பி.எல்.ஐ.எஸ்., அவர்கள்

,, கே. வரதராஜன் அவர்கள்

,, பி. அருணாசலம் அவர்கள்

,, எஸ். பாலகிருஷ்ணன் அவர்கள்

அச்சிட்டோர் ;
சரசுவதி மகால் நூலக அச்சகம், தஞ்சாவூர்-613 009.



**கலைமகள்**

சரபோஜி மன்னர் கால ஓவியம்

# முன்னுரை

சேரர்களில் ஒரு செங்குட்டுவன். சோழர்களில் ஒரு இராசராசன். பல்லவர்களில் ஒரு இராசசிம்மன். பாண்டியர்களில் ஒரு பராந்தக நெடுஞ்சடையன். மதுரை நாயக்கர்களில் ஒரு திருமலை. தஞ்சை நாயக்கர்களில் ஒரு இரகுநாதன். தஞ்சை மராட்டியர்களில் ஒரு சரபோசி. இது காலம் தந்த பரிசில்கள். மாதத்திற்கு ஒரு முழுநிலவுதான். மன்னர் மரபுகளுக்கும் ஒரு தனி மனிதரின் சாதனைகள் தான் நிலைக்கின்றன. சிங்க மராட்டியர்தம் குலத்துதித்த பெருந்தகையாளர் மன்னர் சரபோசியின் சாதனைகளோ இமயமென உயர்ந்து நிற்கின்றன. அம்மாமனிதர் பிறந்து 211 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. செப்டம்பர்த்திங்கள் 24-ஆம் நாளே அவர் பிறந்த இரு நூற்றுப்பன்னிரண்டாம் ஆண்டுத் திருநாள்.

இளங்கதிர் முத்துமாலையும் களிறும், எழிலுறு சிவிகையும் பரியும் தனக்குவை பிறவும் அளித்துப் புலவர்களைப் போற்றிய அப்புரவலர் இந்நாட்டு மக்களுக்குத்தான் எத்தனை எத்தனை செல்வங்களைக் குவித்துச் சென்றுள்ளார்...!

கல்விக் கடலெனத் திகழ்ந்த அம்மாமனிதர் கலைமகள் கோயிலாம் சரசுவதி மகாலைத் தங்கச் சுரங்கமாக, வைரப் பெட்டகமாக, அள்ள அள்ளக் குறையாத அறிவுத் தடாகமாய் அல்லவா விட்டுச் சென்றுள்ளார். செப்பு மொழி பதினெட்டுடையாள் அவள் சிந்தை ஒன்றுடையாள் என்று மகாகவி பாடினானே...! அவன் பாடியது சரபோசி காத்த அந்தக் கலைக் கருவூலத்தைக் கண்டுதானோ... !

மண்ணாளும் வாய்ப்பை வஞ்சகர்கள் குறைத்த போதும், தளராமல் கலைவேந்தனாய் வாழ்ந்து காட்டிய அவர் திறம்தான் என்னே...! அறிவு என்பது பொதுச்

சொத்து. அது அனைவர்க்கும் கிடைத்திடச் செய்தலே அரசனின் கடமை என்பதை உலகுக்குக் காட்டிய உத்தமர் அல்லவா அவர். அவர் பிறந்த திருநாளை நாம் போற்று வதில் எத்தனை பெருமிதம் எழுகிறது,

கலை மன்னராம் சரபோசி அவர்கள் கட்டிக் காத்த கலைக் கருவூலமாம் சரசுவதி பண்டார் எனும் சரசுவதி மகால் நூலகத்தின் இயக்குநர் பொறுப்பைச் சென்ற திங்கள் ஏற்ற யான், முதல் விழாவாக இப்பெரு விழாவைக் கொண்டாடுவதில் பெருமிதம் எய்துகிறேன். சோழர் கால அரிய நூல்களையும், நாயக்க மன்னர்கள் சேகரித்த அருஞ் சுவடிகளையும், மராட்டிய மாமேதைகள் விட்டுச் சென்ற எண்ணிலா நூல்களையும் தன்னகத்தே கொண்டு மன்னர் சரபோசியின் வழிபாட்டுக் கோயிலாகத் திகழ்ந்த சரசுவதி பண்டார் எனும் இந்நூலகத்தின் அறிவுப் பெட்டகத்தில் உள்ள எண்ணிலா முத்துக்களில் சில முத்துக்களையாவது கோத்து இம் மன்னருக்கு முத்தாரம் சூட்ட முனைந்தேன்.

இப்பெரும் பணிக்கு அறிஞர்கள் பலரையும், புலவர் கள் பலரையும் என்னுடன் இணைத்துக் கொண்டேன். அப்பெருமக்கள் தொடுத்த இந்த முத்தாரத்தை விழா மலராக அப்பெருமகனாருக்குச் சூட்டி மகிழ்வோம்.

இம்மலர் ஒரு சிறந்த வரலாற்று நூல். மன்னர் சரபோசியின் பல்துறை ஆற்றல்களையும் ஒருங்கே கூறி ஒரு முழு வரலாற்று நூலாகவே மாற்றி இருக்கிறார்கள். ஆற்றல்சால் அறிஞர் பெருமக்கள். அவர்களுக்கும், மலர்க் குழுவில் இடம் வகித்துப் பம்பரமெனச் சுழன்று பணி செய்த எம் ஊழியர்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

தஞ்சாவூர்,
23—9—89.

**மு. சதாசிவம்,**
இயக்குநர்.

# உள்ளுரை

பக்கம்


1) His Highness Maharaja Serfoji Chatrapathy Thulajendra Raja Bonsle (ENGLISH) ... 1—7

2) ,, ,, (MARATHI) ... 8—10

3) தஞ்சை சரபோஜி மன்னர் சரித்திரம் ... 11—15
— தமிழ் தாத்தா டாக்டர் உ. வே, சாமிநாதையர்

4) Thaujavur Natya on Canvas ... 16—17
— Dr. R. Nagasamy

5) பண்டைத் தமிழகத்தில் நூலகங்கள் ... 18—20
— குடந்தை என். சேதுராமன்

6) ஸ்ரீ தியாகப்பிரம்மம் போற்றிய இசை மரபு ... 21—25
— குடவாயில் பாலசுப்ரமணியம்

7) இரண்டாம் சரபோஜிமன்னர் காலத்து இசைப்புலவர்கள் ... 26—32
— தெலுங்குப் புலவர் என். விசுவநாதன்

8) சமஸ்கிருதமொழி வளர்ச்சிக்கு இரண்டாம் சரபோஜி மன்னரின் பங்கு ... 33—39
— வடமொழிப் புலவர் என். சீனிவாசன்

9) ஓவியம் வளர்த்த காவிய நாயகன் ... 40—43
— தமிழ்ப் புலவர் ச. திலகம்

10) சரபோஜியும் குப்பண்ணனும் ... 44—45
— நூலகர் கே. இராமதிலகம்.

11) புலவர்கள் போற்றிய புகழ்மிகு மன்னர் ... 46—50
மராத்திப் புலவர் டி. ஆர். பீமராவ்

பக்கம்

12) இரண்டாம் சரபோசி மன்னர் கல்வெட்டுக்கள் ... 51—55
— பேராசிரியர் செ. இராசு

13) தஞ்சை மண்ணில் முடியாட்சி ... 56—59
— ஆய்வு அறிஞர் வ. வேணுகோபாலர்

14) மன்னர் சரபோஜியின் மகத்தான ஜாதகம் ... 60—63
— கவிஞர் அன்னை பாலு

15) சரபோஜியின் கட்டடக்கலை ; மனோரா ... 64—70
— முனைவர் இரா. பவுன்துரை

16) மாமன்னர் சரபோஜியின் கல்விப்பணி ... 71—73
— நூலகர் அ. பஞ்சநாதன்

17) மன்னர் போற்றிய மருத்துவக் கலை ... 74—77
— வடமொழிப் புலவர் எஸ். இராஜலெட்சுமி




மன்னர் சரபோஜியின் உருவ ஓவியம்

SRI JAI BHAVANI: SRI JAI BHARAT:

# HIS HIGHNESS MAHARAJA SERFOJI CHATRAPATHY

THULAJENDRA RAJA BONSLE,
Prince and Life Member,
T.M.S.S.M. Library Society, Thanjavur.

On the happy and memorable occasion of the 212th birth-day celebration of Maharajah Serfoji Chatrapathy II, the scholar-prince of Thanjavur, I deem it a great pleasure and honour, as a descendent of Rajah Serfoji the great, to contribute to the Commemoration volume an article about his various achievements in the field of education and about his other activities as well his service to the Tamilnadu and to the world-famous library of his at Thanjavur.

Thanjavur is called the Eden of the South. It deserves that name. Its fertility is unbounded. It is the land in which Hindu culture has made great centres of social and cultural life. Great river flew through it, great cities adorn it. Its temples are amongst the most sacred and architecturely superb ones. It was the seat of the Cholas, Nayaks and ultimately the Maratha dynasties.

Rajaraja Chola, Rajendra Chola, Ragunatha Naik, Rajah Sahaji II and Rajah Serfoji II are some of the distinguished rulers of Tanjore and their names will be remembered by posterity because of their high attainments and service to the people.

Rajah Serfoji II of the Maratha dynasty ascended the throne in the year 1798 A. D. and ruled until 1832 A. D. Hindu rulers are invariably supporters of education and honoured the men of learning and genius at their courts.

In like manner. Serfoji Rajah invited learned scholars and distinguished poets from different parts of India to adorn his court.

"Sarasvati Mahal Library" is the living monument for the glory of Serfoji. He dedicated his life to make the library a treasure house of ancient manuscripts on all aspects of literature and art. Many manuscripts are still being added. The library possesses about 4000 volumes of old books in English, Greek, French and Italian printed in the 18th century and acquired by Rajah Serfoji II. The books bear the autograph of the King along with the year of acquisition. These books deal with Anatomy, Botany and Marine biology besides towns, costumes, birds and animals. The library contains also rare collections of miniature printings, pictures of puranic episodes etc. When he went on a pilgrimage to Benaras he brought very valuable manuscripts here and ordered a host of pandits to take fair copies of the manuscripts that could not be brought over here. As a fitting tribute to the great patron and scholar the library has been named as the Maharaja Serfoji's Sarasvati Mahal Library, Thanjavur.

Rajah Serfoji's philanthrophical activities for the uplift ing his subjects gained him a warm corner in the hearts of the South Indians. Like his ancestors he too patronised scholars and pandits who had written several works.

Rajah Serfoji's reign witnessed revival on literature, education, Music, Dance, Medicine and in fact his period was the golden era in the History of Thanjavur.

His early education under Rev. Swartz and Garik greatly helped in moulding his character. He loved foreign languages. At the same time he did not neglect his native languages and received the best Hindu Education under eminent Pandits of the orthodox Hindu School. This kind of education made him strive for the harmonious blending of both eastern and western cultures and this effort of his manifested in his various activities in the field of music, medicines etc.

He was a great administrator and a polyglot. He was a scholar of English. French and German, Sanskrit, Tamil and Marathi. His several works in Indian languages such as Sanskrit, Tamil and Marathi reveal that he was a gteat scholar. He wrote hundreds of songs in Sanskrit and all are set to music and dance and recitals. He is the author of several dance pieces of Alarippu, jatiswara, sabdam and padam. He has composed numberless kavuthuvam, slokavarnam and prabhandas all adopted to Bharatanatyam, Sollukattu, Swaras Jathis and Sahityas with their respective notations in Indian swaras are given for every items with meticulous care. Perhaps his collections on Bharatanatya dances are the largest in the whole of India. Nowhere in India in one single place can be seen such a huge collections of Sampradaya Natyam. Such rare types oj dances like Jakkini, Perani, Dharupad. Desi. Navadadam and Kuruvai were in vogue aud we have evidence of their being practised at his court. These types of dances have now become obsolete. He was also praised by Lord Valentia who visited him in the year 1804' as capable of composing tunes in English.

His orchestra comprised of several native and English instruments richly ornamented with diamonds and pearls. His band consist of both European and Indian musical instruments called Tanjore Band. He composed songs on several Indian languages capable of orchestration in Western musical instruments. Indian tunes and Ragas were set to European staff notation fit to be used on his orchestra. They are recorded in several of his music books Bharatanatya was then at its peak and several prodigies whose compositions are now considered the best that South India has every produced flourished at his court. Tamilnadu is the cradle of Bharatanatya. The trad'tional Bhagavathamela, the oldest type of Drama of the south received support at his hand. To the artists of Bhagavathamela of the villages of Saliamangalam, Thepperumanallur, Needamangalam, Serfoji Rajah gave gifts of lands and cash. To many of his Chatram Bhagavata Melas were attached and provisions were made for them in the chatram,

Rajah Serfoji wrote many dramas and dance-dramas in Marathi and Sanskrit. His dramas belong to a type much in

vogue at his time aad were generally intended to be enacted during festive occassions. They were in accordance with Sanskrit dramas of the Poet Kalidasa period with its incumbent Vidushaka and Sutradhar.

As many as 12 Natakas and 16 Natya Natakas in Marathi and Sanskrit works like Kumarasambhavam, Mudra-rakshasachaya, Palakappiya and Gaja shastra praphandam are attributed to his authorship. He patronised poets and scholars At regular intervals he used to call for Vidwat Sadas and delighted in hearing extensive poetry, Panegrice and discussions on Tharka Sastra and subjects on music and dance. Swati Thiru-nal Maharaja of Travancore kept contact with Serfoji even before he came to the throne and exchanged scholars, musicians and even their personal compositions. Saint Tyagaraja swamigal, Syama Sastrigal, Muthuswami Dikshitar, the musical Trinity were the contemporaries of Rajah Serfoji.

## RAJA SERFOJI'S EDUCATIONAL ACTIVITIES :

Rajah Serfoji arranged to by bring together all children irrespective of caste and creed in one school and they were taught free in all subjects without any reservations. Hostel facilities were provided for the schools attached to Chatrams. From numerous records in Modi we see that Serfoji Rajah School admitted girls also. He was the pioneer of woman education. In fact his munificence extended beyond his means for he liberally helped several European mission aiso. The S. P. G. Mission got maximum help from them. In the year 1808 A. D. Tranquebar was con-querred by the English from the Danish people, Hence the Danish mission school was in distress. Rajah Serfoji extended his timely help and set up an entire village called Ayyappadi for its mainte-nance. Several buildings now gifted to the educational institutions owe their origin to the munificence of this noble King. On the request of the Governor of Madras, he sent one of his leading Tamil poets Sivakolundu Desikar to Madras to be appointed as professor of Tamil in the first college to be started there.

## RAJAH SERFOJI'S PRINTING PRESS :

To further the cause of Education he started his first press called 'Navavidya Kalasala Varnayantra, in Tanjore and in fact this was the first press at Thanjavur printing in the books of oriental languages. The first types used by Serfoji Rajah were stone types and even today we see clear and excellent copies of such books preserved in his great library at Sarasvati Mahal of Thanjavur,

## RAJAH SERFOJI'S MEDICAL INSTITUTIONS AND DHANVANTRI MAHAL

His contributions to the improvement of medicine is far the greatest. He established a medical research institution known as 'Dhanvantri Mahal' which provided medical facilities for the people, He carried researches in various systems like Ayurveda, Siddha and Unani and wrote down the results of their combined efforts in the shape of several 'Attavanais or list of recipes. He requested some of his eminent Tamil poets and scholars to weave them into verses and had them recorded in palm-leaves and paper manuscripts. They are called 'Anubhava Vaidya Bagam' (அனுபவ வைத்திய பாகம்) which means recipes tested by experience and found to be efficacious. Even today in the South these prescriptions are being widely used and acclaimed to be the best that Hindu medical system could offer. Many stanzas of their medical works contain the name of their patron, Rajah Serfoji at the end.

He grew his own medicinal herbs and plants in Herbarium in the Palace and in other places. To identify rare plants and herbs he caused his artists to copy them in their natural colours. We can see several bound Albums of such plants and Herbs in vivid colours as if they were written only yesterday. In those days photography was not known in India and he ordered the best of his artists to draw pictures of deceased eyes of patients in true natural colours in his hospital for study and diagnosis. It is a delight to see these wonderful pictures in colour recorded in the cash Diaries of the Hospital. It was also preserved in his

famous library at Thanjavur. Serfoji's court adorned so many 'Vainika Vidwans in Music. Travancore Asthana Vidwan Shetkala Veenai Govindamarar entertained Serfoji and his court. In his court so many expert vainika vidwans such as famous Veena vidwan Kalasti Iyer. Krishna Iyer. Sankarabharana Narasayya. Irumbukkadalai Venkatarammaiya, Pallavi Gopala Iyer and Bhagaraga Venkatasubbiar. Hindustan Musicians Ramadoss, Gnanam Krishna Iyer and Gopalakrishna adorned his court at Tanjore.

## RAJAH SERFOJI'S SHIP-BUILDING ACTIVITIES

Rajah Serfoji conceived the idea of building a shipping trade in his own territory since the other parts of Nagapattinam. Tranquebar, Tirumalaivasal were in the hands of the British. Salavannayakam Pattinam latter named as 'Sarabhendrarayan Pattinam' which is ten miles south of Pattukkottai on the sea coast and was prominently suited for a Port. In this sea coast he had already erected in the year 1814 a smallbut formidable sea fort with regula betterments, Ramparts, Gun emplacements moat all around the Drawbridge to enter the fort and a Central tower called 'Manora' with eight stories. From the year 1820 as could be seen from the records in modi section of the library. the ships built was equipped in this port carried on coastal trade to places like Nagapattinam Thirumalaivasal, Tranquebar, Kodiyakkarai. Madras, Keraal ports and Colombo. In his shipping yard. ships of 2 masts to 4 masts were built and they were given Indian names like Sambu-Prasad. Ram-Prasad. Siva-Prasad Ganesh-Prasad, Gajalakshmi etc. The slow process of conversion of the Fort into a sea port started from the year 1820 as could be seen from voluminous records available in the Modi sections of the library. They are in the form of several books or Registers numbering over 85. There are records to show that four ships were built on the 8th January 1826 26th February 1826. 22nd May, 1826. and July 29th 1826. vide book No. 80 (Modi section at library) There are many references about ship building project during - Rajah Serfoji's period in Modi records. It is worth under taking research work in this subject and the results to be published by the library authorities.

## CHARITABLE INSTITUTIONS OF RAJAH SERFOJI

Rajah Serfoji performed (Thiruppanis) New Temples and renovated old ones. He built new Vigneswar Sannidhi at Big Temple and celebrated Kumbhabishekam. He built newly Sri Anandavalli Sri Ratnagiriswami Temple and Vittoba Temple in the East Main Street. Thanjavur after his pilgrimage to Kasi and other Kshetrams. He also built the Singapperumal koil at East-Gate and renovated Manikarnikeswarar, Tabir Vijaya Ramaswami temples and Ellaiammankoil at Thanjavur. The Rajahs of Tanjore attached great importance to the institutions of Temples and Chattrams. the Charitable Institutions.



महाराष्ट्राचे बाहेर मराठीभाषा आणि संस्कृतिक पीठिका व तंजावरचे महाराज शरफोजी सरस्वतीमहाल ग्रंथभांडार (श्रीमंत तुळजेन्द्रराजे प्रतापसिंहराजे भोसले छत्रपती) LIFE MEMBER अजीव सदस्य T. M. S. S. M. LIBRARY, तंजावर.

दक्षिण भारताचे सांस्कृतिक पीठिका फार प्राचीन आहे. नवव्याशतकामध्ये चोळराज वंशीयानी तंजावरमध्ये बृहदीश्वर शिवालय उभारवीले. द्राविड शिल्पशैलीचा हा एक फार प्रसिद्धकेन्द्र असून, तेथे पासून हे कलाचे आश्चर्यस्थान झाले आहे. सोळाव्या शतकांत नायकराजानी मंदिरे उभारविली व जुनी परंपरा पुढें चालऊन घेतली. ही उच्छ संस्कृतीक परंपरा जतन करण्याचे काम कालांतराने आले, ते छत्रपतीच्या भोसले घराण्याकडे सुदैवाने आध्य शाहजीराजे भोसले यांचा दुसरा चिरंजीव व्यंकोजी ऊर्फ एकोजी भोसले छत्रपती वंशांतील तंजावरच्या भोसले घरण्याने जतन केलेल्या ग्रंथभांडार हे. महाराष्ट्र व भारतावर एक प्रकार महान उपकार आहेत.

एकोणीसाव्या शतकांच्या प्रारंभी याघराण्याची छत्रपती शरफोजीराजे भोसले यानी चिरंजीव केले आहे, हीच "महाराज शरफोजी सरस्वतीमहाल संग्रहालय", तंजावर.

मराठ्यानी महाराष्ट्राचे बाहेर स्थापन केलेल्या राज्यांत तंजावरचे राज्य वैशिष्यपूर्ण ठरते. ई. स, १७८८ मध्ये तुळजाराजानी अहमदनगर जिल्यांतील विटोजी भोसल्याच्या वंशांतील १० दहावे पीठींतील शाहजी भोसलेयावे चिरंजीव शरफोजी याना दत्तक घेतले. त्यानेच मराठी आणि महाराष्ट्राची संस्कृतिक छाप भारतीय संस्कृतीवर उमटविली. मराठ्याच्या राज्याचा विचार करताना केवळ भौगोळिक सीमामध्ये अडकून चालणार नाही. तर त्या पलिकडील सांस्कृतिक साम्राज्यचा. वेध घ्यावा लागले. कितीतरी राज्य निर्माण झाली आणि खालसाही झाली, पण सांस्कृतिक संपन्नतेने शरफोजीचे नाव अमर झाले. शरफोजीराजे भोसले, लेटीन, जर्मनी, इंग्रजी, फ्रेंच, या पाश्चात्य भाषा उत्तमपणे जाणत होते. आपल्या गुरूच्या निधनानंतर शरफोजीने त्याच्यावर १८०३ मध्ये इंग्रजींत कविता लिहिली होती. त्याना पुस्तक पोथ्या जमविण्याचा छंद होता. "इंग्लंड मधील त्या कालातील प्रकाशन व्यवसायासी करार केलेल्या मध्ये ईगणाच बादशाहा, इंगलंडचाराजा, अमेरिकाचा

प्रमुख आणी तंजावरचा शरफोजी भोसले या जगातील चारच ग्राहकाचा कायम ग्राहक म्हणून समावेश होता. प्रकाशित होणाच्या प्रत्येक पुस्तकाच्या पहिल्या आवृत्तीची प्रत त्याना येत असे. शरफोजीने जमा केलेल्या संस्कृतग्रंथाची ससंदर्भ सारसूची तयारकेली. तेव्हां त्यांचे बाराखंड झाले. लाड बायरन आणि शेक्सपियर याच्या साहित्यांवरील त्या काळातील तज्ञांत शरफोजी राजाच्या क्रमांक फार वरचा होतो". असे ज्येष्ट इतिहासकार श्रीसेतुमाधवराव पगडीने व्यक्त केले आहेत.

१८०२ मध्ये शरफोजीने धन्वंतरी महाविद्यालय सुरूकेले, व शिक्षण संस्था सर्व भाषीक प्रजासाटी सुरूकेले. मराठीरंगभूमीचे जनकत्वही तंजावरच्या शाहजी महाराज अभिनवभोजानंतर शरफोजीनी लिहिलेल्या ३६ नाटकापैकी १५ नाटके मराठी आहेत.

भोसले घराण्याची माहिती देणारा तंजावरच्या शिलालेख हा भारतांतील सर्वांत मोठा शिलालेख आहे. शरफोजी महाराजाने लिहिलेली आहे. संस्कृत साहित्याची विविध शास्त्राची गोडीलागली. त्यानी कितीतरी ग्रंथ विकतघेतले. कितीतरी ग्रंथाची नक्कल करून घेतली. मराठी संताच्या वाङ्मयाच्या प्रती करवून घेतल्या. शरफोजी महाराज हे स्वत: चांगले शास्त्रज्ञ व लेखक होते. त्याचे काही ग्रंथ आजही उपलब्ध आहेत.

शंबरवर्षापूर्वी तंजावरला डा. बर्नल नावाचे एक इंग्रज गृहस्थ डिस्ट्रिक्ट् व सेषन्स् जड्ज म्हणून आले. शरफोजी महाराजाच्या या संग्रहाचा त्याना फार जवळून परिचय झाला आणि या ग्रंथाची सूची करण्याचे काम त्यानी पत्कारले. डा. बर्नल यानी, "जगांतील एकमेवाद्वितीय व अत्यंत महत्वाचे संग्रहालय" अशा शब्दांत या ग्रंथालयाचे वर्णन केले आहे. त्याची किमंत पन्नास हजार पौंड् आशी करण्यांत आली होती.

मद्रास सरकाराने १९१८ मध्ये या संग्रहालयाचा तांबा घेतला. कालांतराने येथे पूर्णवेळ काम करणार संशोधक जमले. ग्रंथालयाचे सविस्तरसूची प्रसिद्ध होऊं लागल्या. कित्येक ग्रंथाच्या आवृत्तीही प्रसिद्धझाल्या सरस्वतीमहाल ग्रंथालयाचे नियतकालीकहीं निघतो.

इ. स. १९१८ श्री भोसलकुल घराण्याचा मंडलीनी एकमताने स्वार्थ त्यागपूर्वक या स्मारकावरील आपली खासगी सत्ता सदक्षिणाक सतांबूल असे १०००००/लाख रूपयाच्या देणगीसह ध्वारादत्त करून लोकोपयोगार्थ मद्रास सरकारच्या परिपालनास निरखून दीली.

शरफोजीने केलेल्या हा सरस्वतीमहालाचा प्रपंच, केवळ याना द्रव्याची अनुकुलता होताम्हणूनच शक्यझाला. असे मंटलेतर ते अन्यायाचे होईल. तंजावरमध्ये शरफोजी याचा ज्ञानलालसेचे अनेक दंतकथा प्रचलित आहेत. त्यापैकीच झाल्यावर एक दरबारच्या विद्वानाने त्याना विकत देण्यासाठी एक दूर्मिळत हस्तलिखित आपले होतेते पाहून त्याचे महत्व पटल्यावर कोणच्याहीं कारणाने त्या पुस्तकाचे मोल कामीकरणे शरफोजीना जीवावर आले. शेवटी त्यानी मागच्यां पुढच्या विचार न करतां आपल्या गळयांतील मैल्यवान हार त्या विद्वानाच्या हाती ठेवला. आणि ते हस्तलिखित हस्तगत केले.

दुसरी एक अभिनंदनीय गोष्ट हीकी, तंजापुरींत मराठी राज्याची उदय होऊन अस्तमान झाल्यापावेतो जी मध्यंतरीची दोनशेवर्ष काळांत इकडील मराठी ग्रंथकारानी आपल्या काव्यांत संस्कृता शिवाय इतर कोणत्याहीं परभाषेला शिरकाव न देता स्वभाषेची शुद्धता कायम राखिली आहे. राजकीय व्यवहारांतमात्र आरभी फार्शी इत्यादि शब्द वाक्य आडलतात. काव्यांत बिलकुल भाषा संस्कार नाही. तंजावराच्या भोसले घराण्याने जतन केलेला ग्रंथभांडार हे महाराष्ट्र व भारतावर एक प्रकार महान उपाकार आहेत. तंजावरची हीं राजकीय कारकीर्द काळाच्या ओघात कधीच संपुष्टांत आली होती. पण महाराज शरफोजी याचा सरस्वतीमहाल ग्रंथसंग्रह म्हणजे १५०० सुमारा पासून तात्कालीन मराठे राजघराण्यानी बहुत परिश्रमाने मिळवलेल्या राज्यलक्ष्मीचे आद्वितीय स्मारक होय. हा ग्रंथ भांडाराचें मराठीग्रंथ संपत्ती टिकवण्यास जतन करण्यासाटी महाराष्ट्र शासनाने पुढाकार घ्यावा हे माझी महाराष्ट्र शासनास नम्रपूर्वक विनंती आहे. महाराष्ट्र सरकाराशिवाय आपल्या मायबोलीतील अमूल्य ठेवा जतन करण्याचे महाराष्ट्र सरकाराशिवाय दुसरा करणार तरी कोण !



மன்னர் சரபோஜியின் சலவைகற் சிற்பம்

மன்னர் சரபோஜியின் புகழ்பாடும் சரபேந்திர பூபாலக் குறவஞ்சி எனும் தமிழ் இலக்கியத்தைப் பதிப்பித்த —**தமிழ் தாத்தா உ. வே. சாமிநாதய்யர்** அவர்கள் மன்னரின் வரலாறு கூறுகின்றார்.

# தஞ்சை சரபோஜி மன்னர் சரித்திரம்

*சரபேந்திர பூபால குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவரான* **சத்ரபதி ராஜஸ்ரீ சரபோஜி**, *தஞ்சைமா நகரத்தை ஆண்ட மகாராஷ்டிர மன்னர்களில் ஒருவர், இவர் தஞ்சையை அரசாண்ட காலம் கி. பி. 1798 முதல் கி. பி. 1832 வரையிலாகும்.*

*இவருடைய குலம் [1]போசலகுலம் (சர, குற. 2) என்று கூறப்படுகின்றது. அப்பெயர் இன்ன காரணத்தால் அமைந்ததென்று தெரியவில்லை. மகாராஷ்டிர நாட்டை ஆண்டுவந்த கொற்றவேந்தராகிய சிவாஜி* (Shivaji the Great) *மன்னருடைய சகோதரரும் வெங்காஜி என்று வழங்கப்பட்டவருமாகிய ஏகோஜி யென்பவர் தஞ்சையில் [2]கி. பி. 1674-இல் மகாராஷ்டிர அரசை நிறுவினர். அக்கால முதல் தஞ்சையரசை மகாராஷ்டிர மன்னர்கள் ஆளத் தொடங்கினர். ஏகோஜிக்குபின் ஆண்ட மன்னர்களுள் துளஜாஜி யென்பவருக்குப் பிள்ளையின்மையின் அவர் சரபோஜியை ஸ்வீகாரம் செய்து கொண்டனர். அப்பொழுது அவரால் இடப்பட்ட பெயரே சரபோஜி யென்பது. மகாராஷ்டிர மன்னர்களுள் இவருக்கு முன் மூன்று அரசர்கள் இப்பெயரையுடையவர்களாக இருந்தமையின் இவர் சரித்திர ஆராய்ச்சியாளர்களால் [3] நான்காம் சரபோஜியென்று குறிக்கப்படுவார்.*

*இவர் துளஜாஜியின் புதல்வரென்று இந்நூலுள்ளும் கூறப்படுவர். (சர. குற. 9) திருவாதிரை நட்சத்திரத்தில் உதித்தவரென்று இந்நூல் கூறும். (சர. குற. 47.)*

---

1 இது போஸ்லே (Bonsle) எனவும் வழங்குமென்று தெரிகின்றது; See 'History of the Mahratta people' by Kincaid and Parasnis, Vol. II, p. போன்ஸ்லே என்றும் வழங்கும்.

2 The Gazetteer of the Tanjore District. Vol. I.

3 Annual Report of South Indian Epigraphy. 1924.

துளஜாஜி சரபோஜியை ஸ்வீகாரம் செய்துகொண்ட பிறகு இவரைத் தஞ்சை ரெஸிடெண்டாக இருந்த ஒருவரிடம் ஒப்பித்தார். அப்பொழுது அவரிடம் இவர் ஒப்பிக்கப்பட்டதை விரும்பாத சிலர் துளஜாஜியின் காமக் கிழத்தியினுடைய புதல்வராகிய அமரஸிம்ஹ ரென்பவரை மன்னராக்க முயன்றனர். கிபி. 1786-இல் துளஜாஜி இறந்துபோகும் சமயத்தில் அவர்கள் செய்த சில தந்திரங்களினால் அமரஸிம்ஹர் 1787-இல் அரசரானார்.

அக்காலத்தில் தஞ்சையிலிருந்த ஸ்குவார்ட்ஸ் (The Rev. Schwartz) என்னும் பாதிரியார் சரபோஜியே அரசுக்குரியவரென்பதையறிந்து அவ்வுரிமைக் குரிய நியாயங்களைக் கிழக்கிந்தியா கம்பெனியின் நிருவாக சபையாருக்கு (Court of Directors) எடுத்துரைத்தனர். அவற்றின் உண்மையறிந்த அச்சபையார் 1798-இல் சரபோஜியையே அரசராக்கினர். சரபோஜி அரசியலைக் கைக்கொண்ட பின்னர் தம் ஆட்சி உரிமையைக் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கே கொடுத்துவிட நினைத்தார். அவ்வாறே அரசை 1799-இல் ஒப்பித்தார். தஞ்சைக் கோட்டையின் உரிமையொன்றுமே இவர்பால் இருந்தது. கம்பெனியாரிடமிருந்து [1]உதவி நிதி பெற்றுவந்தார்.

தாம் அரசியலைப் பெறாமல் இருந்த இடைக்காலத்துச் சரபோஜி, சென்னை நகரத்தில் பாதிரிமார்களின் ஆதரவில் இருந்தார். அக்காலத்து அவர்களுடைய உதவியினால் ஆங்கிலமொழிப் பயிற்சி பெற்றார். அரசாளும் பாரத்தைக் கம்பெனியாரிடம் கொடுத்துவிட்ட சரபோஜி கல்வி விநோத வகையிலேயே தம் காலத்தைப் போக்கிவந்தாரென்று தெரிகிறது. சங்கீதம் வைத்தியம் முதலிய பல கலைகளில் இவர் நல்லறிவுடையவர். "பல கலைகள் உணர்ந்த தஞ்சைச் சரபோஜி" (சர. குற. 45.)

பெரிய புத்தகசாலையொன்றை அமைத்து அதில் தமிழ், தெலுங்கு, வடமொழி, மகாராஷ்டிரம் முதலிய பல மொழிகளிற் பல அச்சுப்புத்தகங்களை யும், ஏட்டுச் சுவடிகளையும் தொகுத்து வைத்தார், அது **ஸரஸ்வதி மகாலென** வழங்கும். அப்புத்தகசாலையில்[2] 22,000 நூல்கள் இருந்தனவென்று கூறுவர். பல அருமையான ஓவியப் படங்களைத் தொகுத்துத் தம் அரண்மனையை அலங்கரித்தார். ஒரு சிறிய அச்சு யந்திர சாலையை வைத்திருந்தார், அதில் தேவநாகர எழுத்தச்சுக்களும் இருந்தன. ஒரு சிறிய காட்சிச்சாலை (Museum)யை அமைத்து அதிற் பலவகை நாணய முதலியவற்றைத் தொகுத்து வைத்தனர். இவர் குதிரையின் இலக்கணங்களை அறிந்தவர். பல உயர்ந்த

---

1 ஒரு லக்ஷம் பொன்னும் நிலவரியில் ஐந்திலொரு பங்கும் பெற்றதாகக் கூறுவர்; 'The Maratha Rajas of Tanjore' By Mr, K, R, Subramanian, M.A., p. 72.

2 Ibid, Page-73.

சாதிக் குதிரைகளை வைத்துப் பாதுகாத்து வந்தார். "பரிக்காம னகுல னெங்கள் சரபேந்திர பூபதி" என ஒரு புலவர் கூறுதல் காண்க. பல வித்துவான்களை வருவித்து வைத்து அவர்கள் கல்விப் புலமையை அறிந்து இன்புற்று வந்தார். இவர் காலத்தில் பல தமிழ், வடமொழி வித்வான்களும் சங்கீத வித்வான்களும், வைத்திய சிரேஷ்டர்களும் தஞ்சை அரண்மனையிற் கவலையின்றி இருந்து வந்தனர். ஆரோக்கியசாலை ஒன்றை நிறுவி, அதிற் பல வைத்தியர்களை அமைத்து யாவருக்கும் வைத்தியம் செய்யுமாறு செய்தார்.

"மதமுகவ நம்பியறு முகவன் கந்தன்
மலர்ப்பாதந் தனைப்போற்றி வைய கத்தோர்க்
கிதமுறவென் றாரோக்ய சாலையொன்றை
யேற்படுத்தி முன்முனிவர் சித்தர் யோகர்
பதமுறவே சொல்லியநூல் தம்மை யெல்லாம்
பார்த்துணர்ந்து நாடோறும் சரப பூபன்
முதல்வனிச்ச யித்தபடி சிரோரரோ கந்தான்
மொழியவயன் றேவிகலை வாணி காப்பாம்"

(சரபேந்திரர் வைத்தியம்)[2]

இவர் வைத்தியர்களையும் தமிழ்ப் புலவர்களையும் கொண்டு அனுபவ வைத்திய முறைகளைச் செய்யுள் நடையிற் பாடச்செய்து தொகுப்பித்து வைத்தார். அவ்வாறு தொகுக்கப்பெற்ற நூல்கள் பல "சரபேந்திரர் வைத்தியம்" என்னும் பெயரோடு உள்ளன. இவ்வாரோக்கியசாலையில் ஜயாக்கண்ணு பிள்ளை என்னும் வைத்தியர் தலைவராக இருந்தாரென்று தெரிகின்றது. வைத்திய நூல்கள் இயற்றினவர்கள் இக்குறவஞ்சி நூலாசிரியராகிய சிவக்கொழுந்து தேசிகர், திருவேங்கடத்தாபிள்ளை, காரைக்குறிச்சி வேலாயுத உபாத்தியாயர், வேங்கடாசலம் பிள்ளை, சுப்பராயக் கவிராயர் முதலியோர்.

இவருக்கு முத்தாம்பாள் என்ற ஒரு காமக்கிழத்தி இருந்தாள். அவள் இரண்டு பிள்ளைகளை வைத்துவிட்டு இறந்தனள். அவள்பால் மிக்க அன்புடைய இம்மன்னர் அவள் பெயரால் சத்திரம் முதலிய தருமங்களைச் செய்தார், அச்சத்திரம் முத்தாம்பாள் சத்திரம் (ஒரத்தநாடு) எனப்படும். ஸ்குவார்ட்ஸ் பாதிரியார் இறந்தபின்பு அவர்பாலுள்ள அன்பினுல் தஞ்சைக் கோட்டைக்குள்ளேயுள்ள சிவகங்கைக் குளத்துக்கருகில் அவருக்கு ஒரு ஞாபகச் சின்னம் கட்டினார். ஆங்கிலேயர்பால் தமக்குள்ள நன்றியறிவிற்கு அறிகுறியாக, சேதுபாவா சத்திரம் சாளுவ நாயக்கன் பட்டணம் என்னும்

2 Ms, No, 57 of the The Tanjore Sarasvati Mahal Library.

இரண்டிடங்களில் இரண்டு கோபுரங்கள் கட்டினார், அவை ஒவ்வொன்றிலும் நெப்போலியன் 1815-இல் தோல்வியுறப் பிரிட்டிஷார் வெற்றியுற்றதைக் கொண்டாடும் பொருட்டுச் சரபோஜி மகாராஜரால் கட்டப்பட்டனவென்று எழுதப்பட்டுளது.

முத்தாம்பாள்புரத்தில் சத்திரத்தோடு இரண்டு யாகசாலைகள் கட்டினார். வேறு பல இடங்களில் அறச்சாலைகள் கட்டுவித்தார்.

இம்மன்னர் சிவபக்தி மிக்கவர். இவர்களுடைய குலதெய்வம் சந்திர மௌலீசுவரர் (சர. குற. 2)

"சித்தபரி சுத்தருக்குத் தேறுசிவ பத்தருக்குச்
சத்துவ குணத்தருக்குத் தண்மதி முகத்தருக்கு" (சர. குற. 4)

"செஞ்சுட ருதிக்குமுன் னெழுந்து புனல்படிந்து
திருநீறணிந்து ருத்திராக்ஷ மணி பூண்டு
நெஞ்சினி லெழுமன்பி னோடு சந்திவந்தனம்
நிலைதரு சிவபூஜை புரிகுவ ருடணாண்டு" (சர. குற. 27)

என்பவற்றால் இவருடைய சிவபக்தி புலப்படும். பிரகதீசுவரர் கோயிலில் உள்ள *விநாயகர் கோயிலைச் செப்பம் செய்து கர்ப்பக்கிருகமும், அர்த்த மண்டபமும், மஹாமண்டபமும், பிறமண்டபங்களும் கட்டுவித்தார். உள் பிரகாரத்தைச் சுற்றிக் கல்தள வரிசை போடச்செய்தார். பழைய விநாயக விக்கிரகத்தை எடுத்துவிட்டுப் புதிய விக்கிரகமொன்றைப் பிரதிஷ்டிப்பித்தார், பெருவுடையாருக்கு வெள்ளி ரிஷபம் செய்துவைத்தார்.

"புள்ளிமயில் வாகனனை யீன்றிடுங் கடவுள்பரி
பூரணவல் லாச வாசர்
பொருந்துசுரு திக்குமெட் டாதபெரு வுடையீசர்
பொன்னடி வணங்கி யோங்கி
வெள்ளிரிஷ பஞ்செய்து வைத்தசர போசிதுரை
வேந்தன்"

"சீருறுதென் றஞ்சைநகர்ச் சரபோஜி மன்னன் செழிக்கவருள் சரபேசன் திருபுவனம்" (சர. குற. 41) என்பதனால் இவர் திருபுவனத்திலுள்ள சரப மூர்த்தியை வழிபட்டு வந்தாரென்று தோற்றுகின்றது.

---

*South Indian Inscriptions *420* of *1924*.

இவர் காசிக்கு ஒருமுறை சென்று கங்கையாடி ஸ்ரீ விசுவநாதரைத் தரிசித்து வந்தாரென்று இக்குறவஞ்சி கூறும். "நலனுறு காசி நண்ணியொண் கங்கை, மென்புனல் படிந்து விச்சுவநாதன், தன்பத பங்கயந் தனையெதிர் பணிந்து, வேண்டிய வரங்கள் விருப்புட னேற்று, நீண்டிடு மகிழ்ச்சி நிலவுற வந்தோன்" (9)

இங்ஙனம் தரும சிந்தனையும் சங்கீதம் முதலிய கலைகளில் அன்புங் கொண்டு வள்ளலென்றும் வித்தியா விநோதரென்றும் புகழ்பெற்று விளங்கிவந்த சரபோஜி மன்னர் கர (கி.பி. 1832) வருஷத்திற் பூதவுடம்பை நீத்து இறவாத புகழுடம்பை எய்தினார்,

இவ்வள்ளலைப் பற்றி,

"உசிதவாணர் தரமறி யன்புள்ள
உத்தமன் சரபேந்திரன்"

"உடுத்தநல்ல வஸ்திரபூ ஷணமுஞ்செம்பொன்
உம்பளசம் பளமுடனெந் நாளுமன்னம்
கொடுத்துதவு தருமதுரை தஞ்சையாளும்
குபேரசர பேந்திர மால்"

"அறிவினாலே யறிந்தன்ன வத்திரம்
கொடுக்கு மிங்கித சங்கீத சாகித்திய
குணம்வளர் சரபேந்திரன்"

"வேலைசுற்றும் பூவரைப்பிற் புகழாற்றுஞ் சரபோசி
வேந்தர் வேந்தன்"

"தென்னளகைச் செங்கோன் மனுநீதி
செலுத்தியே வள்ளலி லுயர்ந்த
மன்னர்கோன் சரபேந்திரன்"

"எவ்வுயிருந் தன்னுயிரென் றெண்ணுசர பேந்திரமால்"

எனப் புலவர்கள் மனங்குளிர்ந்து பாராட்டியதற்குக் காரணம் இவர் அவர்களுக்குச் செய்த பேருதவியும் அவர்கள்பாற் காட்டிய அன்பும் என்பதில் ஐயமில்லை.

இவருக்குப்பின் கர ஹூ பங்குனி மீ இவருடைய குமாரர் சிவாஜி மகாராஜர் தஞ்சை நகரத் தலைமையை மேற்கொண்டார்.

—நன்றி : கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய
பிரபந்தங்கள் — உ. வே. சா. பதிப்பு 1932

" That was just the time when the great patron of Music and Dance Raja Serfoji II ascended the throne " —Dr. R. NAGASAMY writes about the valuable collections of the British Museum, and the Victoria and Albert Museum in London.

# Thanjavur Natya on Canvas

The British Museum, London and the Victoria and Albert Museum, South Kensington ( London ) preserve a good collection of Indian Art, either deposited or bequeathed by British Officers who served in India in the 18th or 19th Century A. D. During my recent visit to London, the Museum authorities opened up their reserve collections for me to make a special study. The India Office Library has also an impressive collection of South Indian paintings, but I could not make a study of the same.

In the late 18th Century, Europeans serving in India evinced great interest in the life style and costume of the people and specially commissioned artists to paint men and women of different castes and professions. Many albums containing such paintings exist in European Museums and one such album in the collection of Victoria and Albert Museum, carries about sixty paintings. I am certain that this particular album was painted in Tanjore by the artists of the Mahratta Court, for some of the pictures carry labels written either in Tamil, Telugu, Nagari of Modi script. From the records available it is seen that such paintings reached the Museums, before 1840's and were probably painted around 1800 A. D. That was just the time when the great patron of music and dance, Rajah Serfoji II, ascended the throne.

Two pictures in the collections depicting dance scenes are of great interest to lovers of Indian dance. A Bharatha Natyam dancer wearing traditional dress is shown striking a pose. Six



பரதநாட்டிய நங்கையும், இசைக்குழுவும்



வட இந்திய நாட்டியப் பெண்ணும், இசைக்குழுவும்

musicians stand behind her playing different musical instruments. The musicians wear dhoti in Kacham, Jippas and Maharatta headgear. One plays a maddalam, the other a violin and the third a flute. Two men playing the cymbals were obviously the Nattuvanars. The sixth plays on a bag-pipe, which was called Tutti. At the rear stand two dancing girls by the side of their mother. Obviously the picture was intended to depict a contemporary dance. A label beneath the painting in Telugu script, reads Tanjavur Natya. That the violin was an essential instrument in music and dance concerts, as early as 1800 is indicated by the painting.

The costume and jewellery of the dancer, deserve mention. All the three dancing girls wear a long garland across their body from the right shoulder. The Bharata Natya was known as Thanjavur Natya around 1800 A. D.

The other painting depicts a dance scene in altogether a different tradition Three girls in North Indian costume, are shown dancing. Two musicians are shown playing the sarangi, while three others play a tambura, a mirudangam and cymbal. They wear pyjamas, kurta and turban. No label is found in this painting. That it represents the North Indian dance tradition is clear from the both the costume and musical instruments. It is known from the Modi records in the Tanjore Saraswathi Mahal Library that this form of dance was known in Tanjore as Hindustani Natya.

Another painting depicts a temple procession of Lord Siva, with a label in Telugu reading "Siva Devada Parappadu." The procession shows the Pancha Moorthis: Ganesa on a mouse, Subrahmanya with his Consort on a peacock followed by the Somaskanda on Vrushaba (Bull) and Devi on a lion. At the end is Chandikeswara. Ganesa, Subrahmanya and Devi are shown on golden vahanas. There is a large gathering of devotees. Immediately preceding the main deity of Lord Siva are six dancing girls.

— *Courtesy*: The Hindu dated January 4, 1987.

" நூல்களைச் சேகரித்து வைத்துப் பிற்காலத்தவர் பயனடைய வேடுண்ம் என்று நம் முன்னோர்கள் பாடுபட்டனர் " என்று —**ஆடந்தை என். சேதுராமன்** சரசுவதி நூலகங்களின் தொன்மை பற்றி விவரிக்கின்றார்

# பண்டைத் தமிழகத்தில் நூலகங்கள்

இக்காலத்தில் தமிழ்நாட்டில் பல நகரங்களில் நூலகங்கள் ஏற்படுத்தியுள்ளனர். சோழர்கள், பாண்டிய மன்னர்களின் காலங்களிலும் நூலகங்கள் இருந்தன. இவை சரஸ்வதி பண்டாரங்கள் என்று அழைக்கப்பட்டன. பெரும்பாலும் இந்நூலகங்கள் பெரிய கோயில்களிலும், மடங்களிலும் வைக்கப்பட்டிருந்தன. இவைகளில் சிலவற்றைப் பார்ப்போம்.

சோமேஸ்வரர் என்னும் அந்தணர் மூன்றாம் குலோத்துங்க சோழனுக்கு ராஜகுருவாக விளங்கினார். இவருக்கு சுவாமிதேவர் என்ற பெயரும் உண்டு. கி. பி. 1202-ல் கும்பகோணம் அருகேயுள்ள திரிபுவனம் கோயிலைக் குலோத்துங்கசோழன் கட்டினான். அதில் பரமேஸ்வரனையும், பார்வதிதேவியையும் ராஜகுருவான சுவாமிதேவர் என்னும் சோமேஸ்வரர் பிரதிஷ்டை செய்தார். இவர் வேதம், சைவ ஆகமங்களில் வல்லவர். 'சித்தாந்த ரத்னாகரம்' என்ற நூலையும் எழுதியவர்.

குலோத்துங்கனின் மறைவுக்குப் பிறகு அவனது மகனான மூன்றாம் ராஜராஜனுக்கும் சுவாமி தேவராகிய சோமேஸ்வரர் ராஜ குருவாக இருந்தார், இம்மன்னனின் 4-ஆம் ஆட்சியாண்டு கி. பி, 1220-க்கு உரிய சிதம்பரம் கல்வெட்டில் ராஜகுருவாகிய சுவாமிதேவர், தில்லை நடராஜர் கோயிலில் சரஸ்வதி பண்டாரத்தை (நூலகம்) நிறுவினார் என்று சொல்லப்பட்டுள்ளது. பிற்காலத்தில் கி. பி. 1250-ல் முடி சூடிய சடையவர்மன் முதலாம் சுந்தரபாண்டியன் சரஸ்வதி பண்டாரத்தை மேலும் விரிவுபடுத்தினான். சிதம்பரம் நடராஜர் கோயிலில் உள்ள சுந்தரபாண்டியனின் கி. பி. 1263-க்கு உரிய கல்வெட்டு இதனைத் தெளிவாகக் கூறுகிறது. இக்கல்வெட்டுச் செய்தியின் சாரத்தை பார்ப்போம்.

சுவாமிதேவர் செய்வித்த சரஸ்வதி பண்டாரத்தில், பல கிரந்தங்கள் பொத்தகங்களைப் பார்க்கவும், எழுதவும், அவிழ்த்துக் காட்டவும், திவ்விய ஆகமத்தை வாசிப்பிக்கவும், புராணம், சோதிட சாத்திரம் படிக்கவும் எழுதவும்

பணியாளர்கள் மொத்தம் இருபதுபேர் நியமிக்கப்பட்டனர். மேலும் சரஸ்வதி பண்டாரத்தில் முன்பு எழுதிக் கிடக்கிற கிரந்தங்களுக்குப் புதிய படிகள் எடுக்கவும், புதிய கிரந்தங்கள் சேர்க்கவும் நிவந்தங்கள் அளிக்கப்பட்டன. முன்பு சுவாமி தேவரால் எழுதப்பட்ட பொந்தகங்களையும், சித்தாந்த ரத்னாகர நூலையும் ஆராய்வதற்கும் பணியாளர் நியமிக்கப்பட்டனர், ஜீரணமான கிரந்தங்களை (செல்லரித்த சுவடிகள்) மீண்டும் கூடியவரை புதிய ஓலைச் சுவடிகளில் எழுதவும் ஏற்பாடு செய்யப்பட்டது. விக்கிரம சோழன் திருக்கை ஒட்டியில் (திருமுறைகள் ஓதும் இடம்) கிரந்தங்களிலும் தமிழ்களிலும் உள்ள நூல்களை தேசாந்திரிகளுக்கும், வேண்டுவோர்க்கும் எழுதிக் கொடுக்கவும், ஒக்கப் பார்க்கவும் பண்டிதர்கள் நியமிக்கப்பட்டனர். பணியாளர்களுக்கும், பண்டிதர்களுக்கும் நிலங்களும் தரப்பட்டன. நூலகத்துக்கு சுந்தரபாண்டியன் அளித்த இந் நிவந்தங்கள் யாவும் விரிவாக சுப்பரமணிய பிள்ளையார் கோயிலின் வடக்குச் சுவரில் கல்வெட்டவும் உத்தரவாயிற்று. இன்றும் இக் கல்வெட்டு அங்கேதான் உள்ளது. வேறு ஒரு கல்வெட்டு, சுந்தரபாண்டியன் தனது அண்ணன் பெயரால் விக்கிரம பாண்டிய ஈஸ்வரமுடையார் கோயிலைக் கட்டினான் என்றும், அண்ணன் பெயரில் இருந்த அகரத்து பிராமணர்களில் சிலர் சரஸ்வதி பண்டாரத்தின் பணி மக்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. (இவ்வகரம்தான் சிதம்பரம் அருகே உள்ள இன்றைய புவனகிரி)

கி. பி. 1256 முதல் 1290 வரை போசள மன்னன் வீரராமனாதன் ஆட்சி புரிந்தான், இவனது அவைக்களத்தில் பால பள்ளி நீலகண்ட நாயக்கர் என்னும் அறிஞர் இருந்தார். இவர் ஸ்ரீரங்கம் கோயிலில் சரஸ்வதி பண்டாரத்தை நிறுவினார் என்று ஸ்ரீரங்கம் கல்வெட்டு கூறுகிறது "ஸ்வதிஸ்ரீ பால பள்ளி நீலகண்ட நாயக்கர் செய்வித்த இந்த சரஸ்வதி பண்டாரத்துக்கு ஸேஷமான இத் திருமண மண்டபத்து இவர் எழுந்தருளிவித்து, திருப்பிரதிஸ்டை பண்ணி, திருவாராதனம் கொண்டருளுகிற, ஹயக்கிரீவநாயனாருக்கும் சரஸ்வதி தேவிக்கும் ஸ்ரீவேதவியாஸ பகவானுக்கும் திருஆராதனத்துக்கும், அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட விஞ்சனங்களுக்கும். உடலாக நூறாயிரம் காசு ஸ்ரீபண்டாரத்தில் (கஜானா) சேர்க்கப்பட்டது என்றும், இதிலிருந்து வரும் வட்டியால் சரஸ்வதி பண்டாரத்தை நடத்திவர வேண்டுமென்றும் சொல்லப்பட்டுள்ளது. ஸ்ரீரங்கம் கோயிலில் மூன்றாம் பிரகாரத்து திருப்பணியார அறைக்குப் பக்கத்தில் உள்ள அறையில் பண்டாரம் இருந்தது.

திருநெல்வேலி அருகேயுள்ள சேரன்மாதேவி அப்பன் கோயிலில் உள்ள முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டு சுவையான செய்தியைத் தருகிறது. கச்சிக்குவாச்ச பாண்டிய பிரம்மாதிராயர் என்பவர் துவாராபதி அப்பன் கோயிலில் சரஸ்வதி பண்டாரத்தை நிறுவினார் என்றும் சரஸ்வதி பண்டாரத்தை நிர்வாகம் செய்வதற்காக ஊர்சபையினர் இரண்டு மா நிலங்களை இறையிலியாகத் தந்தனர் என்றும் கூறப்பட்டுள்ளன.

காஞ்சிபுரம் அருளாளப் பெருமான் கோயிலில் காணப்படும் கல்வெட்டு விஜயநகரமன்னன் கம்பண இடையாருக்கு உரியது. இதன் காலம் கி. பி. 1359 சித்திரை மாதம் 5-ஆம் தேதி இரவு 7 மணி, கல்வெட்டை மன்னன் எழுதுவித்தது போன்று இல்லாது அருளாளப் பெருமானே ஆணையிட்டது போன்றுள்ளது.

"திருமுகப்படி ஸ்வஸ்திஸ்ரீ ஹஸ்திகிரீஸஸ்ய தேவ தேவஸ்ய சாசனம்", என்று துவங்குகிறது. சாசனத்தின் சுருக்கமான செய்தியைப் பார்ப்போம்.

"அருளாளப் பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவி நாச்சிமாரோடு எழுந்தருளி நம்மாழ்வாரின் திருவாய்மொழி பாட்டைக்கேட்டு மகிழ்ந்திருக்கும் சமயத்து கோயில் அதிகாரிகள், மற்றும் பக்தர்களின் வேண்டுகோள்படி அருளாளப் பெருமாள் ஆணையிட்டார். இதன்படி அறிஞரான வைஷ்ணவதாசருக்குப் பிரஹ்மதந்தர சுவதந்திர ஜீயர் என்ற பட்டத்தை அருளாளப் பெருமாள் கொடுத்தார், ராமானுஜ தர்சனம் நடக்கைக்காகவும். பொஸ்தகங்களும் இதற்கு வேண்டிய உபகரணங்களும் பாதுகாக்க ஒரு மடமும் கொடுத்து அருளினார்." இதில் கூறப்படும் பிரஹ்மதந்த்ர சுவதந்திர ஜீயர் என்பவர் ஸ்ரீ வேதாந்த தேசிகரின் முதல் சிஷ்யர் ஆவார். ஜீயர் சேகரித்த நூல்களை வைப்பதற்காக அளிக்கப்பட்ட மடம் ஒரு நூலகமாக, காஞ்சிபுரத்தில் திகழ்ந்தது.


அக்காலத்தில் கோயில்களிலும் மடங்களிலும் நூலகங்கள் இருந்தன இக்காலத்திலும் சங்கரமடம், தருமை ஆதீன மடம், திருவாவடுதுறை மடம், ஆகிய இடங்களில் பழைய ஓலைச் சுவடிக்ள் உள்ளன, நாயக்கர் மற்றும் மராட்டியர் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட நூலகம் இன்று சரஸ்வதி மகால் என்ற பெயரில் தஞ்சையில் உள்ளதை யாவரும் அறிவர். இங்கு அரிய ஓலைச் சுவடிகள் ஆயிரக்கணக்கில் உள்ளன. வெளிநாட்டுப் புத்தகங்களும் உள்ளன. நூல்களை சேகரித்து வைத்து பிற்காலத்தவர் பயனடைய வேண்டும் என்று நம் முன்னோர்கள் பாடுபட்டனர். அவர்களது அடிச்சுவட்டை நாமும் பின்பற்றுவோம்.

— நன்றி : தினமணி, ஜுலை 21, 1989.

ஸ்ரீ தியாகப்பிரம்மம்

தொன்மையான ஓவியம்





மோடி ஆவணம்

சரபோஜி மன்னரின் காலத்தில் திருவையாற்றில் வாழ்ந்தவர் ஸ்ரீ தியாகப்பிரம்மம். தஞ்சாவூர் மராத்திய அரசோடு அவரது இசை மரபுக்கும், அவரது முன்னவர்களுக்கும் உரிய தொடர்பு பற்றி **—குடவாயில் பாலசுப்ரமணியம்** விவரிக்கின்றார்.

# ஸ்ரீ தியாகப்பிரம்மம் போற்றிய இசை மரபு

சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு திருவையாற்றில் வாழ்ந்து கி. பி 1847-ம் ஆண்டு புஷ்ய பகுள பஞ்சமியன்று மறைந்த ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள், கர்நாடக இசை வடிவாகவே இன்றும் நம்மோடு இருந்து வருகிறார். அம் மகானது வாழ்க்கை வரலாறு பற்றிப் பல நூல்கள், கதைகள் வெளிவந்த போதும், பெரும்பாலும் வரலாற்று உண்மையோடு ஆய்ந்து எழுதப்பெற்றவை வெளிவரவில்லை. சிலர் அவர்மீதுள்ள மிகுந்த பக்தி உணர்வால், சில கதைகளைப் புனைந்துமுள்ளனர்.

ஸ்ரீ சுவாமிகள் குறிப்பிடும் ''கிரிராஜ சுதா தனய'' என்ற வரிகளை மட்டுமே ஆராய்ந்த பலர், சுவாமிகளின் தந்தை வழிப் பாட்டனார் கிரிராஜ கவி என்றும் குறிப்பிட்டனர். ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் மூதாதையர்கள் பற்றி வரலாற்றுச் சான்றுகளோடு ஆராய்வதும், சுவாமிகளின் கவிதா ஆற்றலுக்கும், இசைக்கும் காரணமான அவரது குடும்ப முன்னவர்கள் மற்றும் அவர்களோடு தொடர்புடைய பெரியவர்கள் யார் என்பது குறித்தும் ஆராய்வதே இக் கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

### இரு முக்கிய ஆவணங்கள் :

1988-ம் ஆண்டு டாக்டர் இரா. நாகசாமி தஞ்சாவூரில் உள்ள வி. நாராயணசுவாமி அய்யர் என்ற பெரியவரின் இல்லத்திலிருந்து சில மராத்திய மன்னர் காலத்து ஆவணங்களைப் பெற்று ஆராய்ந்து பல உண்மைகளை வெளிக் கொணர்ந்தார். அவர் ஆய்ந்த பல ஆவணங்களுள் இரண்டு முக்கியமான வரலாற்றுச் சான்றுகளாகும். இவை சகம் 1657 ராக்ஷச வருஷம், புஷ்ய மாதம், திரயோதசி அன்று (கி. பி. 1735 டிசம்பர் முப்பதாம் நாள்) அளிக்கப்பெற்றதான பத்திரங்களாகும். இவை மோடி என்ற மராத்தி லிபியிலும், சில வரிகள் மட்டும் நாகரியிலும் எழுதப் பெற்றுள்ளன,

இரண்டாம் ஏகோஜியின் மனைவியான சுஜானாபாய் அளித்த அறக் கொடைகளே இவ்வாவணங்கள். தன் கணவர் பெயரால் மகிமாலய வீர சோழன்பேட்டைக் கருகில் தீபாம்பாள்புரச் சாலையில் ஏற்படுத்தப்பெற்ற ஏகமகாராஜாபுரம் எனும் கிராமத்தில் 87 வேலி 3.5 மா நிலத்தைப் பேஷ்வா ஒருவரிடம் அளித்துச் சிவன்கோயில், விஷ்ணுகோயில், பாடசாலை தபோவனம், அந்தணர்களுக்கு வீடுகள், பசுக்களுக்குப் புல்வெளி போன்றவை ஏற்படுத்தவும், இதில் முக்கால் வேலி நன்செய்யாக கோபாலபட்டர் பேரனும் அகோபல சாஸ்திரியார் மகனும், பாகவதமேளா விற்பன்னர் கிரிராஜ கவீஸ்வரருக்கு அளிக்கப்பெற்றதாகக் கூறுகிறது. மற்றொரு ஆவணம், முதல் ஆவணம் போன்றே அனைத்துச் செய்திகளுடன் இறுதியாக அகோபல சாஸ்திரிகள் பெயரனும் வேங்கடகிரி கவியின் புதல்வருமான வெங்கடேச கவிக்கு அளிக்கப்பெற்ற நிலம் பற்றி விவரிக்கின்றது. இதில் வெங்கடேச கவி லோகித கோத்ரம், தர்ப குலம், ஆபஸ்தம்ப சூத்திரம் என்றும் குறிக்கப்பெற்றுள்ளது. இவ்வாவணங்களில் மராத்திய அரசு இலச்சினையும் பொறிக்கப்பெற்றுள்ளது.

இரண்டாம் ஆவணத்தில் குறிக்கப்பெறும் வெங்கடேச கவியின் தந்தையான வேங்கடகிரி கவி, முதல் ஆவணத்தில் குறிக்கப்பெறும் கிரிராஜ கவியின் தம்பியாவார். இவர் எழுதிய அபிநய தர்பணம் எனும் தெலுங்குச் சுவடி நூல் தஞ்சை அரண்மனை நூலகத்திலுள்ளது. இதில்தான் லோகித கோத்ரம், தர்பகுல ஆபஸ்தம்ப சூத்திரம் என்று குறிப்பிட்டு, தன்னுடைய சகோதரர் கிரிராஜ கவியைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். எனவே இரண்டு சகோதரர்களும் ஏகோஜிமகாராஜபுரத்தில் பாகவதமேளா சம்பிரதாயத்திற்காகவுப், இசையுடன் கூடிய கவிதை ஆற்றலுக்காகவும் அரசு மானியங்களைப் பெற்றனர்.

சிறந்த வாக்கேயகாரராகவும், பாகவதமேளா விற்பன்னராகவும் திகழ்ந்த கிரிராஜகவி, தஞ்சை மன்னன் ஶாஹஜி, அவர் தம்பி முதல் சரபோஜி, அவர் தம்பி துளஜா, அவர் மகன் ஏகோஜி எனும் பாவா சாஹிப் ஆகிய நான்கு மன்னர்களிடமும் அவைக்கள வாக்கேயக்காரராகத் திகழ்ந்தார். கிரிராஜகவிக்கு ஒரே மகள் சீதாலக்ஷ்மி ஆவார். அவர் திருவாரூர் ராமப் பிரம்மம் என்பவரை மணந்தார். இத்தம்பதிகளுக்கு மகவாய்ப் பிறந்தவரே ஸ்ரீ தியாகப்பிரம்மம் ஆவார், ராமப்பிரம்மம் மராத்தியர் அரண்மனையில் ராமகாதை விரிவுரை நிகழ்த்தியவர். எனவே ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளுக்கு கிரிராஜகவி தாய்வழிப் பாட்டனார் என்பது தெளிவாகிறது. மேலும், கிரிராஜகவியின் தம்பியான வேங்கடகிரிகவியின் வழித்தோன்றல்கள் மரபில் தோன்றியவரே. இக் கட்டுரையில் குறிக்கப்பெற்றுள்ள நாராயணசுவாமி

அய்யர் ஆவார். அப் பெரியவரே இவ்வாவணங்களையும் ஸ்ரீ தியாகப்பிரம்மத்தின் முன்னவர்கள் பற்றிய பல செய்திகளையும், பிற சான்றுகளையும் தொகுத்து வைத்துள்ளார்.

கிரிராஜகவி தனது இல்லத்தில் பூஜைசெய்த ராமபிரானின் பஞ்சாயதன மூர்த்தி விக்கிரகங்களை (சுமார் 6 அங்குல உயரம்) தனது மகள் சீதம்மாளுக்கு அளிக்க அவையேஸ்ரீ தியாகப்பிர்ம்மத்தாலும் பூஜிக்கப்பெற்று பின்னர் அவரது மகள் வழியில் வந்து. தற்போது தஞ்சாவூர் வரகப்பய்யர் சந்தில் உள்ளன, இதே போன்று வேங்கடகிரியின் இல்லத்தில் இருந்த ஸ்ரீராமபிரானின் பஞ்சாயதனமூர்த்தி விக்கிரகங்கள், தற்போது தஞ்சாவூர் வடக்கு வீதியில் உள்ள நாராயணசுவாமி அய்யர் இல்லத்தில் உள்ளன. இவ்விரண்டு பட்டாபிஷேகக்கோல நிலை விக்கிரகங்களும் வடிவமைப்பு, திருமேனி அமைதி, காலம் போன்றவற்றால் நூற்றுக்கு நூறு ஒத்தே திகழ்கின்றன. இவை ஒரே சிற்பியின் படைப்புகள் என்பதை எந்த ஒரு சிற்ப இயல் வல்லுநரும் எளிதில் கூறலாம்.

## பாட்டனார் வழி பேரனுக்கு ...

ஸ்ரீ தியாகப்பிரம்மத்தின் 'நௌகா சரித்திரம்' 'பிரகலாத பக்த விஜயம்' போன்ற படைப்புக்களைக் கூர்ந்து நோக்கும்போது பாகவத மேளத்தின் மணம் வீசுகின்றது. பரதக் கலையின் பாங்குறு வெளிப்பாட்டைச் சுவாமிகளின் சொற்களில் காணமுடிகிறது. முழுவதும் சிருங்காரச் சுவையுடைய நௌகா சரித்திரம் இம்மரபின் அடிப்படையில் உதித்த முத்து என்பதையும் உணர முடிகிறது. தன் தாய்வழிப் பாட்டனார் கிரிராஜகவியின் பாகவத மேளா ஆற்றல், கவித்துவம் பேரனாரிடம் மிளிர்வதும் இயற்கையே.

கிரிராஜகவி லீலாவதி கல்யாணம், சாஹேந்திர சரித்திரம், ராஜமோகனக் குறவஞ்சி,சர்வாங்கசுந்தரி விலாசம் போன்ற அற்புத நூல்களைப்படைத்தவர். இவர் இளம் வயதினராக இருக்கும்போது இவருக்கு முதலில் ஆக்கம் அளித்தவர் ஸாஹஜி மன்னராவார். இவர் அரசராக வாழ்ந்தாரேயன்றித் தன் வாழ்நாள் முழுவதையும் இசை, சாகித்தியங்கள் புனைவதிலும், நாட்டிய நாடகங்களுக்குப் புத்தொளியூட்டுவதிலுமே கழித்தார். ஆயிரத்திற்கும் மேற்பட்ட பத சாகித்தியங்களை எழுதியவர். இம் மன்னருக்கு இசைத் துறையில் உரமூட்டியவர்கள் முத்துக் கவிராயரும், வாசுதேவ கவியும் ஆவர். ஸாஹஜி மன்னர் தமது கவிதை ஒன்றில், வாசுதேவ கவிவாசா சந்துஷ்டாய மங்களம்'' — என்று மங்களம் கூறும் பாங்கிலிருந்தும் 'வாக்கேயகார தநிகி சத்குருஸ்வாமி நீவு' — என்று கூறும் சொற்களாலும் அவரை எவ்வளவு மதித்தார் என்பது புலனாகும். வாசுதேவ கவியின் பல தமிழ்ப் பதங்கள் தெலுங்கு லிபியில் தஞ்சை நூலகத்தில் உள்ளன. இவ்விரண்டு கவிகளினால்

இசை வளம்பெற்ற சாஹஜி மன்னரின் சாகித்யம் புனையும் ஆற்றலும் பிறவும் கிரிராஜகவியை மேலும் மேலும் வளரச் செய்தன, பொருளாதார வசதியை மட்டும் கிரிராஜருக்குக் கொடுக்காமல் புலமையையும் அவருடன் பங்கு கொண்டார் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

ஸாஹஜி, கிரிராஜகவி ஆகியோரின் சாஹித்தியங்கள் மற்றும் கீர்த்தனங்களின் மரபு ஒரே தன்மையுடையவையாய்த் திகழ்ந்தன. இதுவே பின்னர் கிரிராஜரின் வழித்தோன்றலான ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளுக்கும் இயற்கையாகவே ஊற்றெடுத்துப் பாய்ந்தது. இப்பெரியோர்களின் சாகித்தியங்களையும், பதங்களையும், கீர்த்தனங்களையும் ஒப்பிட்டு நோக்கும்போது ஒரே மரபுத் தன்மை (School) தெரியவரும்.

உதாரணமாக ஸாஹஜி மன்னர், ''பாலே கண்ட சசிபாலே பக்தஜன பாலே ஸதத சுபசீலே நித்யானுகூலே மஞ்சுதரசீலே கீர்த்திகுண ஜாலே விசாலே'' என்று பாடுகிறார். ஸ்ரீ சுவாமிகளோ சீலே நனு ரக்ஷிம்பனு ஜாகேலே பரம பாவனி சுகுனே ஜால நதஜன பரிபாலன லோலே கனகமய சுசேலே...'' என்று பாடுகின்றார். இதே போன்று ஸாஹஜி மன்னர். ''வாணி மஜதேக வாணி பல்லவபாணி அலிகுலவேணி ஸைகதஸ்ரேணி தியாக சர்வாணி, சுந்தரேசுராணி ருத்ராணி''—என்று பாடுவது போல ஸ்ரீ தியாகப் பிரம்மமோ ''வாணி விநுத சுகபாணி வரசேஷவேணி லலித கல்யாணி சாம்ப சிவுணி ராணி மாதுல்ய வாணி நம்மிதி பூபோணி'' — என்று பாடுகிறார்.


இதே போன்று கிரிராஜ கவி, ''ஏரா நாதோட சலமேலரா — யட பயானுரா இண்டிகி ராரா தீரா நீ தய மீரா / ஈரா நீ மோவி ஸாஹஜேந்திர ம்ரொக்கேரா'' என்று பாடுவது போல, ஸ்ரீசுவாமிகளோ ''நன்னே லு கோரா ஸ்ரீ ரகுவீரா நன்னே சமேரா'' மேரு ஸமான தீரா — வரத ரகுவீரா'' என்று பாடுகிறார். இதே போன்று ஹெச்சரிகா பாடுவதிலும் பாட்டனாருக்கும் பேரனுக்கும் ஒரே ஒற்றுமை காணப்படுகிறது. பல நூறு கீர்த்தனங்களையும் சாகித்தியங்களையும் ஒப்பிட்டு நோக்கும்போது, ஸாஹஜிராஜா, கிரிராஜா, தியாகராஜா ஆகிய மூவரும் ஒரே மரபைத் தழுவி நிற்பது நன்கு புலப்படும்.

இவற்றையெல்லாம் ஒப்பிட்டு, சுவாமிகளின் படைப்புக்கள் சொந்தக் கற்பனையல்ல என்று கூறுவது தவறாகும். ஏனெனில் ஒரே மரபில் வரும் போது கவிதா தன்மையும் வெளிப்பாடுகளும், இசை நுணுக்கங்களும் அதே மரபின் தாக்கத்தோடு வெளிப்படுவது இயற்கை. இதை மரபுவழி (School) என்று கூறலாம்.

## தொன்மையான ஓவியம்

சுவாமிகளின் ஓவியங்கள் பல இருப்பினும், நமக்குக் கிடைத்துள்ள ஓவியங்களில், குறிப்பிடத் தக்க ஒன்று தஞ்சாவூர் நாராயணசுவாமி அய்யர் இல்லத்தில் வழிபாட்டில் உள்ளது. இது தஞ்சையின் கடைசி மன்னன் சிவாஜி ராஜா காலத்தில் எழுதப்பெற்றதாகும். அவரது அவையில் ஜோதிடராய்த் திகழ்ந்த வீராசாமி ஜோஸ்யர் கிரிராஜசுவாமியின் தம்பியான வேங்கட கிரி கவியின் மகன் வம்சத்தில் வந்தவர். இவர் பூஜித்த அந்த ஓவியத்தில் ராமபிரானின் பட்டாபிஷேகக் கோலம் வெள்ளித் தகட்டில் பதிக்கப் பெற்றுள்ளது. ஒருபுறம் சமர்த்த ராமதாசர் உருவமும், மறுபுறம் கபீர்தாசரின் உருவமும் வண்ண ஓவியமாகத் தீட்டப்பெற்றுள்ளன. வெள்ளி இராம பட்டாபிஷேகக் காட்சிக்குக் கீழாக 2.5 × 2.5 அங்குல சதுரத்தில் ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் உருவம் மிக அற்புதமாக வண்ணத்துடன் காணப்பெறுகின்றது. இவ்வோவியம் ஏறத்தாழ கி. பி. 1860ல் வரையப்பெற்றிருத்தல் வேண்டும். இதுவே நமக்குக் கிடைத்துள்ள சுவாமிகளின் ஓவியங்களில் தொன்மை ஓவியம் என்று கூறலாம்.

---


THE

Justice of the Peace,

AND

PARISH OFFICER.

By RICHARD BURN, LL.D.

LATE CHANCELLOR OF THE DIOCESE OF CARLISLE.

ஆங்கில நூலொன்றில் மன்னர் சரபோஜியின் கையொப்பம், கி. பி. 1822

தாமே ஒரு இசைப்புலவராக வாழ்ந்து காட்டியவர் இரண்டாம் சரபோஜி மன்னர். அவர்காலத்தில் இசைப்புலவர்களாய்த் திகழ்ந்த மாமேதைகள் யாவர் என்பதை இக்கட்டுரையில் தொகுத்துத் தருகிறார் சரசுவதி மகால் தெலுங்குப் புலவர் திரு. **ந. விசுவநாதன்** அவர்கள்.

# இரண்டாம் சரபோஜி மன்னர் காலத்து இசைப் புலவர்கள்

இசைக் கலையை மிக நன்ருகப் பரவச்செய்தவர்கள் தஞ்சை நாயக்க மன்னர்கள் மற்றும் மராட்டிய மன்னர்களென்ருல் அது மிகையாகாது. தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் இசை, நாட்டியம் போன்ற நூல்கள் பெருமளவில் இடம் பெற்றதற்குக் காரணம் இம் மன்னர்களின் முயற்சியே ஆகும். இந்நூல்களின் வாயிலாகத் தென்னக இசைக் கலையின் படிப்படியான வளர்ச்சியைத் தெரிந்துகொள்ள முடிகிறது. மராட்டிய மன்னர்களில் குறிப்பிடத்தக்கவர் இரண்டாம் சகசி மன்னர், பிரதாபசிம்மன், அமரசிம்மன் மற்றும் இரண்டாம் சரபோசி மன்னன் ஆகியோர். இரண்டாம் சிவாஜி மன்னரின் காலத்திலும் பன்மொழிப்புலவர்கள் தஞ்சையிலேயே வாழ்ந்து இசைக் கலைக்காகவே பாடுபட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சகசி மன்னர் க்ஷேத்திரக் கிருதிகளை இயற்றினர். அதற்குப் பின்புதான் மும்மணிகளில் ஒருவரான முத்துசுவாமி தீட்சிதர் க்ஷேத்திரக் கிருதிகளை இயற்றினர் என்பதும் இங்கு எண்ணிப்பார்க்கவேண்டும். தெலுங்கு, மராட்டிய மொழிகளில் சகசி மன்னரின் க்ஷேத்திரக் கிருதிகள் இந்நூலகத்தில் மட்டுமே கிடைக்கின்றன. சகசி மன்னர் காலத்தில் சமஸ்கிருதம், விரஜ பாஷை ( இந்தி ) முதலிய மொழிகளில்கூட இசை உருப்படிகள் மலர்ந்துள்ளன. சகசி மன்னர் காலத்துப் பன்மொழிச் சாகித்தியங்களில் உள்ள சொற்கள், மற்றும் சொல்லாட்சிகளின் தாக்கம் இம்மன்னருக்குப் பிறகுவந்த மும்மூர்த்திகளைப் போன்ற வாக்கேயக்காரர்களின் சாகித்தியங்களில் காணலாம். பல தொன்மை ராகக் கிருதிகளைச் சகசி மன்னர் இயற்றியிருக்கிருர்.

சகசி மன்னர் முதல் துளஜா, பாவாசாகேப், பிரதாபசிம்மன், அமரசிம்மன், இரண்டாம் சரபோசி மன்னர், இரண்டாம் சிவாஜி மன்னர் போன்றவர்களின் காலத்தில் இசை நாட்டிய நாடகங்கள் பல தஞ்சை அரண்மனை

நாடகசாலையின் வாயிலாக மலர்ந்துள்ளன. இந்நாடகங்களில் பல அபூர்வ ராகக் கிருதிகள் இடம் பெற்றிருக்கின்றன. இதன் வாயிலாக ரூபகக் கலையில் இடம்பெற்ற இசைக்கலையின் வளர்ச்சியினை நாம் உணரமுடிகிறது. தஞ்சை அரண்மனை நாடகசாலையில் பாகவதமேளா மற்றும் நட்டுவாங்க மேளத்தார் பங்கேற்றனர். இவ்விரு மேளத்தாராலும் மற்றும் சோழ நாட்டில் ஆங்காங்கே வீற்றிருந்த வாக்கேயக்காரர்களாலுமே இசைக்கலை வளர்ச்சி பெற்றது என்றும் தெரிகிறது.

இரண்டாம் சரபோசி மன்னர் காலத்தில் பல சங்கீத வித்வான்கள் இசைக்கலையில் பேரன்புகொண்டு தஞ்சையில் இக்கலை வளரப் பாடுபட்டனர். சரபோசி மன்னரும் இக்கலைவளரப் பல தொண்டுகள் புரிந்தமையும் காண முடிகிறது. சரபோசி மன்னர் காலத்து இசைப் புலவர்களின் வாழ்க்கை வரலாறு சங்கீத சம்பிரதாய பிரதர்சினி மற்றும் நல்லுரைக் கோவை முதலிய பதிப்பு நூல்களில் கிடைக்கின்றன. எட்டயபுரம் சமஸ்தான வித்துவான் திரு. சுப்பராம தீட்சிதர் மற்றும் தமிழ்க்கடல் திரு. உ. வே. சாமிநாத ஐயர் போன்றவர்களால் இந்நூல்களில் வெளியிடப்பட்டுள்ளன. இத்தகைய இசைப்புலவர்கள்பற்றி இனிக் காண்போம்.

**கனம் கிருஷ்ணையர்:** தமிலும், இசையிலும் ஆற்றல் உடையவர். பல்லவி பாடுதலில் கைதேர்ந்தவர். இவரது சிங்காரப்பதங்கள் கரடுமுரடானவை. வர்ணக்கிரமங்களும், கமகங்களும் நிறைந்து காணப்படும். இவரது இருப்பிடம் உடையார்பாளையம். அந்த ஜமீந்தார் மீதில் இப்புலவர் இயற்றிய பதங்கள் உள்ளன. கனம் கிருஷ்ணையர் திருவையாறு தியாகப்பிரம்மத்தின் சமகாலத்தில் வாழ்ந்தவர். ( சங்கீத சம்பிரதாய பிரதர்சினி பக்கம் 36 )

**பெரிய திருக்குன்றம் கனம் கிருஷ்ணையர் :** உடையார்பாளையம் சமஸ்தான வித்வான். கச்சி ரங்கப்ப உடையார் என்பவர் உடையார்பாளையம் ஜமீந்தாராக இருந்தபோது கனம் கிருஷ்ணையர் உடையார்பாளையம் சமஸ்தான வித்துவானாக இருந்தார். கிருஷ்ணையரின் பாடல்களும், கீர்த்தனங்களும் உண்டென்று திரு. உ. வே. சா. அவர்கள் கூறுகிறார். (நல்லுரைக் கோவை பக். 39 IInd ). கனம் என்ற பட்டப்பெயர் விஜயரங்க சொக்கநாத நாயக்க மன்னரால் ஏற்கனவே இம்மன்னர் காலத்து இசைப்புலவர் கனம் சீனையாவிற்கு கிடைத்துள்ளது என்பதும் இங்கு நினைவுகொள்ளவேண்டும். இந்த இசைப் புலவரின் முத்திரை மன்னரு ரங்க முத்திரையாகும். ( சங். ச. பிர. பக்கம் 11 )

**வீணை பெருமாளையர் :** இவர் தஞ்சாவூர் சமஸ்தான பண்டிதர். வீணை வாசிப்பதில் அசாதாரணமான பயிற்சி பெற்றவர். வீணை காளத்தி ஐயாவின்

வமிசத்தினர். ஆந்திரர். பரம்பரையாகவந்த இசைக்குடும்பத்தைச் சேர்ந்தவர். பலரால் சர்வமானியங்கள் பெற்றவர். கன ராகங்களில் உள்ள தானங்கள் வாசிப்பதில் வல்லவர். இரக்தி ராகங்கள் ஒவ்வொன்றையும் பல நாட்கள் விடாமுயற்சி செய்து கிரமமாக வாசித்துப் பூர்த்தி செய்தவர். அண்டை மாநிலங்களிலுள்ள சமஸ்தானங்களில் வீணை வாசித்துப் பல்லக்கு, ஆபரணங்கள் முதலிய சன்மானங்கள் பெற்றவர். புதுக்கோட்டை அரசர் முன்பாக ஒரே ராகத்தை இருபது நாட்கள் வாசித்து முடித்தவர். அதன் பொருட்டுப் பத்தாயிரம் ரூபாய் சன்மானம் பெற்றவர். பெரியவர்களின் கீர்த்தனங்களில் காணும் சாகித்ய வகைகளை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ராகமாக மட்டுமே வாசித்துக் காட்டுவார். சௌராஷ்டிரம், சாவேரி ராகங்களில் அடதாள தானவர்ணங்களைக் கையாண்டுள்ளார். இந்த தானவர்ணங்கள் எவருக்கும் கிடைப்பதரிது. வீணையில் தாளம் தவருமல் வாசிப்பதில் இவர் வல்லமை படைத்தவர். திரு. முத்துசுவாமி தீட்சதர் அவர்களின் காலத்திலும் வாழ்ந்தவர். இவரது சகோதரர் வீணை நாராயணசுவாமி ஐயர் பெருமாளையர் போலவே யோக்கியதை உடையவர். இவரது சகோதரர் மற்ருெருவர் கொண்டையா என்பவர். சாவேரி ராகத்தில் சுரஜதி செய்துள்ளார். (சங். ச. பிர. பக்கம் 20) வீணை பெருமாளையர் ஆதிப்பையரின் சீடர். (ந. உ. கோ. 37—38).

**பச்சைமிரியன் ஆதிப்பையர் :** உடையார்பாளையம் யுவரங்க உடையார் காலத்தவர். பூலோக கந்தர்வ நாராயணசாமி ஐயருடைய ஆசிரியர். விரிபோணி வர்ணத்தை இயற்றியவர். தெலுங்கர். தஞ்சாவூர் சமஸ்தான வித்துவான். உடையார்பாளைய சமஸ்தான வித்துவாஞகவும் பணியாற்றி பல சங்கீத வித்வான்களுக்கு ஆசிரியராக விளங்கியவர். சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, மகாராஷ்டிரம் போன்ற மொழிகளில் கீர்த்தனங்கள் இயற்றியவர். யுவரங்கப்ப உடையார் மீதிலும் கீர்த்தனங்கள் இயற்றியிருக்கிருர் (ந. உ. கோ. பக்கம் 34—35). ஆதிப்பையரின் பேரன் புதுக்கோட்டை வீணை சுப்பையர், ஆதிப்பையரின் பாடல்களைப் பாடிவந்தார். வீணை கிருஷ்ணையர் என்பவர் ஆதிப்பையரின் மூத்தமகன் ஆவார். ஏழு தாளசுர பிரபந்தம் வீணை கிருஷ்ணையர் இயற்றியிருக்கிருர். பல ஜமீன்தார்களிடம் கிருஷ்ணையர் சன்மானங்கள் பெற்றிருக்கிருர். ஆதிப்பையரின் கிருதிகளில் ஸ்ரீ வேங்கட ரமண முத்திரை இருக்கும் ரக்தி ராகங்கள், தேசீராகங்களில் அக்கிருதிகள் அடங்கியிருக்கும். குறிப்பு: சம்பிரதாய பிரதர்சினி மூலம் ஆதிப்பையர் கன்னடமொழியைத் தாய்மொழியாகக் கொண்டவரென்று தெரிகிறது திரு. உ. வே. சா. அவர்களின் கருத்துப்படி ஆதிப்பையர் தெலுங்கு என்று தெரிகிறது. எனது முடிவு ஆதிப்பையர் கன்னட மொழியைத்தான் தாய்மொழியாகக்கொண்டவர் என்பதே.

**பல்லவி கோபாலையர் :** தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர். தஞ்சை இருப்பிடமாகும், தெலுங்கு மொழியை நன்கறிந்தவர். பாடகர், எவரும் இப்புலவர் முன்பாகப் பல்லவி பாடுவதற்கு அஞ்சுவர். ஆகையால் பல்லவி கோபாலையர் எனும் பட்டத்தைத் தக்கவைத்துக்கொண்டவரெனலாம். அடதாள வர்ணம்,வனஜாக்ஷி எனும் கல்யாணிராக தானவர்ணம் இப்புலவரால் இயற்றப்பட்டதாகும். இத்தாள வர்ணத்தில் கற்பனைகள் அதிகமாகத் தென்படும். கமகம் சுரகல்பனை மிகத் தெளிவாகக் காணப்படும். காம்போதி, தோடி ராகங்களில் உள்ளதுமான அடதாள வர்ணங்களை இவர் இயற்றியிருக்கிறார். இரக்திராக கீர்த்தனைகளும் இப்புலவர் இயற்றியிருக்கிறார். வேங்கட முத்திரை இப்புலவரது கிருதிகளின் முத்திரையாகும். சரபோசி மன்னரது காலகட்டத்தில் வாழ்ந்தவர். (சங். ச பிர. 26)

**பூலோக கந்தர்வ நாராயணசாமி ஐயர் :** தஞ்சையில் உயர்ந்த மதிப்பைப் பெற்றவர். தஞ்சையிலும், உடையார்பாளையத்திலும் போற்றப்பட்டவர். யுவரங்கப்ப உடையார் சமஸ்தான வித்துவானாகவும் இருந்தார். (யுவரங்கப்ப உடையார் பதங்கள் கிடைக்கின்றன) (ந. உ, கோ. பக். 3-34.)

**திருவிடைமருதூர் இராமதாசர் :** மராட்டிய மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர். சமஸ்கிருதம், மராட்டி, உத்தராதி மொழிகள் அறிந்தவர். கர்நாடக இசையிலும், இந்துஸ்தானி இசையிலும் தேர்ச்சி பெற்றவர். சமர்த்த ராமதாசர் மடத்துச் சம்பிரதாயினர். இந்த இராமதாசர் லக்ஷ்மண சுவாமி என்ற பெயருள்ளவராக இருக்கவேண்டுமென எண்ணத்தக்கது நல்லுரைக்கோவையில் இராமதாசரின் வாழ்க்கைக் குறிப்பு பின்வருமாறு : திருவிடைமருதூரில் வசித்துவந்த மன்னர் அமரசிம்மன் பக்திமானாகவும், இசை அபிமானியாகவும், பெரியவர்களிடத்தில் அன்புடையவராகவும், ஸ்ரீ மகாலிங்க மூர்த்தியை இடைவிடாமல் தரிசனம் செய்துவருபவராகவும் இருந்தார். இம்மன்னரது அரண்மனையிலுள்ள இந்திரா மந்திரம் அல்லது இந்திரசபையில் உலவிக்கொண்டிருப்பது இம்மன்னரது வழக்கம். திருவிடைமருதூரில் இராமதாசச் சம்பிரதாயத்திலவர் ஒருவர் வாழ்ந்துவந்தார். இவரது பெயர் இராமதாச லட்சுமணபண்டிதர். சமர்த்த ராமதாச சம்பிரதாயத்தின்படி இப்பண்டிதர் தினந்தோறும் உஞ்சவிருத்திசெய்து பூசைகள் முதலியன நிகழ்த்திக்கொண்டிருந்தார். இந்தப் பண்டிதர் இசையில் வல்லவர். இந்துஸ்தானி உருப்படிகள் பாடுவதில் கைதேர்ந்தவர். உஞ்சவிருத்தியுடன் வீதி வலம் வரும் பொழுது கர்நாடக இசை மற்றும் இந்துஸ்தானி இசை உருப்படிகளைப் பாடுவது வழக்கம். இராமதாசரின் கானத்தை ஒருநாள் அமரசிம்மன் கேட்க வாய்ப்புக்கிட்டியது. பின்பு இம்மன்னருக்கும் இராமதாசருக்கும் நட்பு பலமானது. இராமதாசரின் இசைப் பெருமையை உணர்ந்த அமரசிம்மன் அவர் பொருட்டுப் பல உதவிகள் செய்தார். இன்றும் இம்மன்னரால் கொடுக்கப்பட்ட இல்லம் உள்ளது. இராமதாசரின் பேரனை நேரில் சந்தித்து

உரையாடிப் பழகியதாகத் திரு. உ. வே. சா. அவர்கள் தமது நல்லுரைக் கோவையில் குறிப்பிடுகிறுர். கோபாலகிருஷ்ண பாரதியாரே இந்த இராமதாசரைப் பாராட்டிப்பேசுபவராம். கனம் கிருஷ்ணையர்கூட இராம தாசரோடு பழகிப் பல புதிய விஷயங்களை அறிந்துகொண்டாராம். கோபால கிருஷ்ண பாரதியார் திருவிடைமருதூரில் வாசம்செய்து இராமதாசரிடம் இந்துஸ்தானி மார்க்க வழிகளைக் கற்றுக்கொண்டாராம். (ந. உ. கோ. பக் 75—88 நான்காம் பாகம்)

**தோடி சீதாராமய்யா:** தோடி ராகத்தைத் தனது ஏகபோக சொத்தென்று உரிமையாக்கிக்கொண்டவர், இந்தத் தோடி ராகத்தை அடமானம் வைத்துக் கடன் பெற்றவர். பின்பு சில பிரபுக்கள் இப்புலவரின் அடமானக் கடனை மீட்டனர், இந்தத் தோடி சீதாராமய்யா சரபோசி மன்னர் காலத்தவர், (திரு (உ. வே. சா. அவர்கள் இவரைப்பற்றிச் சிறு கட்டுரை வரைந்துள்ளார்).

**சங்கராபரணம் நரசய்யா:** சங்கராபரண ராகத்தைத் தமது சொத்தென்று உரிமையாக்கிக்கொண்டார். இவரது திராவிடப் பதங்கள் கிடைக்கின்றன. எனத் திரு. சுப்பராம தீட்சிதர் அவர்கள் கூறுகிறார், (திரு. உ. வே. சா. அவர்களும் இப்புலவரைப்பற்றிக் கலைமகளின் வாயிலாக ஒரு கட்டுரை வரைந்துள்ளார்,)

**குப்புசுவாமி ஐயா:** தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர். அமரசிம்மன் மற்றும் சரபோசி மன்னரது ஆரம்பக் காலத்தில் வாழ்ந்தவர். இவரது கீர்த்தனங்கள் பக்திரசம் ததும்பியதாக இருக்கும். சிருங்காரச் சுவை கொண்ட பதங்களையும் இயற்றியிருக்கிறார். தெலுங்குமொழி கற்றவர், வரத முத்திரை இவரது கிருதிகளில் இருக்கும் இவை அழகுள்ள பாடல்கள்.

**துரைசாமி ஐயா:** தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர். சங்கீதத்திலும், தெலுங்கு மொழியிலும் வித்துவானுகை விளங்கினுர். இந்த இசைப் புலவர் சரபோசி மன்னர் காலத்திலும். சிவாஜி மன்னர் காலத்திலும் வாழ்ந்த புலவர்.

**சௌக்கம் சீனுவையர்:** தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர். சௌக்க காலத்தில் இப்புலவர் போல் ராகாலாபனை செய்பவர் எவரும் இல்லாத காரணத்தால் இப்பட்டப்பெயர் (சௌக்கம்) இப்புலவருக்குப் பிரபுக்களால் கிடைத்துள்ளது. இப்புலவர் சரபோசி மன்னர் காலத்திலும் சிவாஜி மன்னர் காலத்திலும் வாழ்ந்தவர்.

**சொண்டி வெங்கடரமணய்யா :** சொண்டி வேங்கடசுப்பையரின் புதல்வர் சரபோசி மன்னர் காலத்தவர். தெலுங்கு மொழியிலும், கர்நாடக சங்கீதத்திலும் தேர்ச்சி பெற்றவர். இக்குடும்பத்தார் வேங்கடமகியின் சம்பிரதாயிகள். வேங்கடமகியால் கூறப்பட்ட ராகாங்காதி ராக சம்பிரதாயங்களை இக்குடும்பத்தார் விசேடமாக அறிந்தவர்கள். இந்த வேங்கட சுப்பையரும், ஆதிப்பையரும் சமகாலத்தவராவர். வேங்கட சுப்பையர் சரபோசியின் சுவீகாரத் தகப்பனுர் துளஜா மன்னர் பேரில் பிலகரி ராகத்தில் ஒரு வர்ணம் இயற்றியுள்ளார். இவ்வர்ணம் சித்திரக் கவிதையாக இருக்கும். வேங்கட சுப்பையர் மணலி சின்னையா முதலியாரிடம் சன்மானம் பெற்றவர். (திருவையாறு தியாகையர் கூட சொண்டி வேங்கடரமணய்யாவின் சீடர் எனக் கூறுவாரும் உளர்)

**வேங்கடராமய்யா :** தெலுங்கர். இசையிலும் தெலுங்கு மொழியிலும் வல்லவர். இப்புலவரின் கீர்த்தனங்களைப் பாடுவதற்குச் சில பாடகர்கள் சிரமப்படுவார்களாம். அதனுல் 'இரும்புக்கடலை வேங்கடராமையா' எனப் பாடகர்கள் இப்புலவருக்குப் பெயர் சூட்டினுர்களாம். ஆதிப்பையரின் இறுதிக் காலகட்டத்தில் வாழ்ந்தவராம். கோபாலகிருஷ்ண முத்திரையிட்ட வெங்கட ராமையாவின் கீர்த்தனங்கள் உள்ளன என்கிருர் சுப்பராம தீட்சிதர் அவர்கள்.

**கவி மாத்ரு பூதண்ணு :** தெலுங்கர். இசைப் புலவர், நாடக ஆசிரியராகவும் திகழ்ந்தார். திரிசிரபுரம் சுகந்தி குந்தலாம்பாள் பக்தர், அம்பாள் அனுக்கிரகத்தால் பக்தி மற்றும் நீதிப்பதங்களை இயற்றியவர். பிரதாபசிம்மன். துளஜா, அமரசிம்மன் போன்ற மன்னர்களது காலத்தில் வாழ்ந்தவர். பிரதாப சிம்ம மன்னரால் கௌரவிக்கப்பட்டுச் சன்மானங்கள் பெற்றவர். அமரசிம்மன் அவையில் பாரிஜாத நாடகத்தை அரங்கேற்றியவர். இப்புலவர் சரபோசி மன்னரது காலத்து முற்பகுதியில் முக்தி அடைந்தவர்.

**மெலட்டூர் வேங்கடராம சாஸ்திரிகள் :** தெலுங்கர். இசைப்புலவராகவும். நாடக ஆசிரியராகவும் விளங்கினுர். சரபோசி மன்னர் மற்றும் சிவாஜி மன்னர்களது காலகட்டத்தில் வாழ்ந்தவர், இப்புலவர் இயற்றிய பிரகலாத சரித்திரம், அரிச்சந்திரன் நாடகம், உஷா பரிணயம், மார்க்கண்டேய நாடகம், ஆகியவை மெலட்டூர்,சாலியமங்கலம் போன்ற ஊர்களில் இன்றும் நடைபெற்று வருகின்றன. சிவாஜிமன்னர் காலத்திய நாடக ஆசிரியர் சாலியமங்கலம் பஞ்சநத பாகவதர். சிவாஜி மன்னரால் கௌரவிக்கப்பட்டவர். சரபோசி மன்னரின் இறுதிக்காலத்தில் வாழ்ந்தவர் பஞ்சநத பாகவதர், வேங்கடராம சாஸ்திரிகள் மற்றும் பஞ்சநத பாகவதர்களாலேதான் பாகவதமேளாமுறை நன்கு பிரபல மாயிற்று. இந்த நாடகங்களில் இடம்பெற்ற பதங்கள் கைசிகிவிருத்தியில் அமைந்து சிருங்கார ரச பாவத்தை மிகத் தெளிவாகக் காட்டும்.

**திருவிடைமருதூர் பிரதாபசிம்மன் :** தஞ்சை அமரசிம்மனின் புதல்வர். சமஸ்கிருதம், மராட்டிய மொழிகளில் புலமை படைத்தவர். சங்கீதத்தில் அன்பு செலுத்தியவர். மிருதங்கம் வாசிப்பதில் கைதேர்ந்தவர். மராட்டிய மொழியில் நவரத்தினமாலிகை இயற்றியவர் (இராக தான மாலிகையாக) இக் கிருதியில் சுவரங்கள் முதலியன வெகு அழகாக இருக்கும். சரபோசி மன்னர் காலத்தில் சிறுவனாக இருந்த இவர் சிவாஜி மன்னர் காலத்தில் கைவல்ய பதவியை அடைந்தார். இவருடைய காலத்தில் தன்னுடைய மூதாதையரின் வரலாற்றை எழுதிவைத்தவர்.

**உடகே கோவிந்தாசாரியார் :** சங்கீத ரத்னாகரத்தில் உள்ள நிருத்யாத் தியாயத்தை மராட்டி மொழியாக்கம் செய்தவர். நிரூபணங்கள் இயற்றியவர் சங்கீதவித்வான். கன்னடம் தாய்மொழியாகக் கொண்டவர்.

**இரங்கநாதகவி :** இசை நாட்டிய நாடகங்களில் பங்கேற்றவர். சரபோசி மன்னர் மற்றும் சிவாஜி மன்னர் காலத்தில் வாழ்ந்தவர். இவரது மராட்டிய நாட்டியப் பதங்கள் கைசிகீவிருத்தியில் இருக்கும். இப்புலவர் காலத்தில் கங்கா விசுவேசுவர பரிணயம், நடேச விலாசம், மோகினீ மகேச பரிணயம், கணேச லீலார்ணவம், மீனாட்சி கல்யாணம் முதலிய நாடகங்கள் அரங்கேறியுள்ளன.

சரபோசி மன்னர் காலத்தில் மும்மூர்த்திகள் வாழ்ந்து இசைத்தொண்டு புரிந்தமை யாவரும் அறிவார்கள். தியாகையர், சியாமா சாஸ்திரிகள், முத்து சுவாமி தீட்சிதர் போன்ற மும்மணிகளால்தான் கர்நாடக சங்கீத உருப்படிகள் நமக்கு ஏராளமாகக் கிடைத்துள்ளன. இது போலவே சரபோசி மன்னர் காலத்திலும், பதம், தரு, சலாம்தரு, ஜக்கிணிதரு சப்தக் கோர்வை, தில்லானா முதலிய பதங்களும் மிகையாகக் கிடைக்கின்றன. சரபோசி மன்னர் காலத்தில் வாழ்ந்த தஞ்சை நால்வர் நாட்டியக் கலைவளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்கள். இந்நால்வர்களால் கர்நாடக இசை நாட்டிய உருப்படிகள் பல மலர்ந்துள்ளன. சின்னையா, பொன்னையா, வடிவேலு, சிவானந்தம் போன்ற நால்வரும் தஞ்சை அரண்மனையோடு நெருங்கியத் தொடர்பு கொண்டவர்கள்.

இரண்டாம் சரபோசி மன்னர் காலத்தில் ரூபகக் கலை நன்றாக வளர்ந் துள்ளது. அதில் அபூர்வ ராகக் கிருதிகளைக் காணலாம். பரஜு, பாடி, கும்ம காம்போதி, ஜுஜாபந்தி, மாண்ட், ஜிங்கலா, கௌளிபந்து போன்ற ராகங்கள் மிகச்சிறப்பாகத் தஞ்சை அரண்மனை நாடகச்சாலை நாட்டிய நாடகங் களில் கையாளப்பட்டுள்ளன. தஞ்சை இசைப் புலவர்களையும், தஞ்சை அரண்மனை நாடகச்சாலைக் கலைஞர்களையும் போற்றிப் புகழ்வோமாக. சரபோசி மன்னரின் பிறந்தநாள் விழாக் காணும் இந்நன்னாளில் சரபோசி காலத்தில் வாழ்ந்த அத்துணை இசைப்புலவர்களைப் போற்றிப் புகழ்வோமாக.

தாய்மொழி மராத்தியானாலும், பன்னாட்டு மொழிகளிலும் வல்லுநராய்ப் பாங்குடன் திகழ்ந்த சரபோஜி மன்னர் அவர்கள், சமஸ்கிருத வளர்ச்சிக்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். வடமொழி வளர்ச்சியில் அவரது ஆர்வம் பற்றி விவரிக்கின்றார் சரஸ்வதி மகால் வடமொழிப் புலவர் திரு. **என். சீனிவாசன்.**

# சமஸ்கிருதமொழி வளர்ச்சிக்கு இரண்டாம் சரபோஜி மன்னரின் பங்கு

*தஞ்சை மராட்டியப் பேரரசு தோன்ற அடிகோலியவர் முதலாம் ஏகோஜி என்னும் வெங்கோஜி(1676--1683)யாவார். இவர் சத்ரபதி சிவாஜி யின் தம்பி. ஏகோஜி மன்னரின் புதல்வர்களான இரண்டாம் சகஜி, முதலாம் சரபோஜி, முதலாம் துக்கோஜி ஆகிய மூவரும் இசை, நாட்டியம், நாடகம் இலக்கண-இலக்கியங்கள் ஆகிய பல்வேறு துறைகளிலும் தமது அவைப்புலவர் கள் மூலமாக பல்வேறு மொழிகளில் பற்பல நூல்களைப் படைக்கச் செய்தனர். இவர்களும் பெரும் புலவர்களாக இருந்ததால் இவர்களும் பல நூல்களைப் படைத்தனர். இம்மூன்று மன்னர்களின் காலங்களில் வடமொழியான சமஸ்கிருதம், தஞ்சைத் தரணியில் வளர்ச்சி பெற்றது. இக்கால கட்டங்களில் தமிழுடன் ஆரியமாம் வடமொழியும் பின்னிப் பிணைந்து விளையாடியது. தமிழ் மொழியிலிருந்து குறவஞ்சி, வண்ணம் போன்ற சிற்றிலக்கியச் செல்வங்கள் வடமொழியில் ஆக்கம் பெற்றன. வடமொழியிலிருந்து சிவரகசியம் புராணக், கதைகளின் இசை-நாட்டிய நாடகங்கள், மற்றும் சமயத்தைச் சார்ந்த நூல்கள் தமிழில் மொழியாக்கம் செய்யப்பெற்றன.*

இம்மன்னர்களுக்குப் பின் வந்த மன்னர்களில் இரண்டாம் சரபோஜி (1800-1832) மன்னரின் காலத்தில்தான் மீண்டும் வடமொழி இலக்கியங்களும் வைதீக நெறி தழுவிய நூல்களுக்கு உரைநூல்களும் வெளிவரலாயின. இத்தகைய சீர்மிகு சரபோஜி மன்னர் சமஸ்கிருத மொழிக்கும் அதன் வளர்ச் சிக்கும் ஆற்றிய சிறப்புக்களைச் சற்று விரிவாகக் காண்போம்.

**நவவித்யா கலாநிதி சாலா:** தஞ்சையில் 'சர்வ வித்யா கலாநிதி சாலா' என்ற பெயரில் ஒரு பெரிய கல்வி நிலையம் இருந்திருத்தல் வேண்டும்*.

---

* தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும். கே. எம். வேங்கடராமையா, தமிழ்ப்பல்கலைக் கழக வெளியீடு, பக்கம்—244.

இந்தப் பெயரை கி. பி. 1807-ல் 'நவ வித்யா கலாநிதி சாலா' என்று பெயர் மாற்றம் செய்யப்பெற்றுள்ளது. இக்கல்வி நிலையம் (சரஸ்வதி மகால் என்று அழைக்கப்பெறும்) இந்த நூலகத்தின் ஒரு பகுதியாகவே இயங்கியிருக்கிறது. இக்கல்வி நிலையத்தில் 385 மாணவர்கள் கல்வி பயின்றதாக கி. பி. 1785ஆம் ஆண்டு மோடிக் குறிப்பில் காணப்படுகிறது. கி. பி, 1797ஆம் ஆண்டு ஆவணக்குறிப்பின்படி சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு. மராட்டி, உருது ஆங்கிலம் ஆகிய ஆறு மொழிகள் இங்கு பயிற்றுவிக்கப்பட்டுள்ளன.

இதில் சமஸ்கிருத மொழி கற்றவர்கள் 85 மாணவர்கள் இக்கலா சாலையில் வேதமும்-சாஸ்திரமும் கற்றுக் கொடுத்துள்ளனர். வேத பாட சாலையில் ருக்வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம், சுக்ல யஜுர் வேதம் ஆகியவற்றுடன் சிரௌத சூத்திரங்கள், க்ருஹ்ய சூத்திரங்கள் தர்ம சூத்திரங்கள் ஆகிய வைதிக நெறிக்குரிய பாடங்களும் கற்றுக்கொடுக்கப் பெற்றுள்ளன.

சாஸ்திர பாடசாலையில் தருக்கம், மீமாம்ஸா, வியாகரணம், உத்தர மீமாம்ஸையான (அத்வைத—விசிஷ்டாத்வைத—துவைத) வேதாந்த பாடங்களும், காவியம், நாடகம், அலங்காரம், சோதிடம், சங்கீதம், சிற்பம் ஆகிய துறைகளும் கற்றுக் கொடுக்கப் பெற்றுள்ளன என்பதையும் இந்நூலகத்தின் மோடி ஆவணக் குறிப்புக்களில் காணமுடிகிறது.

மேலும் இப்பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு உணவும், உறைவிடமும் கொடுக்கப் பெற்றிருக்கின்றன. இதில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அரசே ஊதியமளித்துள்ளது, என்றும் சாராயக்கடையிலிருந்து விற்றுமுதலான தொகையிலிருந்தும் ஆசிரியர்களுக்கு மாத ஊதியம் அளிக்கப்பட்டு வந்துள்ளது என்றும் அறியமுடிகிறது*. இந்த அரண்மனையிலேயே இப்பள்ளி இயங்கி வந்துள்ளதால் தற்போது 'அரசர் மேல் நிலைப்பள்ளி' இருக்கும் இடத்திலேயே இக்கல்வி நிலையமும் இயங்கியிருக்கலாம். இதைப் போலவே ஒரத்த நாட்டிலுள்ள முத்தாம்பாள் சத்திரத்திலும் சமஸ்கிருதக் கல்விபயில வசதிகள் இருந்துள்ளன. இங்கும் நான்கு வேதங்களும், தர்க்கம், வியாகரணம் மீமாம்ஸை, வேதாந்தம் மற்றும் காவியங்களும் கற்றுக் கொடுக்கப் பெற்றுள்ளன.

இங்குள்ள ஆசிரியர்கள் சரஸ்வதி மகால் நூலகத்திலிருந்து சுவடிகளைக் கடனாகப் பெற்றுப் படித்தபின்னர்த் திரும்பவும் கொடுத்து வந்துள்ளனர். சரஸ்வதி மகால் நூலகத்து மொழிப் பண்டிதர்கள் ஒரத்தநாடு—முத்தாம்பாள் சத்திரத்துப் பள்ளி மாணவர்களைத் தேர்வு செய்துள்ளனர் என்றும் இந்நூலகத்துத் தமிழ்த்துறைச் சுவடி கூறுகிறது.

---

* தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக்கம்—243.

திருவையாறு 'அரசர் கல்லூரி', தஞ்சை நாயக்க மன்னர்களின் அமைச்சர் கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் வேத-சாத்திரக் கல்வி பயிலத் தொடங்கப்பெற்றது என்றும் அறியமுடிகிறது[1]. ஆனால் இரண்டாம் சரபோஜி மன்னரின் ஆட்சிக் காலத்தில்தான் கல்யாணமால் கட்டப்பட்டது என்று ஆராய்ச்சியாளர் திரு. செ. இராசு அவர்கள் குறிப்பிடுகிறார்[2]. மேலும் இக்கல்யாண மகாலில் அரசரின் மனைவியர் தங்கும் விடுதியாக இருந்தது என்றும் குறிப்பிடுகிறார்.

ஆனல் அங்குள்ள கட்டட அமைப்பைக் காணும்போது வடமொழிக் கல்லூரியும், அதனருகிலேயே அரண்மனை மகளிர் தங்கும் விடுதியும் இடம் பெற்றிருக்கலாம் என்று கருதமுடிகிறது. இதனால் இரண்டாம் சரபோஜி மன்னரின் ஆட்சிக் காலத்தில் கல்யாணமகால் சத்திரத்துடன் இணைந்துள்ள இப்பள்ளியும் சிறப்பாக விளங்கியுள்ளது. இக்கல்லூரியில் பயின்ற மாணவர்களில் பலர் இந்த நூற்றாண்டில் புகழ்பெற்ற ஆசிரியர்களாகவும், வரலாற்று ஆய்வாளர்களாகவும் விளங்கியுள்ளனர் எனில் மிகையில்லை.

சமஸ்கிருதமும் — சரஸ்வதி மகாலும் :

இந்த சரஸ்வதி மகால் நூலகம் *13, 14*-ஆம் நூற்றாண்டிலேயே இருந்துள்ளது என்றுடாக்டர்பர்னல் 'P.P.S. சாஸ்திரி.' வ. வேணுகோபாலன். போன்ற சரித்திர ஆய்வாளர்கள் கருதுகின்றனர். முன்னாளில் இந்நூலகத்திற்கு 'சரஸ்வதி பாண்டார்' என்று பெயரிருந்தது. இந்தப் பெயராலேயே கி. பி. *1855* (கடைசி சிவாஜி மன்னரின் காலம்) வரை அழைக்கப்பெற்று வந்துள்ளது.[3] இது பிற்காலத்தில் 'சரஸ்வதி மகால்' என்ற கட்டடப்பெயரால் அழைக்கப்படலாயிற்று. இந்நூலக வளர்ச்சியில் தஞ்சையை அரசு புரிந்த நாயக்க மன்னர்களும், மராட்டிய மன்னர்களும் ஆர்வம் கொண்டிருந்தனர் அவரவரது ஆட்சிக் காலங்களில் இந்த நூலகம் சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ளது எனினும் இரண்டாம் சரபோஜி மன்னரின் காலத்தில் இந் நூலகம் மறுமலர்ச்சியடைந்தது எனில் மிகையில்லை. குறிப்பாக வட இந்தியாவில் இருந்த பல புலவர்களின் வீடுகளிலிருந்து சுவடிகள் விலை கொடுத்து வாங்கியுள்ளனர். இதற்காக கி.பி. *1805*-ஆம் ஆண்டுக்குரிய ஆவணக் குறிப்பில் :

*1)* திருப்பனந்தாள் காசிமடத்துத் தம்பிரான் வாயிலாக ரூ. *1000/-* அனுப்பப்பட்டு கி.பி. *1825*-ஆம் ஆண்டு பல சுவடிகள் வரவழைத்துள்ளனர்

---

1 கிருதிமணி மாலை. 3-ஆம் பகுதி Edr. R. ரங்கராமனுஜ அய்யங்கார் பக்கம்-XII சென்னை—1948.

2 தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள்-தமிழ்ப்பல்கலைக் கழக வெளியீடு, முகவுரை பக்கம்—XV

3 மோடிக் குறிப்பு மற்றும் கேட்டலாக்.

என்றும், அவை இந்நூலகத்துக்கு அளிக்கப்பட்டன என்றும் அறிய முடிகிறது. மேலும் காசியிலிருந்து விலைக்கு வாங்கப்பெற்ற சுவடி என்று சுவடிகளின்மேல் எழுதியுள்ளனர்.

2) வேத(பாட)சாலை சாமவேத வாத்தியார் அண்ணாஸாமி சிரௌதிகளின் வழி புனேயிலிருந்து மஹாதேவபட் என்பவரிடமிருந்து 100 சக்கரங்கள் அளித்து சாமவேதச் சுவடிகள் பெறப்பட்டன.

3) பாலா தீக்ஷிதரிடமிருந்து கி. பி. 1828ல் சிரௌத புத்தகங்கள் வாங்கப்பட்டன. மேற்படியாரிடமிருந்து கி. பி. 1835-ல் போதாயன சூத்ர பாஷ்யம், கனக சபா கிருத ஷோடஸ சம்ஸ்காரம், அபர பிரயோகம் ஆகிய ஓலைச் சுவடிகளை 4 சக்கரம் 5 பணம் கொடுத்து வாங்கப்பெற்றன.

4) ரானோஜி, மகாலோஜி காட்கே என்பவர் தமது ஊருக்குச்சென்று திரும்பும்போது சோதிட நூல்கள் வாங்கிவர ரூ. 200 கொடுத்து அனுப்பப் பெற்றுள்ளார்.

5) கி.பி. 1829ல் உடையார்பாளையத்திலிருந்து அப்பைய தீக்ஷிதர் அவர்களுடைய நூல்களை விலை கொடுத்து வாங்கிக்கொண்டு வரப்பெற்றன என்றும் அறியமுடிகிறது.

இவற்றைத் தவிர இரண்டாம் சரபோஜி மன்னர் வட இந்தியாவில் உள்ள பல புலவர்களின் வீடுகளிலிருந்த அரிய சுவடிகளைப் படி எடுத்து வருமாறும், பல புலவர்களை நியமித்துமுள்ளார். இத்தகைய அரிய பணிகளைச் செய்யும் பொறுப்பு அரண்மனைப் புரோகிதரான 'மானம்பட்டர்' என்பாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவரும் பல நூல்களைப் படி எடுத்து இந்த நூலகத்தில் சேர்த்துள்ளார்.

(இவரே தனக்காக எழுதச் செய்ததும், மற்றும் சேகரித்ததுமாகிய சுவடிகளடங்கிய நூலகம் ஒன்றையும் உருவாக்கி அதற்கு 'விஜய விலாஸம்' என்ற பெயரையுமிட்டுள்ளார். இவர் வடமொழி அறிஞர். ருக்வேதம் கற்ற அறிஞர், இவருடைய மூத்த மகன் 'ஜம்புநாத பட்டலாண்டகே'. பின்னாளில் இந்நூலகத்திற்கு அரிய சுவடிகளை அன்பளிப்பாக அளித்துள்ளார். வேறு எந்த நூலகத்திலும் கிடைக்காத அரிய சுவடிகள் இத்தொகுதியிலுள்ளன. இவை இன்று J. L. Collection என்ற பெயரில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மன்னனுடைய விருப்பப்படி இவரும் பல சுவடிகளைப் படி எடுத்துள்ளார். இது பற்றி ஆராய்ச்சியாளர் E. ஹூல்ட்ஸ் குறிப்பிடுகிறார். (Reports on Sanskrit MSS of Southern India Vol III E. Hultzsch PP-2)

ஆதலால் வட இந்தியாவிலிருந்து பல நூல்கள் படி எடுக்கப்பெற்று இந்நூலகத்தில் பாதுகாக்கப் பெறுகின்றன.

### சுவடிகளைக் காத்தலும் படி எடுத்தலும் :

சரசுவதி மகால் நூலகத்தை வளர்க்கச் சிறந்த வழி ஏட்டுச் சுவடிகளைப் படி எடுத்தலும், பழுதடைந்த சுவடிகளைப் புதுப்பித்தலுமே என்பதை அறிந்த மன்னர் பல மொழிகளிலுள்ள சுவடிகளை இடையீடின்றி படியெடுக்கும் பணியை மேற்கொண்டுள்ளார். இதற்காக பல பண்டிதர்களை அழைத்து நூலகத்திலுள்ள அழியும் நிலையிலிருக்கும் ஓலைச் சுவடிகளைக் காகிதங்களில் தேவநாகரி எழுத்தில் படி எடுக்கச் செய்தார். மேலும் இப்பணி புரிந்தவர்கள் பல அறிஞர்களாவார்கள். இதனை ஒரு மோடி ஆவணக் குறிப்பு நமக்கு வலியுறுத்துகிறது. "ராஜஸ்ராம்பாபுரம் அன்னச் சத்திரத்திலிருந்து சரஸ்வதி மகாலுக்கு 501 எழுத்தாணிகட்டுச் சக்கரம் 43—8$\frac{3}{8}$" என்பதுவே அக்குறிப்பு. இப்படி படி எடுக்கப்பட்ட சுவடிகளில் சில :-

| | | |
|---|---|---|
| யஜுர்வேத பாஷ்யம் | படி எடுக்க | ரூ. 3-00 |
| வேதம் | ,, | ரூ. 1-50 |
| ஸ்ரீமத் பாகவதம்—தசமஸ்கந்தம் (பூர்வார்தம்) | ,, | ரூ. 10 |

மற்றும் ஸ்மிருதி சந்திரிகா- விகாரகாண்டம், அத்யாத்ம ராமாயணம், பஞ்சநத மாகாத்மியம், போன்ற நூற்றுக்கணக்கான சுவடிகள் படியெடுக்கப் பெற்றன. முழுச் சுவடிகளைப் படியெடுப்பது மட்டுமின்றி கிழிந்த-உடைந்த மோசமான நிலையிலுள்ள ஏடுகளை மட்டும் படியெடுத்து உரிய இடங்களில் புகுத்தியும் வந்துள்ளனர். இந்தப் பணிகளுக்காகப் பல சமஸ்கிருதப் பண்டிதர்கள் இந்நூலகத்தில் பணிபுரிந்துள்ளனர்.

அடுத்து, தொகுக்கப்பட்ட சுவடிகளை எளிதாகக் கையாள அனைத்துச் சுவடிகளுக்கும் உரிய கேட்டலாக் இம்மன்னர் காலத்தில்தான் முதன்முதலாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்குரிய பணியின் பொறுப்பை மானம்பட், கங்காதரபட், சதாசிவபட் ஆகியோருக்குக் கொடுத்து இவர் தலைமையில் பல புலவர்கள் பணி செய்து கேட்டலாக் உருவானது. ஓலைச் சுவடிகளின் பெயர்களைப் பதிய காகித நோட்டுப்புத்தகமும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவை முறையே தெலுங்கு – தேவநாகரி லிபிகளில் எழுதப்பெற்றுள்ளன.[1]

---

[1]शरफोजि महाराजुवारिकि पट्टमय्येटन्डुकुमुनुपु ई सरस्वती महाल् पुस्तकालकु विवरमैन जाप्ता लेदु। 1720 कालयुक्ती संवत्सरं शरफोजी महाराजुवारु पट्टमय्यी मन्थंभट्लु यने, गंगाधर भट्लु, सदाशिव भट्लकु दानाधिकारं इच्चिन पिमट ई सरस्वती महाल् कागिताल पुस्तकालुकु ताटाकुलुकु पुस्तकाळकुन्नु तगुमैन वाल्लंनु नियमिञ्चि फेरिशीलुनि जाप्ता शालिवाहन शक सं 1722 इंगिलीषु संवत्सरमुलु 1801 जाप्ता परिष्कारमुगा गलुग देशिनदि रौद्री नाम संवत्सरम् ॥

வகைப் படுத்தப்பட்ட சுவடிகள் பெரிய பெரிய மரப்பெட்டிகளில் வைத்துப் பாதுகாக்கப்பெற்றன. ஆங்கிலேயர் காலத்தில்தான் இந்த நூலகத்தை அணிசெய்யும் மிக உயரமான மர பீரோக்கள் தயாரிக்கப்பெற்று இன்றுள்ளதைப்போல் வரிசைப்படுத்தப்பெற்றதென்று அறிகிறோம்.

## நூலகமும் — அச்சகமும்

சுவடிகளைப் பாதுகாத்தல் மட்டும் போதாது. அவைகளை நூல்களாக அச்சிட்டு வெளியிட வேண்டும் என்று விரும்பினார் சரபோசி மன்னர். இதனால் கல்லால் ஆன தேவநாகரி எழுத்துக்களைப் பயன்படுத்தியும், மரத்தாலான படங்களைக் கொண்டும் நூல்கள் அச்சிடப் பெற்றன. இதில் அச்சான நூல்களில் சில 1 குமாரசம்பவ சம்பூ 2. தர்க்க சங்கிரஹம், 4. முக்தாவளி 3. அமரகோசம் போன்றவை.

இம்மன்னனது விருப்பத்தின் வெளிப்பாடாக இந்த நூலகத்தில் ஒரு அச்சகப் பிரிவு இன்றும் இயங்கிக்கொண்டிருக்கிறது. அச்சிடும் பணியை மேற்கொண்டுள்ள இந்நூலகத்தில் இதுவரை 279 நூல்கள் வெளியிடப் பெற்றுள்ளன. இவற்றில் சமஸ்கிருத நூல்கள் 85 ஆகும்.

## ஆயுர்வேத நூல்களும் — அதன் மருத்துவமும்

காசியிலிருந்து தொகுக்கப்பெற்ற நூல்களில் ஆயுர்வேத மருத்துவ நூல்களுமுண்டு. மேலும் இவரது முப்பாட்டனாரான இரண்டாம் சகஜி— முதலாம் துக்கோஜி காலத்தில் தொகுக்கப்பட்ட அசுவ சாத்திரம், கஜ சாத்திரம் ஆகிய (வண்ண ஓவியங்களுடன் எழுதப்பட்ட) நூல்களை இம் மன்னன் காலத்தில் மீண்டும் வரையச் செய்து சமஸ்கிருத மூல சுலோகமும் அவற்றுக்கு மராட்டிய மொழியில் தெளிவான விரிவுரையும் எழுதச்செய்துள்ளார்*. இம்மன்னனுடைய காலத்தில் இயங்கிய தன்வந்திரி மகாலில் சித்த மருத்துவம், ஆயுர்வேத வைத்தியம், அலோபதி ஆகிய வைத்திய முறைகள் நடைபெற்றுள்ளன.

---

**இதன் தமிழாக்கம் :** சரபோஜி மன்னர் பட்டத்துக்கு வருவதற்கு முன் இந்த சரஸ்வதி மகால் நூல்நிலைய நூல்களுக்கு விவரமான பட்டியல் இல்லை. 1720 காளயுக்தி ஆண்டு சரபோஜி மன்னருக்குப் பட்டம் கட்டிய பின்னர் மன்யம்பட், கங்காதரபட், சதாசிவபட் ஆகியோருக்கு (விவரப்பட்டியலிட) உரிய அனுமதி அளித்த பின்னர் சரஸ்வதி மகால் காகித புத்தகங்களுக்கும், ஓலைச்சுவடி நூல்களுக்கும், தகுதி வாய்ந்தவர்களை நியமனம் செய்து சுவடிகளைப் பரிசீலனை செய்து பட்டியல் தயாரிக்கப்பட்டது. சக ஆண்டு 1622. ஆங்கில ஆண்டு 1801ல் நூல் விவரப்பட்டியல் தயாரிக்கப்பட்டது. ரௌத்ரி வருஷம்.

* N. N. B. 15648 Sanskrit D. Catalogue T. M. S. S. M. Library, Vol. 16


### இவர்காலத்து வடமொழிப் புலவர்கள்

*1.* **நிருசிம்ம கவி** என்பவர் 'குணரத்னாகரம்' என்னும் நூலை இயற்றியுள்ளார். இது ஒரு அலங்கார சாஸ்திரம். பிரதாபருத்ரீயம் என்னும் அலங்கார நூலைப் பின்பற்றி இக்கவிவாணர் இரண்டாம் சரபோசி மன்னரையே பாட்டுடைத் தலைவனாகப் பாடியுள்ளார். இந்நூலகத்தில் காணப்பெறும் அலங்கார நூல்களில் இதுவே அண்மைக் காலத்தது.

2. **வாஞ்சேஸ்வரர் II.** இவருடைய மூதாதையரும் மராட்டிய அரசவையில் வீற்றிருந்த புலவர்கள் சகசி மன்னனால் கல்விக் கொடையாகக் கொடுக்கப்பட்ட திருவிசநல்லூர் (சகசிராசபுரம்) என்னும் ஊரினர். இவர் *1)* மஹிஷ சதகம் *2)* ஹிரண்யகேசி ஸ்ரௌத சூத்ர வியாக்யானம் ஆகிய நூல்களை இயற்றியவர்,

மேலும் யக்ஞேஸ்வர தீக்ஷிதர், வாசுதேவ தீக்ஷிதர், நாராயண சுதீ போன்ற பலர் அரசவையில் இருந்தவர்கள். தருமசபை, நியாயசபை முத்ரிதசபை என்று மூன்றாகப் பிரிக்கப்பட்ட சபைகளில் பல புலவர்கள் பங்கு கொண்டிருந்தனர் என்று திரு. P. P. S. சாஸ்திரி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய சிறந்த பணிகளைச் சமஸ்கிருதத்திற்குச் செய்து இறவாப் புகழ் படைத்த சரபோசி மன்னரின் பங்கு வடமொழி இலக்கிய வரலாற்றில் பொன்னெழுத்தில் பொரிக்கப்பட வேண்டியதாகும்.


Romanus II. [illegible] A.D. 959. Nov. 15.

The death of Conftantine was imputed to poifon; and his fon Romanus, who derived that name from his maternal grandfather, afcended the throne of Conftantinople. A prince who, at the age of twenty, could be fufpected of anticipating his inheritance, muft have been already loft in the public efteem; yet Romanus was rather weak than wicked; and the largeft fhare of the guilt was transferred to his wife, Theophano, a woman of bafe origin, mafculine fpirit, and flagitious manners. The fenfe of perfonal glory and public happinefs, the true pleafures of royalty, were unknown to the fon of Conftantine; and, while the two brothers, Nicephorus and Leo, triumphed over the Saracens, the hours which the emperor owed to his people were confumed in ftrenuous idlenefs. In the morning he vifited the circus; at noon he feafted the fenators; the greater part of the afternoon he fpent in the *fphærifterium*, or tennis-court, the only theatre of his victories; from thence he paffed over to the Afiatic fide of the Bofphorus, hunted and killed four wild boars of the largeft fize, and returned to the palace, proudly con-



ஆங்கில நூலொன்றில் சரபோஜி மன்னர் எழுதிய குறிப்பு

சோழப் பெருமன்னர்களும், நாயக்கர்களும், மராத்தியர்களும் தஞ்சை மண்ணில் வளர்த்த ஒப்பற்றக் கலை ஓவியக் கலையாகும். ஓவியம் வளர்த்த காவியத் தலைவன் சரபோஜி பற்றி சரசுவதி மகால் தமிழ்ப் புலவர் திருமதி. **ச. திலகம்** இக்கட்டுரையில் விளக்குகின்றார்.

# ஓவியம் வளர்த்த காவிய நாயகன்

இஞ்சி சூழ் தஞ்சை ''இராஜராஜேச்சரம்'' எனப் புகழப் பெறும் தஞ்சாவூர் பெருவுடையார் கோயிலின் பெருமைகளுக்கு மகுடமாகத் திகழ்வது அங்குள்ள ஓவியக் கூடங்களே, மாமன்னன் இராஜராஜன் காலத்து ஓவியக் கூடத்தில் தொடங்கி விஜயராகவ நாயக்கர், சரபோஜி மகாராஜா மற்றும் சிவாஜி மகாராஜா ஆகியோர் காலத்து ஓவியப் படைப்புக்கள் எல்லாம் இன்றும் அத்திருக் கோயிலில் வண்ணப் பொலிவோடு எண்ண எழுச்சிகளின் பிரதிபலிப்புகளாய்த் திகழ்கின்றன. கலை மன்னராய்த் திகழ்ந்த சரபோஜி மன்னர் ஆற்றிய பெரும் பணிகளுள் ஒன்றாக ஓவியக் கலையைப் போற்றியது குறிப்பிடத்தக்கதாகும். இவரது தனித் தன்மையைக் காட்டும் வகையில் தஞ்சை பெரிய கோயில் ஓவியக்கூடமும், சரசுவதிமகால் நூலகத்திலுள்ள ஓவியங்களும் சான்றாய் நிற்கின்றன.

**தேவி மகாத்மியம் :**

புவனம் மூன்றுடைய நாச்சியார் என்று கல்வெட்டுக்களும், பிரகண்ய நாயகி என மக்களும், பக்தியோடு அழைக்கும் அம்மன் கோயில் முகமண்டபக் கூடத்தின் உட்புறக்கூரையில் சரபோஜி மன்னரின் ஆக்கத்தால் ஓவியர்களின் தூரிகைகள் எண்ணிலா வண்ணப் படைப்புக்களைப் பதித்துள்ளன. மாசக்தியாம் உமையவளின் தீரங்களை வேதத்தில் ''ராக்திரிசூக்தம்'' விளக்குகின்றது மதுகைடப பிரசமணி, சும்பநிசும்பசூதணி, மகிடாசுரமரர்த்தணி என்றெல்லாம் அவளை அழைத்து அன்னையின் மூன்று வீர சாகசங்களை விளக்குகின்றது. முப்பெரும் தீரக் காட்சிகளை மக்கள் என்றென்றும் கண்டு, மகிழவேண்டும் என தேவி பவானியின் பக்தரான சரபோஜி மன்னர் விரும்பினார். மன்னனின் மன எழுச்சிகளை நன்குணர்ந்த தஞ்சை ஓவியர்கள் மதுகைடப வதம், சும்பநிசும்ப வதம், மகிட வதம் ஆகிய மூன்று காட்சித் தொகுப்புக்களை அம்மண்டபம் முழுவதும் தீட்டினர். ஒவ்வொரு காட்சிக்குக் கீழும் அக்காட்சி விளக்கத்தினைத் தமிழில் எழுதினர்.[1]

---

1 தேவி மகாத்மியம் — குடவாயில் பாலசுப்ரமணியன், தினமணிக் கதிர் கட்டுரை



அசுவசாத்திரம் எனும் நூலில் உள்ள வண்ண ஓவியம்
(சரபோஜி மன்னர் காலம்)

இது மட்டுமா ! எண்ணிலா, திருமணக் காட்சிகள் கயிலைநாதன் திருமணத்தில் துவங்கி, நந்தி, சுப்பிரமணியர், திருமால், பிரமன் போன்ற பல தெய்வங்களின் திருமணங்கள் அம்மண்டபத்தில் வண்ணப் பொலிவோடு மிளிர்கின்றன. இம்மன்னரின் புதல்வரான சிவாஜி மகாராஜா தந்தைக்குத் தான் சளைத்தவர் அல்ல என்பதனை, அவர் படைத்த ஓவியக் கூடத்தால் அறிகிறோம். ஆலவாய்ப் புராணத்தை (ஹாலாஸ்ய மகாத்மியம்) 64 காட்சித் தொகுப்புக்களாக்கித் தமிழில் விளக்கங்களோடு எழுதியுள்ளது போற்றுதற் குரியதாகும்.

**கலைமகள் கோயிலில் கவின்மிகு ஓவியங்கள் :**

சரசுவதிபண்டார், சரசுவதிமகால் என்றெல்லாம் அழைக்கப்பெற்ற அரண்மனை நூலகத்தில் சரபோஜி மன்னர் செய்த ஓவியப்பணி இவ்வுலகம் உள்ளளவும் போற்றுதற்குரியதாகும். காகிதச் சுவடிகளிலும், பலகைகளிலும், கான்வாசு துணிகளிலும் எண்ணிலா வண்ணப் படைப்புக்களை இடம்பெறச் செய்தார். இவர் காலத்தில் மேனாட்டுக் காகிதம், தூரிகைகள், வண்ணங்கள் தஞ்சைக்கு இறக்குமதியாயின. இங்குள்ள படைப்புக்களில் தஞ்சை மண்ணின் ஓவிய மணத்தோடு, மொகலாயர் மற்றும் ஆங்கிலேயர் ஓவியப் பாணிகளும் சங்கமித்தன.

மகாபாரதம், பகவத்கீதை, இராமாயணம், பாகவதம் போன்ற புராணக் காட்சிகளும், கிராமிய ஓவியங்களும், ஆயிரக் கணக்கில் இங்கு இடம் பெற்றுள்ளன. பெண்கள் கூட ஓவியர்களாய்த் திகழ்ந்தார்கள் என்பதனை மோடி ஆவணங்களிலிருந்து அறிகிறோம். இத்தகைய ஓவியங்கள் மட்டுமின்றி சுவர் ஓவியங்களும் இம்மன்னரால் படைக்கப் பெற்றன. சரசுவதிமகால் மற்றும் அரண்மனை தர்பார்கூடம் இருட்டறைகள் போன்ற இடங்களில் இம்மன்னர் காலத்துப் படைப்புக்கள் மிகுதியாக உள்ளன. தங்கரேக்குகளும், நவமணிகளும் பதிக்கப்பெற்ற இவர்கால ஓவியங்கள் பல இன்றும் பல்வேறு இடங்களில் உள்ளன.

தந்தங்களில் கூட ஓவியம் எழுதும் பெரும்பணியை இம்மன்னர் ஆதரித்தார். இன்று மன்னர் குடும்பங்களிலும், சில அருங்காட்சியகங்களிலும் உள்ள இவரது ஆக்கத்தால் மலர்ந்த தந்த ஓவியங்களைக் காணும்போது நுட்பமான இக்கலையை தஞ்சை மண்ணில் செழிக்கச் செய்த இம்மன்னரின் பெருமை மேலும் விரிகின்றது.

இப்பெருமன்னர் ஓவியக் கலைக்கு எப்படி மெருகூட்டி ஆதரித்தார், என்பதனை சரசுவதிமகாலில் உள்ள மோடி ஆவணங்களின் துணையால் அறிகிறோம். சரசுவதிமகாலில் காசியில் உள்ள 64 குளியல் துறைகளை

தொடர் ஓவியமாகக் காட்டும் வண்ணநூல் ஒன்று உள்ளது. இது பற்றிய மோடி ஆவணம் ஒன்று பின்வருமாறு கூறுகிறது.[1] அதில் இரண்டாம் சரபோஜி காசியாத்திரையில் இருந்தபொழுது இயற்கைக் காட்சிகளில் ஈடுபட்டு அவற்றை வரையச் செய்து தஞ்சைக்கு அனுப்பியிருக்கிறார். அவற்றை எழுதிய ஓவியன் தாமஸ் என்ற பெயரினன். அவனுக்குத் திங்கள் ஒன்றுக்கு ஊதியம் 10 புலி வராகன். அவன் மசூலி பக்தர் என்ற ஊரில் இருந்தபொழுது நியமிக்கப்பெற்றான். தாம்கண்ட காட்சிகளைத் தஞ்சையில் உள்ள தம் உறவின் முறையார் யாவரும் கண்டு மகிழவேண்டும் என்ற காரணத்தால் எழுதியனுப்பியதாக, ஹஸன்கஞ்ச் என்ற முகாமிலிருந்து *18—4—1821*-இல் அரசர் எழுதுவித்துள்ளார்.

*8—3—1823*-இல் கியாப்டன் ஹரடி நவாபுடன் அரண்மனைக்கு வந்தார். தஞ்சைக் கலெக்டர் மிஸ்தர் காட்டலும் மற்றும் சிலரும் வந்தனர். அரசருடன் பேசிவிட்டு (சதர்) மாடியிலுள்ள அரசர்களின் படங்களையும், வாத்தியங்களையும் பார்த்தனர் என்று ஒரு ஆவணத்தில் கூறப்பட்டுள்ளது. இவ்வெழுத்துச் சான்றினால் அரண்மனையில் மாடியில் மராட்டிய அரசர்களுடைய படங்கள் மாட்டப் பெற்றிருந்தன என்று தெரியவருகிறது. இங்ஙனம் மாடியில் படங்கள் இருந்தமையோடு இரண்டாம் சரபோஜியை *30—3—1826*-இல் பார்க்கவந்த பிஷப்ஹீபர், மன்னருடைய நூல்நிலையத்தில் மராட்டிய அரசர்களின் படங்கள் மாட்டப்பெற்றிருத்தலைக் கண்டார் என்று சொல்லப்படுகிறது.

சித்திரம் வரைவதில் பெண்டிரும் ஈடுபட்டிருந்தனராதல் கூடும். *1811*-இல் சித்திரக்காரி செங்கம்மாளுக்கு மாதத்திற்கு *3* சக்கரம் என்பது இதற்கு எழுத்துச் சான்று. கி.பி. 1816-இல் இரண்டாம் சரபோஜி குதிரைச் சவாரி செய்வதுபோல் 4 படங்கள் வரையப்பட்டன.

கி. பி. *1817*-இல் சித்திரக்காரன் வெங்கடப்பெருமாள் வெங்கட நாரணப்பையா ஆகிய இருவருக்கும் *700* சக்கரம் கொடுத்ததாக ஒரு ஆவணத்தால் தெரிகிறது. காரணம் புலப்பட்டிலது.

இரண்டாம் சரபோஜி காசியாத்திரையில் இருந்தபொழுது "பாட்ணா" (Patna) என்ற தங்கும் இடத்திலிருந்து ஒரு ஆணை பிறப்பிக்கப்பெற்றது. அதன்படி ஹுஜுரின் படமும், இளைய திவான் சாஹேப் படமும் வரையப் பட்டன. ஹுஜுரின் படம் சீமைக் குதிரையில் கையில் ஈட்டியை வைத்து இருப்பது போலவும், இளைய திவான் படம் கையில் துப்பாக்கியை வைத்துக்

---

1 தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்
— கே, எம். வேங்கடராமையா

கொண்டு சவாரிக்குக் குதிரையின்மேல் செல்லுவது போலவும் அமைய வேண்டும் என்பது ஆணை. படத்தின் அளவு ஒரு முழம் சதுரம். இங்ஙனம் இவை சித்திரக்காரன் சின்னசாமி நாயக்கனைக்கொண்டு வரையப்பெற்றன. இவை முழுதும் தண்ணீர்ச் சாயத்தில் வரையப்பெற்றன.

23—3—1821-இல் புருகாபாத் என்ற தங்குமிடத்திலிருந்து வந்த கடிதத்தில் கவர்னர் ஜெனரல் விரும்பியமையின் ஹுஜூரின் படம் மார்பளவு வரை எண்ணெய்ச் சாயத்தினால் சித்திரக்காரன் சின்னசாமி நாயக்கனைக் கொண்டு எழுதச்செய்து ரெஸிடெண்டிடம் கொடுத்து கவர்னர் ஜெனரலுக்கு அனுப்பச் செய்யவேண்டும் என்று கண்டிருக்கிறது.

18 சாதியினருடைய படங்களும் வரையப்பட்டன என்று 1824க்குரிய குறிப்பினால் அறியப்பெறும். இங்ஙனம் வரைந்தவன் சாரங்கபாணி என்ற பெயர் உடையவன். இவன் 80 படங்களை வரைந்து கொடுத்துப் படம் 1-க்கு $1\frac{1}{2}$ ரூபாய் வீதம் ரூபாய் 140 பெற்றுக்கொண்டான்.

மேலே சாரங்கபாணிக்கு மாத ஊதியம் 3 சக்கரம் என்றும் மற்றொரு ஓவியர் முத்துக்கிருஷ்ணன் என்பவருக்கு 3 சக்கரம் என்றும் ஓராவணம் கூறுகிறது.

விட்டோபாவின் திருவுருவம் மற்றும் கண்ணன் நான்கு கைகளுடன் தொட்டிலில் படுத்துத் தன் கட்டை விரலை வாயில் வைத்துக்கொண்டிருப்பது போன்ற திருவுருவம் போன்றவையும் வரையப்பெற்றன.

சித்திரம் கோவிந்தசாமி என்பவர் 1891-இல் இரண்டாம் சிவாஜியின் உருவம் எழுதிக்கொடுத்து ரூ. 200 பெற்றுக்கொண்டார்.

கி.பி. 1832-இல் சிவகங்கைக்கோட்டை அரண்மனையில் ஓவியர் மூவர் பணியிலிருந்தனர் என்றும், போதே மகாலில் கிருஷ்ணா என்றொருவர் புதுச்சேரியிலிருந்து வந்திருந்தார் என்றும் தெரியவருகிறது.

கி. பி. 1836-இல் சாரங்கபாணி என்பவர் கோபுரங்கள் சிலவற்றை எழுதிக்கொண்டு வருவதற்காகச் சிலவற்றை எழுதிக்கொண்டு வருவதற்காகச் சென்றிருந்தார் என்பது ஓராவணக் குறிப்பாகும்.

இதுபோன்றுள்ள எண்ணற்ற குறிப்புக்களால் ஓவியக் கலைக்கு அவர் செய்த ஆக்கம்பற்றி நன்கறியமுடிகின்றது.

பிற மொழியாளர் தொடர்புகளுக்கு மொழிபெயர்ப்பாளர் பணி எவ்வளவு அவசியம் என்பதை நன்குணர்ந்த சரபோஜி மன்னர் டேனிசு நாட்டு நல்லுறவுக்காகத் துபாசி (துவிபாஷி) குப்பண்ணன் என்பவரை நியமித்ததையும், அச்சுக்கலைப் பணியில் அவரது பங்கு குறித்தும் நூலகர் திருமதி. **கே. இராமதிலகம்** இக்கட்டுரையில் விவரிக்கின்றார்.

# சரபோஜியும் குப்பண்ணனும்

பண்டைக்காலந்தொட்டு நம்நாடு பிறநாட்டுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது. வாணிகம், பொருளாதாரத்தின் ஒரு கிளையாகும். இது பண்டமாற்றையும் ஓரளவு உற்பத்தியையும் அடிப்படையாகக்கொண்டது.

கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரிட்டனின் வாணிகம் வலுவடையத் தொடங்கியது. உலகத்தின் பல பாகங்களிலும் பல வாணிகக் கம்பெனிகள் நிறுவப்பட்டன, இவை போர்ச்சுகல், ஸ்பெயின், ஹாலாந்து. பிரான்ஸ் முதலிய நாட்டவர்களின் வாணிக ஆதிக்கத்துக்குப் போட்டியாக அமைந்தன.

இவ்வாறு வாணிகம் சிறப்பாக நடைபெறவேண்டியதை முன்னிட்டு இடைத்தரகராகக் கம்பெனியார்களுக்கும் இந்திய அரசர்களுக்குமிடையே இந்தியர் ஒருவர் நியமிக்கப்படுவார். அவரை 'துபாஷி'[1] என்றழைத்தனர். இப்படித் 'துபாஷி'யாகப் பணியாற்றியவர்களில் குப்பண்ணன் என்பவரும் ஒருவர்[2].

தஞ்சையை அரசு ஆண்ட மராத்திய மன்னர் இரண்டாம் சரபோஜி மகாராஜா காலத்தில் மராட்டிய மன்னருக்கும் டேனிசு கவர்னருக்கும் துபாஷியாகக் குப்பண்ணன் பணியாற்றினார்.

கி.பி. 1713ல் தரங்கம்பாடியில் நிறுவப்பட்ட லூதரன் மிஷன் அச்சகமும் சென்னையில் தொடங்கிய எஸ்.பி.சி.கே. அச்சகமும் இந்தியாவிலேயே முதன் முதலில் அமைக்கப்பட்ட அச்சகங்கள் எனலாம்.

---

1 த்விபாஷி என்பதன் மருவுச் சொல்—இரு மொழிகளில் பேசுவதில் வல்லவர்.

2 சோழ மண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும் ஓவியங்களும்.
—குடவாயில் பாலசுப்ரமணியன், பக்கம்-190

இவ்வாறு அச்சகங்கள் அதிகமாக வளர்ச்சியடையாமல் இருந்த காலத்தில் சரபோஜி மன்னரது அரண்மனையில் "நவவித்யா கலாநிதிசாலா" என்ற அச்சுக்கூடம் ஒன்று இருந்ததும் அதனைக் 'குப்பாக்கியபட்' என்பவர் நிருவகித்து வந்ததுபற்றியும் பல குறிப்புக்கள் சரசுவதிமகால் நூலகத்தில் காணக் கிடைக்கின்றன. முதன்முதலில் தமிழ்நாட்டில் அச்சு யந்திரத்தை அறிமுகப்படுத்திய டேனிசு நாட்டவருக்கும் மராத்திய அரசுக்கும் துபாஷியாகப் பணிபுரிந்த குப்பண்ணன் மூலமாக தஞ்சை அரண்மனையில் அச்சுக்கூடம் நிருவி இருக்க வாய்ப்புக்கள் இருக்கலாம் என்றும் அறிய முடிகிறது. மராத்திய மொழியில் 'குப்பாக்கியபட்' என்பது குப்பண்ணனாக இருக்கலாம்.

சரபோஜி மன்னர் காலத்தில் 'பாவார்த்த இராமாயணம்' என்னும் அச்சுநூல் ஒன்றிலுள்ள மராத்தியமொழிக் குறிப்பால் குப்பாக்கியபட்டர் என்பாரது அச்சு யந்திரத்தில் அச்சிடப் பெற்றதாக அறியமுடிகிறது. இந்த அச்சு, கல்லினால் செதுக்கப்பட்ட எழுத்தாகவும், படங்கள் மரக்கட்டையால் செய்யப்பட்டதாகவும் அறியமுடிறது.

குமாரசம்பவ சம்பு, அமரகோசம், தர்க்க சங்கிரஹம், முக்தாவளி, ஆகிய சமஸ்கிருத நூல்கள் படங்களுடன் அரண்மனை அச்சுக்கூடத்தில் அச்சிடப் பட்டுள்ள நூல்களில் குறிப்பிடத் தக்கவையாகும். இவற்றில் பாவார்த்த இராமாயணம் என்னும் மராத்தியமொழி நூலும் உள்ளது. இந்த நூல்கள் அனைத்துமே இன்றும் சரஸ்வதிமகால் நூலகத்தின் அருங்காட்சியகத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன.

துபாஷியாகப் பணியாற்றிய குப்பண்ணனின் உருவப்படம் வண்ண ஓவியமாக இன்றும் சரஸ்வதிமகால் நூலகத்தில் எழில் குன்றாமல் உள்ளது. இவ்வோவியம் டென்மார்க் ஓவியர் ஒருவரால் காகிதத்தில் தீட்டப்பெற்றது. மராத்திய அரண்மனை உடையில் தன் இடக்கரத்தில் நீண்ட கோலேந்தி வலக்கரத்தை வயிற்றில் மடித்துவைத்தும், தலைப்பாகையுடனும் முறுக்கிவிட்ட மீசையுடனும் நின்றகோலத்தில் காட்சி நல்குகிறார். ஓவியத்தின் இடப்பக்க மூலையில் டேனிசு மொழியில் 1788 அக்டோபர் 3 என்ற நாட்குறிப்பும், குப்பண்ணன், தஞ்சாவூர் என்ற பெயர்களும் எழுதப்பெற்றுள்ளன.

இவ்வாறு வேற்று நாட்டினருடன் வாணிகத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள இடைத்தரகராக நின்றவர்களின் மொழிப்பணி என்றென்றும் நிலைத்து நிற்கும். காலத்தால் அழியாதது. இதுபோன்ற நற்பணிகளுக்கு சரபோஜி மன்னர் ஆதரவு நல்கி மேன்மேலும் வளரச் செய்தார். இச்செயல் மனத்தில் என்றும் அழியாத நிலைத்த புகழுடன் நிற்கும்.

பன்மொழிப் புலவர்கள் போற்றிய வித்தகராய்த்திகழ்ந்தவர் சரபோஜிமன்னர். மராத்தியப் புலவர்கள் போற்றிய அவர்தம் புகழ் மாலையை இங்கு தமிழில் தருகிறார் சரசுவதி மகால் மராத்திப் புலவர் திரு. **டி. ஆர். பீமராவ்** அவர்கள்.

# புலவர்கள் போற்றிய புகழ்மிகு மன்னர்

சரபோஜி மன்னர் அவையைப் பன்மொழிப் புலவர்கள் அலங்கரித்து, மன்னரைப் புகழ்ந்து பாடியும், தங்கள் நூல்களில் அவர்தம் குணநலம், ஈகைத் தன்மை, புலவர்களை மதித்தல் ஆகிய செயல்களைப் புகழ்ந்து எழுதியிருக்கின்றனர். இங்கு தஞ்சையில் வாழ்ந்த மராத்திமொழிப் புலவர்கள் பற்றியும், அவர்கள் நூல்கள் பற்றியும் சுருக்கமாகக் காண்போம்.

சரபோஜி மன்னர் அவையில் ரங்கநாதகவி, உடகே கோவிந்தாச்சாரியார், கோவிந்தகவி, விருபாட்சகவி, துண்டிசுதசிவா, ஏகமாஜி பண்டிதர் போன்ற புலவர்கள் பல அறிய நூல்களை மன்னர் மனம் மகிழ்விக்கப் படைத்தனர். புலவர்கள் தங்கள் படைப்புக்களில் தங்களை கௌரவித்த மன்னரின் குணநலன்களைப் புகழ்ந்து எழுதி தங்கள் நன்றிக்கடனைச் செலுத்தி இருக்கின்றனர்.

**ரங்கநாதகவி** : இப்புலவர் நாடக இலக்கியம் படைப்பதில் புலமைப் பெற்றவர். இவர் எழுதிய நாடகங்களில் சரபோஜி மன்னரைப் புகழ்ந்து கூறியிருக்கிறார். அவற்றைக் காண்போம்.

**ஸ்ரீ கணேச விஜய நாடகம்** — போசலகுலம் என்னும் சந்திரனுக்கு ஒளி எவ்வாறு பிரகாசமாக விளங்குகிறதோ அவ்வாறு ஒளியுடன் விளங்கி கருணைக்கடலைப்போல் திகழ்பவர். பெற்றோர்கள் எவ்வாறு தங்கள் செல்வங்களைப் பேணிக்காப்பாற்றுவார்களோ அவ்வாறு நாட்டு மக்களை அன்புடன் காக்கிறார்.

வறுமை என்னும் பிணியால் வாடும் புலவர்களுக்கு வரம் கொடுக்கும் தெய்வம்போல விளங்கி வருகிறார். இவ்விதமாக ஸ்ரீ துளஜேந்திரரின் மைந்தர் ஸ்ரீ சரபோஜி மகாராஜா, சோழதேசத்தின் அரியணையில் அமர்ந்து அலங்கரிக்கிறார். இந்தச் சபையில் எல்லாம்கற்ற புலவர்கள் முன்னிலையில் ரங்கநாதகவி என்னும் நான் இந்த கணேச விஜய நாடகத்தின் நிறைவாக சரபோஜி மன்னருக்கு ஆசிகூறி வாழ்த்துகிறேன்.

இந்த 'கணேச விஜய நாடக'த்தைப் பார்த்த பண்டிதர்கள், பாமரர்கள் யாவருக்கும் நன்மைகள் பல செய்து வருபவரும், தென்திசைக் கடல் முதல் இமயமலை வரையில் புகழைப்பரப்பி தேச யாத்திரை செய்து வாழ்ந்துவரும் மன்னரும், அவரது மக்களும் செல்வங்களுடன் சீரும் சிறப்புடன் வாழ்வாராக. வானம் காலத்தில் மழையைப் பொழியட்டும். சத்தியம் பேசப்படட்டும், எல்லாருக்கும் எல்லா நன்மைகளும் உண்டாகட்டும் என வாழ்த்துகிறேன்.

ஸ்ரீ சிவராத்திரி நாடகத்தில் — தன் மைந்தன் சிவாஜியைத் தன்னுடன் சிம்மாசனத்தில் அமரச்செய்து, தேச மக்களுக்குச் செல்வங்களை வழங்குகிறார். அவர்கள் குறைகளைப் போக்கி மகிழ்விக்கிறார். அத்தகைய சரபோஜி மன்னர் அனைத்துச்செல்வங்களும் பெற்று நீடூழி வாழ்வாராக.

ஸ்ரீ கணேச லீலார்ணவம் நாடகத்தில் — போசலகுலத்திற்குப் பாற் கடலைப்போல் தூய்மையானவர், சந்திரனைப்போல் குளுமையானவர், ராஜராஜ துளஜேந்திர ராஜனின் மைந்தரான சோழதேசத்தைப் பரிபாலனம் செய்யும் சரபோஜி மன்னர் அரியணையில் அமர்ந்து காட்சியளிக்கிறார். இவர் தைரிய மானவர், உதாரகுணம் உள்ளவர், மக்களைக்காப்பதில் உறுதியானவர், பணி வானவர், நற்குணம் பொருந்தியவர். அந்நிய அரசர்களுடன் ஒப்பிட்டால் இவரே சிறந்தவர் என சரபோஜி மன்னரைப் புகழ்ந்து பாடுகிறார்.

ஸ்ரீ கங்காவிஸ்வேஸ்வர பரிணயம் நாடகத்தில் — மன்னர், ஏழைகள் மனம் மகிழ்ச்சி அடையும் விதத்தில் செல்வத்தை வாரி வழங்கும் குணம் உடையவர், சங்கீதம் காவியம் முதலியவைகளை இயற்றுவதில் புலமைப் பெற்றவர், போசல குலத்தின் தெய்வமான ஸ்ரீ சிவபெருமானை எந்நேரமும் நினைவில் கொண்டிருப்பவர், இவருடைய மைந்தர் சிவாஜி மன்னர் எல்லா நற்குணங்களும் பெற்றவர். இவர்களை 'நீடூழி வாழ்க' என வாழ்த்துகிறேன்.

**ஸ்ரீ கோவிந்தகவி :** வைசாக மகாத்மியம் (புராண நூல்) — சரபோஜி மன்னரைப் புலவர் புகழ்ந்து இந்த நூலில் கூறுகிறார் : அழகு பொருந்திய சோழநாட்டில் காவேரி நதியின் தெற்கு பாகத்தில்,பஞ்சநத க்ஷேத்திரத்திற்குப் பக்கத்தில் தஞ்சாபுரி மிகப்பிரசித்தமானதாகும். அந்த தஞ்சாபுரியை சரபோஜி மன்னர் ஆட்சிசெய்து வருகிறார். அவர் புகழை வர்ணிப்பதால் எல்லோர் மனமும் மகிழ்ச்சி அடையும்.

சரபோஜி மன்னர் கங்கைக் கரைக்குச் சென்று நீராடி வந்தார். அவர் குலதெய்வம் ஸ்ரீ சந்திரமௌளீஸ்வரர், அவர் பிறந்த குலம் பொன்போன்று தூய்மையான குலம் (போசலகுலம்). இவர் தனது இரு பெண்களை கன்யா தானம் (திருமணம்) செய்துகொடுத்தார். சாஸ்திரத்தில் குறிப்பிட்டபடி

ஆயிரம் பசுக்களை தானம் செய்தார். இப்பேர்ப்பட்ட தானதருமங்களால் ஏழை அந்தணர்களைச் செல்வச் செழிப்புடன் இருக்கச் செய்தார்.

மன்னர் பேசுவதிலும், பழகுவதிலும் நிதானம் கொண்டவர். தன்னைக் காண வருபவர்களைக் கருணையுடன் காணும் செயலுடையவர். சிலசமயத்தில் கோபமும், சிலசமயத்தில் சாந்தமும் இருப்பது சகஜம். ஆனால் இவரிடத்தில் கோபம் என்பதே இல்லை. உலகத்தில் வனத்தில் புலியானது கோபமுடன் காணப்படும். ஆனால் அதன் கோபம் சிங்கத்தின்முன் இல்லாமல் போய் விடும். அதுபோல ஒருவரும் விரோதிகளே இல்லாதவர். இவரது அரண்மனைச் சேவகர்கள் எப்பொழுதும் உண்மையாக இருப்பவர்கள், அந்தணர்கள் எந்நேரமும் ஆதரிக்கப்படுவார்கள். இவ்வாறாக இருக்கும்போது, இங்கு கோபதாபங்களுக்கு இடமேது? இப்பேர்ப்பட்ட நல்ல குணமுடைய அரசனால் ஆதரிக்கப்பட்டவன் நான். மன்னர் என்னை வடமொழியில் பிரசித்தமாக இருக்கும் இந்த வைகாச மகாத்மியத்தை மராத்தியில் மொழிபெயர்த்து எழுதுமாறு வேண்டினார். அவர் ஆணையை ஏற்று, சர்வஜித்து வருஷம் கார்த்திகை மாதம் வியாழக்கிழமை பஞ்சமி திதி அன்று இந்நூலை எழுதி முடித்தேன். நூலில் தவறுகள் ஏதேனும் காணப்பட்டால் படிப்பவர்கள் மன்னித்து அருளவேண்டும் என (கோவிந்தகவி) நான் வேண்டிக்கொள்கிறேன்.

**விருபாட்சகவி :** புராண நூல்கள் — **அக்னீஸ்வர மகாத்மியம் :** சரபோஜி மன்னர் சிறந்த சிவபக்தர், இவரால் பல சிவன் கோயில்கள் புதுப்பிக்கும் பணி நடந்தன. சிவபூஜையில் நியதியுடன் செயல் படுபவர். பெற்றோர்களைப்போல் நாட்டு மக்களைப் பேணிக்காக்கிறார். இம் மன்னரைப் பிறதேச மன்னர்களும் மதித்து கௌரவிக்கின்றனர். இவர் புகழ் நான்கு திசையிலும் பரவியுள்ளது. க்ஷத்திரிய தர்மத்தை நிர்மானித்தார். இவரிடம் பல நற்குணங்கள் குடிகொண்டிருக்கின்றன. இவர் பல தானதர்மங்களைச் செய்கிறார். இவர் சோழ தேசத்திற்கு அதிபதி. நல்ல மனதுடனும், அடக்கத்துடனும் காணப்படுகிறார். பெற்றோர்களைப்போல் மக்களைக் காப்பாற்றுகிறார். அரசர் கீர்த்திமானாக விளங்குகிறார். சிவதாசனான நான் இந்த சரபோஜி மன்னர் ஆணையின்பேரில்இந்த அக்னீஸ்வரமகாத்மியம் புராண நூலை மராத்தி மொழியில் எழுதியுள்ளேன்.

தேசமக்கள் மன்னர் சரபோஜியைத் தமது பெற்றோராகப் புகழ்ந்து கூறுகின்றனர். எல்லோருக்கும் கல்விகற்க வழிசெய்து வாழவழிசெய்துள்ளார், இம்மன்னரது புகழ் மிகவும் பிரசித்தமானது. நவவித்யா கலாநிதிசாலை என்ற பெயரில் எல்லா மொழிகளையும் கற்க வழிசெய்துள்ளார். மக்களின் குறைகளைத் தீர்த்துவைக்கிறார். நான் அக்கல்விச்சாலையில் படித்த மாணவன். மன்னருக்கு என் நன்றிக்கடனைச் செலுத்த சிறுவனான நான் இப்புராண மகாத்மியநூலை எழுதினேன். சிவராத்திரியன்று இந்நூல் எழுதி முடிக்கப்பட்டது.

**சிவபக்தவிலாசம்** : (63 நாயன்மார்கள் வரலாறு) சரபோஜி மன்னர் நற்குணங்கள் பொருந்தியவர், மன்னிக்கும் தன்மை உடையவர், பராக்கிரமம் பொருந்தியவர். எல்லா லக்ஷணங்களும் பொருந்தியவர். ஈகை குணம் கொண்டவர். இவர் பதினாறுவகை தானங்கள் செய்தவர், காசி முதலான க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்தவர். சிவாலயம் புதிதாகக் கட்டியும் பாழடைந்த கோயில்களைப் புதுப்பித்தும் உள்ளார், இம்மன்னர் ஆணையினால் நான் இந்த சிவபக்த விலாஸம் என்னும் நூலை இயற்றியுள்ளேன்,

**உடகே கோவிந்தாச்சார்** : இந்தப் புலவர் பார்வதி பரிணயம், ஹரி லீலா, உமா-ரமா சம்வாதம் போன்ற தலைப்பில் சிறுநூல்களை ஹரிகதை செய்யும் பாணியில் நிரூபணம் என்னும் தலைப்பில் எழுதியிருக்கிறார். அதில் சரபோஜி மன்னரைப் புகழ்ந்து கூறுகிறார்.

போசல குலத்திற்குக் கலசமாகத் திகழும் சரபோஜி மன்னர் செய்த உதவியால் இந்த நூல்களை எழுதியுள்ளேன். இம்மன்னர் தஞ்சைமாநகரை தருமத்துடன் அரசாட்சி செய்து வருகிறார். புலவர்களை மதிப்பதில் முதன்மையாகத் திகழ்கிறார் எனப் புகழ்ந்து போற்றுகிறார்.

**துண்டி சுதசிவா** : 'திவ்யதேச யாத்திரை' என்னும் நூலில் மன்னர் சரபோஜியைப் புகழ்ந்துள்ளார். அதில் அவர் குறிப்பிடும்போது சரபோஜி மன்னர் சோழ தேசத்தில், அழகான காவிரி நதிபாயும் பஞ்சநத க்ஷேத்திரம் இருக்கிறது. இந்தப் புனித ஸ்தலத்திற்குச் சமீபம் தென் திசையில் ஒரு பெரிய மதில்கள் உள்ள கோட்டையுடன் கூடிய தஞ்சை மாநகர் இருக்கிறது. அங்கு பெரிய சிவன் கோவில் பிரஹதீஸ்வரர் என்னும் பெயரில் சந்திரமௌளீஸ்வரர் இருக்கிறார்.

இப்பேர்ப்பட்ட சிறந்த தஞ்சை தேசத்திற்குப் புகழ்சேர்க்கும் வகையில் சத்திரபதி சரபோஜி மன்னர் அரசுபுரிந்து வருகிறார். இவர் சரப அவதாரம் என்று புகழ்ந்து பேசப்படுகிறது. செல்வச் செழிப்பும், கருணைக்கடலும் போன்றவர். இம்மன்னர் பல கோவில்களையும், தர்மச் சத்திரங்களையும் அமைத்தவர். சரபோஜி மன்னர் தன் ஆட்சிப்பொறுப்பைத் தன் மகன் சிவாஜியிடம் கொடுத்துவிட்டு, காசி யாத்திரை மற்றும் தேச யாத்திரை செய்து புகழடைந்தவர் எனப் புகழ்ந்து கூறுகிறார் புலவர் துண்டி சுதசிவா.

**ரகமாஜி பண்டிதர்** : இப்புலவர் குதிரைகள் பற்றிய அரிய செய்திகளைத் தொகுத்தும் வடமொழியில் உள்ள சாலிஹோத்திரியின் அஸ்வ சாஸ்திரத்தை மராத்தியில் மொழிபெயர்த்தும் எழுதியிருக்கிறார். இந்நூலை சரபோஜி மன்னருக்காக எழுதியதாக நூலில் குறிப்பிட்டு, மன்னரைப் புகழ்ந்தும் பாடி இருக்கிறார்.

ஸ்ரீமந்த மகாராஜா துளஜாவின் சூரப்புதல்வரான சரபோஜி தாங்களும் தங்கள் மைந்தர் இளவரசர் சிவாஜியும் மிகவும் நல்ல குணம் பொருந்தியவர்கள். உங்களுடைய வேண்டுகோளின்படி நான் இந்த நூலை இயற்றியுள்ளேன். தாங்கள் மிகவும் தயை உள்ளவர், மற்றும் மன்னிக்கும் குணம் உள்ளவர். மிகவும் புத்திகூர்மை உள்ளவர் ஆகையால் புகழ்கிறேன். சூரியனுக்கு முன்பு தீபம்போல் தங்கள்முன் நான் இருக்கிறேன். இதை ஏற்றுக்கொண்டு தாங்கள் என்னை கௌரவிக்க வேண்டுகிறேன் என்று கூறி முடிக்கிறார்.

சாலிவாஹன சகம் ஆயிரத்து எழுநூற்று நாற்பத்திநான்காம் ஆண்டு சித்ரபானு சம்வத்சரம், கார்த்திகை மாதம் பகுள (சுக்ல) பட்சம், நவமியன்று இந்நூல் எழுதி முடிக்கப்பட்டது, ருக்மாங்கத பண்டிதரின்பேரன், ஸ்ரீ கங்காதர பண்டிதரின் மைந்தன் மேதினிகர ரகமாஜி பண்டிதன், நரசிம்மரின் அருளினால் இந்த அஸ்வ சாஸ்திர நூல் எழுதினேன்.

இவ்வாறாக சரபோஜி மன்னர் அவையிலிருந்து அலங்கரித்த மராத்தி மொழிப்புலவர்கள் மன்னரின் குணநலன்களையும், புலவர்களுக்குச் செய்த வெகுமதிகளைப்பற்றியும் புகழ்ந்து பாடியும் தங்களை ஆதரித்த மன்னரைக் கௌரவித்துமிருக்கின்றனர்.

சரபோஜி மன்னரின் பிறந்த நாள் விழாக்காணும் இந்நந்நாளில் இதனை நினைவுகூறுதல் நலமாகும்.

---

இந்தக் கட்டுரை எழுதத் துணைபுரிந்த நூல்கள் :

நாடக நூல்கள் : *1, 1710* கணேசவிஜயம், *2. 1743* சிவராத்திரி, *3. 1709* கணேசலீலார்ணவம், *4. 1715* கங்காவிஸ்வேஸ்ர பரிணயம்.

புராண நூல்கள் : *1.* D. No. *619* வைகாச மகாத்மியம்,
*2.* ,, *533* அக்னீஸ்வர மகாத்மியம்.

வரலாற்று நூல்கள் : D. No. *622* சிவபக்தவிலாசம்.

இதர நூல்கள் : S. No. *191, 192, 194* பார்வதி பரிணயம், ஹரிலீலா விலாசம், உமாரமாசம்வாதம்.
*259* திரிஸ்தல (திவ்யதேச) யாத்திரை அச்சு புத்தகம்.
*188* அஸ்வ சாஸ்திரம்.

கல்வெட்டுக்கள் என்பவை வரலாற்றுப் பெட்டகங்கள் மன்னர் சரபோஜி கல்வெட்டுத் துறையில் செய்த சாதனைகளை இங்குப் பட்டியல் இட்டு பாங்குடன் கூறுகிறார் பேராசிரியர் **செ. இராசு,** அவர்கள்.

# இரண்டாம் சரபோசி மன்னர் கல்வெட்டுக்கள்

பல்வேறு கலைகளில் நாட்டம்கொண்டு புதுமையைச்செய்து பெரும் புகழ்பெற்ற தஞ்சை மராட்டிய மாமன்னர் இரண்டாம் சரபோசி கல்வெட்டுக் களைப் பொறிப்பதிலும் பல புதுமைகளைச் செய்துள்ளார். அதன்மூலம் எல்லா மன்னர்களைக்காட்டிலும் சிறப்புற்று வரலாற்றில் அவர் திகழுகின்றார். அவருடைய கல்வெட்டுக்களில் பல்வேறு தனித்தன்மைகள் விளங்குகின்றன.

1. அழகிய மலர் வேலைப்பாடுகளின் இடையில் கல்வெட்டுக்களைப் பொறித்துள்ளார்.

2. வெண்பளிங்குக் கற்களிலும், சலவைக் கற்களிலும் (கடப்பை) சில கல்வெட்டுக்களையும், குறிப்பாகப் பன்மொழிக் கல்வெட்டுக்களையும் பொறித்துள்ளார்.

3. இரு மொழிகளிலும் (தமிழ் - மராத்தி; தமிழ் - ஆங்கிலம்; மராத்தி - பாரசீகம்) மும்மொழிகளிலும் (மராத்தி - தமிழ் - தெலுங்கு; மராத்தி - தமிழ் - ஆங்கிலம்) நான்கு மொழிகளிலும் (மராத்தி - தமிழ் - தெலுங்கு - வடமொழி) ஐந்து மொழிகளிலும் (மராத்தி - தமிழ் - தெலுங்கு - ஆங்கிலம் - உருது) கல்வெட்டுக்களை அவர் வெட்டி யுள்ளார். அதனால் பிறமொழியாளர்களையும், பிறமொழிகளையும் நேசித்த பான்மை நன்கு புலப்படுகிறது. புதுமைப் புனையும் பாங்கும் தெரிகிறது.

4. எட்டு மொழிக் கல்வெட்டைப் படி எடுப்பவர்களையும், அவைகளைப் படிப்பவர்களையும் தமது அரண்மனையில் வைத்திருந்தார். இப் போதைய கல்வெட்டுப் படி எடுக்கும் முறையை அவர்கள் கையாண்டனர். அவர்கள் 'அட்லிபிகாரர்' எனப்பட்டனர்.

5. தஞ்சைப் பெருவுடையார் கோயில் முகமண்டப முன்வாயிற்படிகள் அமைக்கும்போது அதனை வளைத்துக்கட்டிச் சுவரிலுள்ள சோழர் கல்வெட்டுக்கு எவ்வித இடையூறும் செய்யாமல் காத்தார்.

6. தம் மரபு வரலாற்றைப் போன்சலே வமிச சரித்திரம் என்ற பெயரில் எழுதுவித்து அந்நூல் முழுவதையும் பெருவுடையார் கோயில் தெற்குச் சுவரில் கல்வெட்டாகப் பொறித்து வைத்தார். அது உலகிலேயே மிகப் பெரிய கல்வெட்டு என்ற பெயரைப் பெற்றுள்ளது. சரசுவதி மகால் சார்பில் அக்கல்வெட்டு நூலாக வெளிவந்துள்ளது.

7. மராட்டிய மொழிக் கல்வெட்டுக்களையே பெரும்பாலும் வெட்டிய அவர் சொற்களுக்காக இடர்ப்பாடு கொள்ளாமல் பல்வேறு தமிழ்ச் சொற்களை மராட்டியக் கல்வெட்டில் பொறிக்குமாறு செய்தார். அவ்வாறு செய்ததில் தமிழுக்கு மிகவும் சிறப்பளித்தார் என்றே சொல்லவேண்டும். பிற்கால மொழியியல் கொள்கைக்கு முன்னோடியாக அன்றே வழி காட்டினார் எனலாம். (அவ்வாறு மராட்டிக் கல்வெட்டில் பயின்று வந்துள்ள தமிழ்ச் சொற்கள் : அங்கணம், எல்லை, குட்டை, குழி, கோபுரம், திங்கள், திருப்பணி, தேர்முட்டி, நஞ்சை, படித்துறை, பாத்திரம், புஞ்சை, மடப்பள்ளி என்பனவாம்).

8. பெரிய கோயிலில் மராட்டிக் கல்வெட்டுக்களைப் பொறித்த போதும் பழைய கல்வெட்டுகட்கு எந்த ஊறும் விளைவிக்காமல் காத்தார். காலியுள்ள இடங்களிலேயே தம் கல்வெட்டைப் பொறித்தார்.

9. திருப்பணிக்கும், கல்வெட்டுக்களைப் பொறிக்கவும் பெரும்பாலும் செவ்வெறி படர்ந்த கருங்கற்களைத் தேர்ந்தெடுத்தார்,

10. கோயில்களில் முன்பு பளிச்சென்று தெரிகின்ற அமைப்பில் முன்முகப்பை பெரிய எழுத்துக்களில் தம் கல்வெட்டைப் பொறித்துள்ளார்.

இதுவரை படி எடுக்கப்பெற்ற இரண்டாம் சரபோசி கல்வெட்டுக்கள் (எழுத்துப் பொறிப்புக்கள்) 39. இவற்றில் 6 கல்வெட்டுக்கள் தமிழில் மட்டுமே எழுதப்பெற்றன. பன்மொழிக் கல்வெட்டில் மூன்று தமிழ்க் கல்வெட்டுக்கள் உள்ளன. ஆக மொத்தம் தமிழில் ஒன்பது கல்வெட்டுக்கள் உள்ளன.*

---

* இக்கல்வெட்டுக்கள் அனைத்தும் இக்கட்டுரையாசிரியரால் தொகுத்து தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள 'தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்', 'தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள்' என்னும் நூல்களில் வெளியாகியுள்ளன.

மராட்டிக் கல்வெட்டுக்கள் :

1. தஞ்சைப் பெருவுடையார் கோயில் விநாயகர் சந்நிதி தெற்கு மேற்குச் சுவர்க் கல்வெட்டு கி. பி. 1798 (கோயிலுக்குக் கொடுத்த எண்ணற்ற பரிகலங்கள், அணிகலங்கள் குறிக்கப்படுகின்றன).
2. வெள்ளித்தட்டு, விபூதி மடல், எழுத்துப் பொறிப்பு 16—12—1798.
3. அரண்மனையில் கௌரி விலாசம் கட்டிய கல்வெட்டு, செப்டம்பர் 1800.
4. பெருவுடையுார் கோயில், கிழக்குப் பிரகாரக் கல்வெட்டு 14—5—1801.
5. பெருவுடையார் கோயில் வடக்குப் பிரகாரத் தூண் கல்வெட்டு (அ) 14—5—1801.
6. பெருவுடையார் கோயில் வடக்குப் பிரகாரத் தூண் கல்வெட்டு (ஆ) 14—5—1801.
7. பெருவுடையார் கோயில் விநாயகர் கோயில் வாயிற்படிக் கல்வெட்டு 14—5—1801.
8. பெருவுடையார் கோயில் வாகன மண்டபப் படிக் கல்வெட்டு 14-5-1801.
9. ஒரத்தநாடு முக்தாம்பாள் சத்திரக் கல்வெட்டு 16-1-1802.
10. பெருவுடையார் கோயில் விநாயகர் கோயில் வடக்கு மேற்குச் சுவர்க் கல்வெட்டு 21—7—1802 (வெட்டியான் வழக்குப்பற்றியது).
11. பெருவுடையார் கோயில் மண்டுகத் தீர்த்தக் கல்வெட்டு 23—7—1803.
12. போன்சலே வம்ச சரித்திரக் கல்வெட்டு 13—12—1803.
13. தஞ்சை எல்லையம்மன் கோயில் கல்வெட்டு 14-2-1804.
14. தஞ்சை சங்கரநாராயணர் கோயில் கல்வெட்டு 8-6-1804.
15. தஞ்சை பங்காரு காமாட்சியம்மன் கோயில் கல்வெட்டு 19-8-1805.
16. தஞ்சை விஜயராமர் கோயில் கல்வெட்டு 30-8-1805.
17. தஞ்சை கிருஷ்ணன் கோயில் கல்வெட்டு 2-11-1805.
18. தஞ்சை காசி விசுவநாதர் கோயில் கல்வெட்டு 8-2-1806.
19. ஒரத்தநாடு யாகசாலைக் கல்வெட்டு (அ) 23-2-1810.
20. ஒரத்தநாடு யாகசாலைக் கல்வெட்டு (ஆ) 23-2-1810.
21. மதுரை மீனாட்சியம்மன் கோயில் நாகாபரணம் 1817.
22. கும்பகோணம் சங்கர மடம் கல்வெட்டு 10—2—1822.
23. பெருவுடையார் கோயில் காளை வாகனம் 1824.
24. புன்னைநல்லூர் மாரியம்மன்கோயில் கல்வெட்டு 5-1-1831.

25. தஞ்சை மேல சிங்கப்பெருமாள் கோயில் கல்வெட்டு 14-5-1831.

26. தஞ்சை தஞ்சபுரீசுவரர் கோயில் கல்வெட்டு 14-5-1831.

27. திருவரங்கம் பதக்கப் பொறிப்பு.

28. பெருவுடையார் கோயில் வடக்குப் பிரகாரக் கல்வெட்டு

மேற்கண்ட மராட்டிக் கல்வெட்டுக்களில் 5 கல்வெட்டுக்கள் வைணவக் கோயில்கட்கு உரியவை. எனவே அவருக்கு மதவேற்றுமை இல்லை என்பதையும் இவற்றின்மூலம் அறிகின்றோம். இக்கல்வெட்டுக்கள் மூலம் சரபோசி மன்னர் காலத்திய கட்டக்கலை, வழிபாட்டு முறை, வழக்கு, அணி கலன்கள், அலுவலர், ஆட்சிமுறை இவைபற்றி நன்கு அறிகின்றோம். பெரும்பாலும் மண்டபங்கள் கட்டப்பெற்ற செய்திகள் உள்ளன.

மாமன்னர் சரபோசியின் தமிழ்க் கல்வெட்டுக்கள் சிறப்புடையன. அவைகளையும் கீழே காணலாம்.

1. **பெருவுடையார் கோயில் வெள்ளித்தட்டு 16-12-1798.**

உசித்தார்த்தி-ஷு மார்கழிமீ 5உ ஸ்ரீபிரகதீஸ்வர சுவாமிக்கு ரா சறபோசி மகாராசா சாயேபு அவர்கள் உபையம் சேர் $4\frac{1}{2}$ பலம் 3.

2. **ஷ விபூதி மடல்**

ஸ்ரீ பிரகதீஸ்வர சுவாமிக்கு ரா சறபோசி மகாராசா சாயேபு அவர்கள் உபையம் சேர் $1\frac{3}{4}$ பலம் $1\frac{1}{4}$.

3. **ஒரத்தநாடு வன்னிப்பட்டுக் கல்வெட்டு (அ) 1805**

சாலியவாகன செகம் 1747 பாத்திப னாமஸம்வச்சரம் சவுபாக்கியவதி முத்தம்மாள்புரம் அன்னசத்திரம் தற்மத்து சேந்த சறுவமானியம் வன்னிப்பட்டு வடபாற்க்கு யெல்லை.

4. **ஒரத்தநாடு வன்னிப்பட்டுக் கல்வெட்டு (ஆ) 1805**

சாலிவாகன செகம் 1747 பாத்திப னாம ஸம்வச்சரம் சவுபாக்கியவதி முத்தம்மாள்புரம் அன்னசத்திரம் தற்மத்து சேந்த சறுவ மானியம் வன்னிப்பட்டு தென்பாற்க்கு யெல்லை.

5. **சாளுவ நாயக்கன் பட்டினம், மனோரா கல்வெட்டு 1814.**

இங்கிலீசு சாதியார் தங்கள் ஆயுதங்களினாலடைந்த செய சந்தோஷங் களையும் போனபாற்தேயின்* தாழ்த்தப்படுதலையும் நினைவுகூரத் தக்கதாக இங்கிலீசு துரைத்தனத்தின் சினேகிதரும் படைத் துணைவரு

---

* போனபாற்தே - நெப்போலியன் போனபார்ட்.

மாகிய தஞ்சாவூர் சீர்மை மகாராசா சத்தரபதி சரபோசி மகாராசா அவர்கள் இந்த உப்பரிகையைக் கட்டி வைத்தார்கள் 1814.

6. **தஞ்சை விட்டோபா கோயில் கல்வெட்டு 1-3-1819.**

ஸ்ரீ மங்கள மூற்த்திர செய்த்தி ஸ்ரீமத் போசல குலமணி சறபேந்திர மகாராசா சாயேப் அவர்கள் ஸ்ரீபாண்டுரங்காலயா பசன சாலா தற்மம் சொஸ்த்ஸ்ரீ சாலியவாகன சகாப்த்தம் 1740 கலியுக சகார்த்தம் 4919 யிதின் செல்லாநின்ற வெகுதானிய ஞூ மாசி மாதம் அமர பட்சம் சதுற்தெசி சோமவாரம் மகாசிவராத்திரி சுபதிநத்தில் யிந்த தற்மம்.


7. **தஞ்சை கீழ நரசிங்கப் பெருமாள் கோயில் 6-2-1821**

ஸ்ரீலெட்சுமி நறசிம்ம சுவாமி புறாதனம் கோவில் பழுதாயிருந்தது. அிதெ சத்தறபதி சறபோசி மகாராசா அவற்கள் கோவில் புதுசாயிக் கட்டி ஸ்த்தலம் சீறணோத்தாறம் பண்ணினாற்கள் சாலிய வாகன சகம் 1742 விக்கிறம ஞூ தையி மீ 27 புதவாரம் பிறதிஷ்ட்டை ஆச்சுது.

8. **திருவையாறு அரசர் கல்லூரி. காவிரிப் படித்துறை. 1924**

**கல்யாண மால்**

மகர்நோன்புச்சாவடி தூயபேதுரு தேவாலயத்திலும், சிவகங்கை பூங்காவின் அருகில் உள்ள சுவார்ட்சு தேவாலயத்திலும் ஆங்கிலக் கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று சுவார்ட்சு பாதிரியார் பற்றிச் சரபோசி பாடிய இரங்கற்பாவாகும்.


OF THE ROMAN EMPIRE.

rious stag entangled his horns in the belt of Basil, and raised him from his horse: he was rescued by an attendant, who cut the belt and slew the animal; but the fall, or the fever, exhausted the strength of the aged monarch, and he expired in the palace, amidst the tears of his family and people. If he struck off the head of the faithful servant, for presuming to draw his sword against his sovereign; the pride of despotism, which had lain dormant in his life, revived in the last moments of despair, when he no longer wanted or valued the opinion of mankind.

ஆங்கில நூலொன்றில் சரபோஜி மன்னர் எழுதிய குறிப்பு.

தஞ்சை மராத்திய அரசின் வரலாற்றோடு மன்னர் சரபோஜியின் ஆங்கில மொழியறிவையும் பாங்குடன் கூறுகின்றார் ஆய்வு அறிஞர் **வ. வேணுகோபாலர்.**

# தஞ்சை மண்ணில் முடியாட்சி

மராட்டிய மாநிலத்தில் தோன்றிய மாவீரர்களில் பெருமை மிக்கவர்களான மாலோஜி, விட்டோஜி என்ற இரு தலைவர்களின் வழியே வந்தவர்கள், பாரத நாட்டின் கலாச்சாரத்தைக் காக்க வழி கண்டவர்கள் ஆவர். மாலோஜியின் குமாரர் ஷஹாஜி குறிப்பிடத்தக்கவர். பீஜப்பூர் சுல்தானிடம் படைத் தலைவராக விளங்கி, சுல்தானுக்காக மைசூர் பிராந்தியத்தை ஆட்சிபுரிந்தவர். ஷஹாஜியை போன்ஸ்லே வம்சம் என்பர். இந்த ஷாஹாஜி போன்ஸ்லேயின் குமாரர்தான் புகழ்பெற்ற சத்ரபதி சிவாஜி மன்னராவார்.

(மராட்டிய வம்சத்திலேயே முதன்முதலாக மகுடம் தரித்த மாவீரர் சிவாஜியாவார். ஷாஹஜி போன்ஸ்லேவுக்கு ஜீஜிபாய் அம்மையாரிடம் பிறந்தவர் சிவாஜி. ஷாஹஜி போன்ஸ்லேக்கு துக்காபாய் அம்மையாரிடம் பிறந்தவர் ஏகோஜி என்ற வெங்காஜி ஆவார்.)

(பீஜப்பூர் சுல்தான் கட்டளைப்படி, ஷாஹாஜியின் குமாரர் ஏகோஜி தஞ்சைக்கு வந்தார். இது நிகழ்ந்தது 1672—1673. தஞ்சையை ஆட்சி புரிந்த நாயக்க வம்சம் சரிந்த நேரத்திலே ரத்தம் சிந்தாமல் தஞ்சை அரியணையில் அமர்ந்தவர் ஏகோஜியாவார். தஞ்சை மக்கள் ஏற்றுக்கொண்ட மன்னராக விளங்கினார் என்பது உண்மையாகும். (நீர்வளமும், நெல்வளமும் சிறந்த தஞ்சைமாநகர், ஏகோஜியின் உள்ளத்தைக் கவர்ந்தது.) வடமாநிலங்களில் சுல்தான்களை எதிர்த்துப் போர்புரிந்த மாவீரர் சிவாஜி அவர்கள் தன் தம்பியான ஏகோஜிக்குத் தஞ்சையை ஆள்வதற்குப் பெரும் துணையாக இருந்தார். (முதலாம் ஏகோஜி எனும் வெங்காஜி தஞ்சையை ஆட்சிபுரிந்த பின்னர் அவரது புதல்வர்கள், புகழ்மிக்க இரண்டாம் ஷாஜி, முதல் சரபோஜி முதல் துளஜாஜி என்ற துக்கோஜி ஆட்சிபுரிந்தார்கள்.) 18-ஆம் நூற்றாண்டின் துவக்க காலத்தில் 1736-வரை இம்மூவரும் ஆட்சி புரிந்தனர். பின்னர் துக்கோஜியின் புதல்வர் இரண்டாம் ஏகோஜி என்ற பாவா சாகேப் ஆட்சி

புரிந்தார். இவர் மிகக்குறுகிய காலத்தில் காலமானார். இதனுல் இவரது மனைவி மராட்டியக்குல வீரப்பெண்மணி சுஜனாபாய் ஆட்சிபுரிந்தார். கி.பி. 1737-38இல் இப்பெண்ணரசியின் ஆட்சிக் காலத்தில்தான் தஞ்சைக் கோட்டையின் கில்லேதார் சையத் என்பவன் சந்தாசாகிப்புடன் சேர்ந்து சதிபுரிந்தான். வீரப்பெண்மணி கோட்டைக்குள் சிறையில் மாண்டாள். சிலர் சையத்துடன் பொருது மாண்டாள் என்பர்.

இப்பெண்மணியோடு தஞ்சை மராட்டிய ஆட்சியின் பெருமை சீர் குலைந்தது. மராட்டிய சேனாதிபதியான மானோஜியின் துணையுடன் சிறுவனான பிரதாபசிம்மன் 1740-இல் ஆட்சிபீடம் ஏறினான். இம்மன்னன் காலத்தில்தான் ஆங்கிலேயர் இந்தியமண்ணில் தஞ்சையின் ஆட்சிக்குட்பட்ட தேவனாம்பட்டிணத்தைக் கைப்பற்றி சொந்தமாக்கிக்கொண்டனர். பிரஞ்சுக் காரர் ஒருபுறமும், ஆங்கிலேயர் ஒருபுறமும் சூழ்ந்துகொண்டு, நாட்டைச் சூறையாடினர். நவாபும், சுல்தான்களும் ஒருபுறமும் சூறையாடினர். பிரதாப சிம்மனுடைய ஆட்சி அமைதியற்ற நிலையில் இருந்தது. மனம் நொந்து 1763-இல் மாண்டான். இம்மன்னனுக்கு இரண்டாம் துளஜா, அமரசிம்மன் என்ற இரு புதல்வர்கள் இருந்தனர். பிரதாபசிம்மனுக்குப் பின் இரண்டாம் துளஜா மன்னர் ஆட்சி புரிந்தார். 18-ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலமது. ஆங்கிலேயரும் ஆற்காட்டு நவாபும், பிரஞ்சுக்காரரும் நாடெங்கும் ஆதிக்கம் கொண்டனர். துளஜாவின் ஆட்சிக்காலத்தில் 1780-க்குப்பின் ஹைதர் அலி நவாப் ஆகியோர் தஞ்சைமீது தாக்கினர். துளஜா மூன்று ஆண்டுகள் அரண்மனையில் சிறைவைக்கப்பட்டார். பின் விடுதலையானார். 1787-இல் துளஜா மரணம் அடைந்தார்.

ஆங்கிலேய கவர்னர் அர்ச்சிபல்டு காம்பேல் சென்னையில் இருந்தார். துளஜா மன்னர் 22—1—1787-இல் 9 வயதுள்ள இரண்டாம் சரபோஜியை சுவீகாரம் எடுத்துக்கொண்டதாக, கவர்னருக்குத் தெரிவிக்கப்பட்டது. (ஹிக்கி பக்கம் 83). ஆனால் பிரதாபசிம்மனின் மற்றொரு புதல்வரான அமர்சிங் ஆட்சிக்குரியவராக கவர்னரால் தேர்வு செய்யப்பெற்றார். 28—6—1798 வரை 11 ஆண்டுகள் அமர்சிங் தஞ்சையை ஆட்சிபுரிந்தார். ராபர்ட்ஸ்வெல் ஆண்டிகுடீஸ் — வால்யூம் II, பக்கம் 93-இல் பின்வருமாறு கூறுகிறார்:—

"துளஜா இறக்கும்போது மராட்டியவம்சத்துக் குழந்தையை சுவீகாரம் எடுத்துக் கொண்டார். சரபோஜி என்ற பெயரை வைத்தவர் துளஜாஜி. உயிருடன் இருக்கும்போதே முறைப்படி சுவீகாரம் எடுத்துக்கொண்டார். தஞ்சை அரண்மனை ரீஜண்டான ஹடில்ஸ்டன் (Hudlston) என்பவரிடம் சரபோஜியை ஒப்படைத்தார். ஸ்வார்ட்ஸ் அதன்பின் சரபோஜியை மன்னராக்க முயற்சித்தார். ஆனால் அமர்சிங் ஆட்சிப்பொறுப்பில் நீடிக்க துளஜாவின் கையொப்பம் இட்ட கடிதம் இருந்ததால் அமர்சிங்கை எதுவும்

செய்யமுடியவில்லை. சரபோஜியின் சுவீகாரம் செல்லத்தக்கதன்று என்று 12 சாத்திரப் பண்டிதர்களும் தெரிவித்து விட்டார்கள், எனவே 1786-இல் துளஜா மரணத்திற்குப்பின் 1787-இல் அமரசிங்கை மன்னராக்கினார்கள், சென்னை, கல்கத்தா கம்பெனி நிருவாகத்தினர். பின்னர் 11 ஆண்டுகள் கழித்து ஸ்வார்ட்ஸ் பாதிரியாரின் பெருமுயற்சியால் அமர்சிங் 28—6—1798இல் பதவி நீக்கம் செய்யப்பெற்று, சரபோஜி மன்னராக்கப்பட்டார். ஆனால் ஆங்கிலேயர் 1799-இல் இரண்டாம் சரபோஜியிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்றி அவருக்கு ஓய்வூதியம் கொடுத்துவிட்டார்கள். மன்னர் சரபோஜி 1798—99-இல் ஓராண்டுக்காலம் மன்னராக விளங்கி 1800 முதல் 1833 வரை ஓய்வூதியம் பெற்று தஞ்சை அரண்மனையில் கலைவளர்க்கும் பணியில் ஈடுபட்டார்.

1803-இல் பல கல்வெட்டுக்களைத் தஞ்சைப் பெரிய கோவிலில் பொறிக்கச் செய்தார். போன்ஸ்லே வம்ச சரித்திரத்தைக் கல்வெட்டாகப் பொறித்துள்ளார், மராட்டியர் வரலாறு எழுதிய ரானடே, டவ், கின்செய்டு போன்ற சரித்திர ஆசிரியர்களின் நூல்களில் சரபோஜியின் போன்ஸ்லே வம்ச சரித்திரத்தின் எப்பகுதியும் இடம்பெறவில்லை என்பது வரலாற்று ஆய்வின் முடிவு. சரபோஜி தமக்குமுன் 15 அரச பரம்பரை பற்றி எழுதியிருக்கிறார். அவை மராட்டிய வரலாறுகளில் ஏனோ இடம்பெறவில்லை.

கல்வெட்டு எண் 421-1924. 25; 419,420,422,423 ஆகியவை சரபோஜி மன்னரின் கல்வெட்டுக்களாகும். 19-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு உற்ற நண்பராய்த் திகழ்ந்தார். ஆங்கிலேயரை எதிர்த்து வீரப்போர் புரிந்து வீழ்ச்சி அடைந்தவன் நெப்போலியன். இந்த நிகழ்ச்சியைக் கொண்டாடும் வகையில் சரபோஜி கி.பி. 1814-இல் சேதுபாவா சத்திரத்தில் கல்வெட்டும், சாளுவநாயக்கன் பட்டிணத்தில் எட்டு மாடம் கொண்ட "மனோரா"வையும் கட்டினார். இவர்காலத்துக் கட்டிடக்கலைத் திறமைக்கு இது எடுத்துக்காட்டு.

இங்குள்ள கல்வெட்டில்

His Highness Maharajah Sirfojee Rajah of Tanjore The Friend and Ally of the British Government to Commemorate the Triumphs Erected this Column of British Arms and the Downfall of Bonaparte 1814.

ஆங்கிலேயர்கள், சரபோஜியின் சமகாலத்தில் வாழ்ந்த வீரபாண்டியக் கட்டபொம்மன், திப்பு சுல்தான் போன்ற எதிர்த்தவர்களின் உயிரைக் குடித்ததோடு சரபோஜியிடம் நண்பராகப் பழகி அவரது முடியையும் பறித்துக் கொண்டனர்.

சரபோஜி மன்னர் முடிசூடுவதற்கும், மேனாட்டு அறிவியலைக் கற்கவும் உறுதுணையாகவும் இருந்த ஸ்வார்ட்ஸ் பாதிரியார் காலமானபோது ஆங்கிலத்திலேயே ஒரு பாடலைப் பாடி தம் நன்றியை வெளிப்படுத்தியுள்ளார்.

"Sacred to the memory of
The Reverend Christian Frederic Swartz
Missionary to the Honourable
Society for Promoting Christian knowledge in London,
who departed this life on the 13th of February, 1798,
aged seventy one years and four months.
Firm wast thou, humble and wise,
Honest, pure, free from disguise,
Father of orphans, the widows support,
Comfort in sorrow of every sort,
To the benighted dispenser of light,
Doing, and pointing to that which is right.
Blessing to princes, to people to me;
May I, my father, be worthy of thee!
Wisheth and prayeth thy SARABOJEE."

தஞ்சையில் சோழர் காலம் தொட்டு விளங்கிவரும் சரஸ்வதி பண்டார் நூலகத்தில், தாம் சேகரித்த மேல்நாட்டுமொழி நூல்கள் ஐயாயிரத்துக்கு மேற்கொண்டவற்றைச் சேர்த்து வைத்தார். நாற்றிருபதுக்கும் குறையாத தேவநாகரி காகிதச் சுவடிகளை, காசி முதலிய இடங்களிலிருந்து கொணர்ந்து சேகரித்து வைத்தார். கல்லெழுத்து அச்சகம் ஒன்றை தேவநாகரி நூல்கள் அச்சிடுவதற்காக உருவாக்கிவைத்தார். அவ்வச்சகத்தில், வடமொழி நூல்கள் சிலவற்றை அச்சிடச்செய்தார். சித்த மருத்துவம், ஆயுர்வேதம் போன்ற துறைகளில் ஆய்வுசெய்து சமுதாயத்துக்குரிய நூல்களை இயற்றினார். வேத சாஸ்திர பண்டிதர்களையும் தமிழ்ப் புலவர்களையும் ஆதரித்தார்.

சங்க காலத்துக்குப்பின் கி.பி. 850ல் விசயாலயச் சோழனால் தஞ்சை அரசு நிறுவப்பெற்றது. கி.பி. 1799ல் இரண்டாம் சரபோசி மன்னர் காலத்துடன் மன்னராட்சி முடிவுற்றது.

சரபோஜி மன்னர் வளர்த்த கலைகளுள் சோதிடக்கலை குறிப்பிடத் தக்கதாகும். இம்மன்னவர் எண்ணிலாச் சோதிடத்துறை நூல்களை சரசுவதி மகாலில் இடம்பெறச் செய்தார், சோதிடக்கலை நிபுணர் திரு. **அன்னை பாலு** அவர்கள் மன்னரின் ஜாதகத்தை இங்கு கணித்துக் கூறுகிறார்.


# மன்னர் சரபோஜியின் மகத்தான ஜாதகம்

எதிர்காலம் வென்று நிற்கும் மன்னன் சரபோஜி—வரலாறு ஏற்றுக் கொண்ட வியத்தகு மன்னனாவார். ஒளி பொருந்திய சோழ மண்டலத்தின் முடிவுரை இவரால் எழுதியபோதும் கூட—காலப் பொது நோக்கில் இவரது கருவூல நேர்த்தி ஈடற்ற புகழையும்—இணையற்ற சரித்தையும்-ஏற்படுத்தித் தந்துள்ளது எனில் அது மிகையன்று. இசை, மருத்துவம், விலங்கியல் வானியல் சிற்ப இயல் என்றெல்லாம் மொழிப்பகையின்றி, ஆயிரக்கணக்கான சுவடிகள்-அதற்குரிய விரிவுரை ஓவியங்களோடு—அவன் சேமித்த பாங்கினை காலம் பாராட்டக் கற்றோர் சேவிப்பர். மண்ணுருண்டையை எந்தத் தனிமனிதனும் காலம் காலமாக ஆளும் வரம் பெற்று வந்தவனில்லை. அப்படி அவன் ஆளும் வாய்ப்பை திருவருள் வழங்கினும்—அதில் பெருமை பெற்று வரலாறு புகழ் பாட, காலத்தை வென்ற மன்னர்கள் ஒரு சிலரே. அந்த ஒரு சிலரில் மன்னர் சரபோஜியும் நிமிர்ந்து நிற்கிறார்.

எந்தத் தனிமனிதனின் அறிவும் ஆற்றலும், வான் நின்று வழங்கும் கோள்களின் தூண்டுதலின்றி அமைவது அரிது. இதனை எதிர்கால அறிவியல் உலகம் ஏற்றுக்கொள்ளும் காலம் வெகு தொலைவில் இல்லை. அந்த அடிப் படை விதியில் மன்னர் சரபோஜியின் பிறவிக் குறிப்பைப் பேசுவோம்.

சாலிவாகன சகாப்தம் 1699—கலியுகம் 4878—ஏவிளம்பி ஆண்டு—புரட்டாசி மாதம் அஷ்டமி திதி 34—63க்கு-புதன் கிழமை—திருவாதிரை (ஆருத்ரா) விண்மீன் 47—21 கூடிய தினத்தில்-சூரியோதயத்திற்கு 6 நாழிகை முன்பு (24-9-1777) கன்னியா லக்னத்தில்—மிதுன ராசியில்—மன்னர் சரபோஜி சுப ஜனனம்—எனக் குறிப்பிடுகிறது. புதனை அதிபதி

யாகக் கொண்ட கன்னியும்...மிதுனமும் இரட்டை ராசி ஆகும். GEMINI என ஆங்கிலம் குறிப்பிடும் மிதுனம் ஒரு உயர்வான—(தோற்றத்தில் கூட) ராசியாகும். இரட்டைக் குழந்தைகள் இதன் அடையாளமாகும். பிறவி இரட்டையர்கள் இந்த ராசியில் அமைவதைக் காணலாம்.




கன்னி லக்னத்தில் 12க்குரிய சூரியன் அமர்ந்ததால் இவர் தகப்பனார் பற்றி விரிவாக அறிய வாய்ப்பில்லை. தாம் சிறப்பான இடம் வகிக்கிற ஜாதகம் இது.

வாக்குத்தானம் எனும் 2-ஆமிடத்தில் சனி புதன் சேர்க்கை இவருக்குப் பன் மொழிப் புலமையைத் தோற்றுவித்தது. இருப்பினும் வாலிபப் பருவத்தில் கல்வி முறைப்படிக் கற்க வாய்ப்பு இல்லை. நாலாமிட கேது வயது ஏற ஏற சிறந்த ஞானத்தை இசை முதல் மருந்து வரை அறிய உருவாக்கி விட்டிருப்பான்.

கீர்த்தித் தானம் எனும் மூன்றாம் இடத்தில் ஆட்சிபெற்ற செவ்வாய் இந்தக் கட்டுரை எழுதும் தேதி வரையும் கூட அவர் புகழை நிலைநாட்டுகிறான். பொதுவாக திருவாதிரை—சதயம் — சுவாதி மூன்றும் ராகுவின் நட்சத்திரங்களாகவும், அசுவினி — மகம் — மூலம் கேதுவின் நட்சத்திரங்களாகவும் விளங்குகின்றன,

இந்த ராகுவும் கேதுவும் வீடற்ற கோள்கள் ஆகும். இதில் ராகு பதினெட்டு ஆண்டுகளும் கேது ஏழு ஆண்டுகளுமாக திசை உரிமை பெற்றுள்ளன.

வீடற்ற கிரகமாக இவை உள்ளதால்தான் இந்த நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு எதிர்கால வரலாறு இருக்குமே அன்றி—நிகழ்காலப் பெருமை நிலைக்காது. வீடு, பூமி பறிபோகும். உதாரணம் மூல நட்சத்திர மகாகவி பாரதி சுவாதி நட்சத்திர வடலூர் ராமலிங்க வள்ளல் போன்றோர் பட்டியல்.

மிதுனம் தொடங்கி—தனுசுக்குள் ராகு, கேதுவின் ஆளுகையில் இடைப் பட்ட ஏழு கிரகங்கள் சிக்கியதால் இவர் ஜாதகம் கால சர்ப யோக வகையா கும்.

குரு உச்சம் பெற்று 11ல் நின்றது. சனி உச்சம் பெற்று வாக்கில் நின்றது. செவ்வாய் ஆட்சி பெற்று மூன்றில் உயர்ந்தது, இதனால் மன்ன னுக்குரிய பிறவிப் பெருமையைத் துவக்கும் தாங்கிக் கொண்டது. கீர்த்தித் தானம் எனும் புகழிடத்தை ஐந்தாம் பார்வையாக. அறிவுத்தானம் எனும் ஐந்தாமிடத்தை ஏழாம் பார்வையாக—ஏழாமிடம் எனும், தனது இல்லத்தை ஒன்பதாம் பார்வையாக—குளிர்ந்த குரு பகவான் நோக்கியதால் இன்றும் என்றும் இவர் புகழை...கடல் கடந்தும் கற்ற மாந்தர் கவினுற அறிய வழிவகுக்கிறது.

சந்திரனுக்கு வாக்கில் உச்சம் பெற்ற குரு — லக்னத்துக்கு வாக்கில் உச்சம் பெற்ற சனி. இவர் ஒரு மன்னர் என்பதினை விடவும்—இவர் ஒரு சகலகலாவல்லமை பெற்ற ஞானச்சித்தர் என்பதுவே பொருத்தம். தேவ குருவும்—அசுர குரு என்று அழைக்கப்படும் காமக்கலை வல்லுனன் சுக்ரனும்—சந்திரனுடைய வீட்டில் அமர்ந்த விதம் — இவர் ஏராள பஞ்சனைப் பறவை களுக்கு—நெஞ்சணைய வாய்ப்பளித்தவர் என்பதனைப் புலப்படுத்துகிறது. அந்தக்கலையில் ஈடு இணையற்ற ஒருவராகத் திகழ்ந்திருப்பார் என்பது உறுதி. இதற்குரிய கல்பம்—பஸ்பம் முதலியவற்றை உருவாக்குவதில் சுக ஸ்தானம் பெற்ற கேதுவின் பணி மகத்தானது. இதில் இவரது பெரும் பொழுது போய் இருக்கும்,

இவர் குரு தசை எனும் ராஜா தசையில்தான் பதவி ஏற்றிருப்பார். மிதுன கன்னி ராகு பலம் பொருந்தியவன். கல்வி—கலை உணர்வுக்கு இவன் அளவு கடந்த அருள் தரக்கூடியவன். அதன் மேலாதிக்கம் இவரை ஒரு ஞானச் சுகவானாக்கி இருக்குமே அன்றி. போராடி யுத்தம் செய்து. நாடாள்வது எல்லைகளை விரிவு படுத்துவது போன்ற மனநிலையை உருவாக்கி இருக்காது. அதனால் இவர் நீண்ட காலம் அரசாள வாய்ப்பே இல்லை. இதனை எல்லாம் விடவும் அட்டமி திதி என்னும் எட்டாம் நாள் சிறப்பு இவரோடு அரச வழிப்

பிறப்புக்கு முற்றுப்புள்ளி இடுகிறது. 1777ல் பிறந்து 1832ல் முடிந்துபோன இவரது உடம்பெனும் அணுவிலிருந்து. எதிர்கால சிந்தனையாய் மலர்ந்த இவரது ஆழ்ந்த ஞான "ஆருத்ரா" எனும் சிறப்பான நட்சத்திரம், மீண்டும் ஜனனம் மேற்கொள்கிறது.

தனது நட்சத்திர சாரமே பெற்ற அந்த திருவாதிரை ராகு—அந்த முற்றுப்புள்ளியையே பிள்ளையார் சுழி ஆக்கி, காவியம் படைக்கக் கை குலுக்கி விட்டான்! அது சரஸ்வதி மகாலாய்ச் சங்கமிக்கின்றது.


**"சிங்க மராட்டியர் தம் கவிதைகொண்டு**
**சேரத்து தந்தங்கள் பரிசளிப்போம்!"**

என மகாகவி பாரதி பாடினான். மராட்டிய மன்னன் சரபோஜி, அக்கவியின் திர்க்க தரிசனம்படி ஏராள இலக்கியங்களைத் தமிழ் மண்ணுக்குச் சேகரித்து பரிசளித்திருக்கிறான். அவன் புகழ் மென்மேலும் நூல் வழிக்கால் கொண்டு நிற்கும் என்பதில் ஐயமில்லை. அவன் புகழ் வாழ்க!!.



தாமே ஒரு பல்கலைக் கழகமாய்த் திகழ்ந்த சரபோஜி மன்னர் அவர்கள் ஆற்றிய பணிகளோ எண்ணற்றவை. அவர்தம் ஆற்றல் பற்றி இக்கட்டுரையில் விவரிக்கின்றார் முனைவர் **இரா. பவுன்துரை.**

# சரபோஜியின் கட்டடக்கலை : மனோரா



## முன்னுரை

ஆங்கிலேயர்களிடம் நெப்போலியன் தோல்வியுற்றதை நினைவுகூறும் முகமாகச் சரபோஜி மன்னரின் காலத்தில் கட்டப்பெற்ற நினைவுச் சின்னம் மனோராவாகும். இக்கட்டடத்தின் வரலாற்றை இக்கட்டுரை விளக்குகிறது.

## சரபோஜியும், ஆங்கிலேயரும்

சரபோஜியின் அரசியல் அறிமுகமே ஆங்கிலேயரின் துணையுடன் தொடங்கியது. இவர் தஞ்சாவூர் கோட்டையில் ஆங்கிலேயரின் பிரதிநிதியாக இருந்த மாஸ்டர் ஜான் ஹடாலேப்ஸன், கர்னல் இப்ஸ்லி, கமாண்டர் உஷ்டோட், ஷ்வார்ட்ஸ் பாதிரியார் ஆகியோரின் உதவியுடன் வஸந்த பஞ்சமி நாளான சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீ பிரதாபராமஸ்வாமி மகாலில் தர்பார் நடத்தி ஆட்சிக் கட்டிலில் அமர்த்தப்பட்டார். எனவே, ஆங்கிலேயரின்மீது அவருக்கு இயல்பாகவே அதிகப் பற்றும் மதிப்பும் ஏற்பட்டு விட்டது.

சரபோஜி மன்னர் ஷ்வார்ட்ஸ் பாதிரியாரிடத்தில் ஆங்கிலம் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டார். மகாராஷ்டிரத்தையும், தமிழ் மொழியையும் கற்று அவற்றின்பால் அதிக ஈடுபாடு காட்டினார். பல்வேறு மொழிகளையும் அறிவதில் இவர் அதிக ஆர்வம் காட்டியதை அறியமுடிகிறது.

ஷ்வார்ட்ஸ் பாதிரியாருக்குப் பின்வந்த ஜனீக் என்னும் பாதிரியாரும் சரபோஜியிடம் நெருங்கிப் பழகினர். ஜனீகின் நண்பர் டூரியன் என்பவரும் பிரதிநிதியாகப் பொறுப்பேற்றார். இந்நிகழ்ச்சி ஆங்கிலேயரின் நல் லெண்ணத்தைப்பெற மிகவும் உதவியது. இதற்கும் மேலாக மாக்லோட் அவர்களின் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி சரபோஜி மன்னருக்கும் கம்பெனிய ருக்கும் அதிக நெருக்கத்தையும் தொடர்பையும் ஏற்படுத்தியது.

சரபோஜி மன்னரின்மீது ஆங்கிலேயர் காட்டிய ஆர்வத்திற்குப் பிரதி யுபகாரமாக ஆங்கிலேயரின் படைகள் தஞ்சைக் கோட்டையிலும், அறந்தாங்கிக் கோட்டையிலும் தங்கவும், கட்டிடங்களையும் வீடுகளையும் கட்டிக்கொடுத்து உதவினார். ஆங்கிலக் கம்பெனியின் பிரதிநிதியான ப்ளாக்பர்ன் என்பவருக்கு உதவியாகவும், மருதை என்னும் பாளையக்காரருக்கு எதிராகவும் 6-7-1801-ல் சரபோஜி மன்னர் தன்னுடைய படைகளை அனுப்பி உதவினார். இவ்வாறே ஆங்கிலேயர் அன்னிய நாட்டின்மீது படையெடுத்த பொழுதும், தஞ்சைக் கோட்டையில் ஆங்கிலேயர்கள் முகாம் வைத்துக்கொள்வதற்கும் உடன் பட்டார். இதன்படி தஞ்சாவூர் கோட்டை, வல்லம் கோட்டை, அறந்தாங்கிக் கோட்டை போன்ற இடங்களில் கம்பெனியரின் ஆதிக்கம் அனுமதிக்கப்பட்டது. எனவே, சரபோஜி மன்னர் வேற்றுநாட்டார் என்று பாராமல் அவர்களுடன் நெருங்கிப்பழகியும், அவர்களுக்கு உதவிசெய்தும் வந்தமை தெளிவாகின்றது. இதன் அடிப்படைக் காரணமே நெப்போலியன் வீழ்ச்சியைக்கண்டு மகிழ்வடை வதற்கும் ஆங்கிலேயரின் வெற்றியை விழாவாகக் கொண்டாடி ஒரு நினைவுச் சின்னம் அமைப்பதற்கும் தளமாக அமைந்தது. இந்நினைவுச் சின்னமே இன்று ‘மனோரா’ என்றழைக்கப்படுகின்றது. இக்கட்டடம் இரண்டாம் சரபோஜி மன்னர் பெயரில் அமைந்த சரபேந்திரராஜபட்டணத்தில் உள்ளது.

### சரபேந்திரராஜபட்டணம்

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டையிலிருந்து தெற்கே புதுப் பட்டணத்திற்கும் சேதுபாவா சத்திரத்திற்குமிடையே அமைந்துள்ள ஊர் ‘சரபேந்திரராஜபட்டணம்’ என்பதாகும். இவ்வூர் ‘துலுக்கன் வயல்’ என்றும் ‘சாலுவநாயக்கன் பட்டணம்’ என்றும் அழைக்கப்படும். நாயக்கர் ஆட்சிக் காலத்தின்போது இவ்வூர் துறைமுகப்பட்டினமாக இருந்திருக்கவேண்டும். நாயக்கரின் ஆட்சிக்குப் பின்னர் இக்கடற்கரைப்பகுதி மராட்டிய மன்னர் களின் ஆதிக்கத்தின்கீழ் வந்ததாகக் கூறலாம். ஏனெனில் மோடி ஆவணங் களில் ‘மனோரா’ என்ற பெயர்க் குறிப்பு கிடைக்கப்பெறவில்லை. மேலும்

அவ்வூர் சாலுவநாயக்கன் பட்டினம் என்றே பெயரிட்டழைக்கப்படுகின்றது. ஆனால் 1805-ஆம் ஆண்டினைச் சேர்ந்த மோடி ஆவணக்குறிப்பிலும் (17 – 45c) 1824-ஆம் ஆண்டின் மோடிக் குறிப்பில் "தத்தோஜி அப்பாவுக்கு கும்பகோணத்தில் சுரோத்திரியம் கொடுத்து அதற்கு 'சரபோஜிராஜபுரம்' என்று பெயரிடப்பெற்ற செய்தி ஒன்று கிடைக்கின்றது. (42 - 112c), அதன்பிறகு 1836-ஆம் ஆண்டில் தான் முதல் குறிப்பாக 'சரபேந்திர ராஜ பட்டணம்' என்ற பெயர் குறிக்கப்பெற்ற மோடி ஆவணம் கிடைக்கின்றது (10 — 76c). எனவே மனோரா அமைந்துள்ள இடமாகிய சாலுவ நாயக்கன்பட்டணம் 1836-ஆம் ஆண்டு வாக்கில் சரபேந்திரராஜபட்டணம் என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும் சாலுவநாயக்கன் பட்டணம் என்ற பெயரிலேயே தொடர்ந்து இருந்தமை 1844-ஆம் ஆண்டு மோடி ஆவணக் குறிப்பு உறுதி செய்கின்றது.

சாலுவநாயக்கன்பட்டணத்திற்கு அருகே இராஜாமடம் இருப்பினும் இங்கே ஆங்கிலேயர்கள் தங்குவதற்குப் பல மாளிகைகளையும், வீடுகளையும் கட்டிக்கொடுத்துள்ளார். இதனை, சாலுவநாயக்கன்பட்டணத்திற்கு வேலை செய்ய ஹமித்கான் என்ற பணியாள் அனுப்பிய செய்தி (16 — 59c), ஜான்பாதரின் வீட்டிற்கு அருகேவுள்ள வீட்டைத் தயார்செய்ய 70 அங்கணம் பந்தல் போடுவதற்கு மூங்கில் 300-ம், கீத்து 8000-ம், 200 பாய்களும் கொடுப்ப தற்கு உத்தரவு என்ற குறிப்பும் (11 — 188c) மோடி ஆவணத்தின் வாயி லாகக் கிடைப்பதால் இப்பகுதியை ஆங்கிலேயரின் இருப்பிடங்களுக்குக் கொடுத்தமை தெளிவு. இதனை மனோரா கட்டடத்தின் காவலன் மராட்டிய மன்னருக்கு விண்ணப்பித்த இரண்டு கடிதங்களும் சாலுவநாயக்கன்பட்டணம் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தில் இருந்திருக்க வேண்டும் என்பதைத் தெளிவு படுத்துகின்றது.

சாலுவநாயக்கன்பட்டணத்தருகே அமைந்துள்ள சேதுபாவாசத்திரத் தில் ஆங்கிலேயர்களின் 'தங்கும் மாளிகைகள்' கட்டப்பட்டுள்ளன. சேது பாவாசத்திரப்பகுதி சரபோஜி மன்னர் காலத்தில் கட்டுவிக்கப்பட்டதாகும். சாலுவநாயக்கன்பட்டணத்தின் கடற்கரை ஓரமாகச் சிதைந்த நிலையில் பல்வேறு கட்டடச் சுவர்ப்பகுதிகள் தென்படுகின்றன. இவை அழிவுற்ற கப்பற்கட்டும் தளமாகவோ அல்லது துறைமுகப் பகுதியாகவோ இருக்கக் கூடும். இவை இப்பகுதியின் கடல் வாணிகத் தொடர்பினையும், துறைமுக மாக இயங்கிய நிலைகளையும் காட்டுகின்றன.

சரபோஜி மன்னனின் காலத்தில் கப்பல்கட்டும் தொழில் நுட்பம் சிறப்படைந்திருந்தது (2 — 182). 5—3—1821-இல் கல்கத்தாவில் கப்பல் கட்டும் கூடத்தைச் சரபோஜி மன்னர் கண்டுள்ளார் என்ற செய்தி இத் துறையில் இவருக்கு இருந்த ஈடுபாட்டைக் காட்டுகின்றது. 1826-இல் அரண் மனைக்குரிய கப்பல்கள் இருந்திருப்பதை மோடி ஆவணம் குறிப்பிடுகின்றது (4 —436). கப்பல்கள் கட்டுவதற்கும், செப்பனிடுவதற்கும் ஆங்கிலத்

தொழில் நுட்பப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். "பிரகதீசுவர பிரசாத்" என்று பெயரிட்டழைக்கப்பெற்ற பெரிய கப்பல் இவரது ஆட்சிக் காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே, மேலும் இக்கடற்கரைப் பகுதியில் அகழாய்வு மேற்கொண்டால் துறைமுகப்பகுதி, தொழிற்கூடங்கள் போன்ற இடங்களைத் தெளிவாக அறியமுடியும்.

மனோரா

மனோரா என்னும் பெயரை 'மினாராட்' என்ற சொல்லின் திரிபாகக் கருதலாம். 'மினாராட்' என்னும் சொல்லிற்கு நிலைமாடம் (Tower) என்று பொருள்படும். பல நிலைகளைக்கொண்ட உயர்ந்த கட்டடமாக இருப்பதால் இதற்கு மராட்டியர்கள் 'மனோரா' என்று பெயரிட்டழைத்தனர்.

கடற்கரையின் அருகே அமைந்துள்ள மனோரா கட்டடத்தின் மொத்த உயரம் 22·3 மீட்டராகும். ஒன்பது அடுக்குகளைக்கொண்ட வடிவமைப்புடைய நிலைமாடமாகும். இந்நிலைமாடத்தினைச் சுற்றி வலுவான பாதுகாப்புடைய அரணாகிய கோட்டைச் சுவரும் அதன்கீழ் அறுகோண வடிவ அகழியும், அதனை அடுத்து சேமிப்பு மற்றும் இராணுவத்தளவாடங்கள் வைப்பதற்குரிய பாதுகாப்பு அறைகளும், அதன் புறத்தே பாதுகாப்பு அறைகளுடன் கூடிய மூன்றாம் சுற்றுக் கட்டடப்பகுதியும் கொண்டது. இதன் முகப்பு பத்மத்தைப் போன்றும் வளைவான முகப்புப் பாதையும், அதன் வாயில் பகுதியில் இரண்டு வாயிற்றூண்கள் நிற்கின்றன.

மனோரா கோட்டையின் மையப்பகுதியில் அமைந்துள்ள ஒன்பது நிலைமாடம் சிறிய அளவுடையது என்றாலும் கலை அழகு நிறைந்ததாகும். இந்நிலை மாடங்களின் அமைப்பு அறுகோண வடிவமாகவும், அடித்தளம் முதல் மேற்தளம் வரை அறுகோண வடிவமாகவே இடம் பெறுகின்றது. ஆறு புறங்களிலும் ஆறு வளைவுமுகச் சன்னல்கள் உள்ளன. புறச்சுவரின் சிறிய வளைவுக் கூடுகள் முதலிரண்டு நிலைகளில் ஒரு புறத்திற்கு முப்பது எண்ணிக்கையில் உள்ளன. மூன்றாம் நிலையில் 28 எண்ணிக்கையும், பிற நிலைகளில் 22 எண்ணிக்கையுடையதாகவும் உள்ளன. இவ்வளைவுக் கூடுகளை வெளியே இருந்து பார்க்கும்பொழுது தெளிவாகக் காணலாம். ஆனால் உள்ளே காண இயலாதவாறு பூசப்பட்டுள்ளது. பூச்சுக்கள் வழவழப்புடன் வெள்ளை நிறமாக (சங்கு நிறம்) இன்றும் காட்சியளிக்கின்றன. நிலைகளில் உள்ள படிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நிலைக்கும் ஒன்றுவீதம் குறைந்துகொண்டே செல்லுகின்றன. மேல்மாடிச் சுவரின் கீழ்ப்பகுதியில் கல்லில் வடிக்கப்பெற்ற அலங்கார வளைவுகள் அழகுசெய்கின்றன. இவ்வலங்காரத்தின்மேல் எழுப்பப்பட்டுள்ள மேல்மாடிச் சுவர்ப்பகுதியுடன் கூடிய தளம் திறந்தவெளியாகக் காணப்படுவதால் இது 'உப்பரிகை' என்றும் 'கலங்கரை

விளக்கம்' என்றும் கூறுவர். கோட்டைச் சுவரில் பீரங்கிகள் வைக்கப்பட்டிருந்தன என்பதை *1814*-ஆம் ஆண்டினைச் சேர்ந்த மோடி ஆவணம் (*19—66*c) கூறுகின்றது. எனவே, இது ஒரு பாதுகாக்கப்பெற்ற இடமாகவும் இருந்தமைத் தெளிவு.

இக்கோட்டைச் சுவர்களில் ஐந்து மொழிகளில் கல்வெட்டுக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. இதில் தமிழ், மராட்டி, தெலுங்கு, உருது, ஆங்கிலம் அடங்கும். இக்கல்வெட்டின் வாயிலாக இக்கட்டிடம் ஆங்கிலேயர் நெப்போலியனைத் தோற்கடித்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுக்காகக் கட்டப்பெற்ற நினைவுக் கட்டடம் என்று கட்டுவதைக் காணமுடிகிறது.

### மனோராவின் கட்டிடக் கலை வடிவமைப்பு

ஆங்கிலேயரின் நாட்டில் நினைவுத்தூண்களை அமைப்பதும், நினைவுக் கட்டடங்களை எழுப்புவிப்பதில் அதிக ஈடுபாடு காட்டியதையும் அறிய முடிகின்றது. பல அடுக்குகளைகொண்ட உயரமான மாடங்களுடன் கூடிய கட்டடங்கள் மொகலாயர்களின் கட்டடப்பாணியில் சிறப்புடன் இந்தியாவில் இடம் பெறுகின்றன. இவ்விரு கருத்துருவின் அடிப்படையில் உருவாக்கம் பெற்றவடிவமே மனோராவாகும்.

மொகலாயர்களின் அரண்மனைக் கட்டிடப்பாணியில் இடம்பெறும் ஒருவகைக் கட்டிடப் பகுதி 'கபோதிகா' (Kapotika) என்பதாகும். கபோத(க) (Kapotaha) என்பதற்கு பறவை, மாடப்புறா எனப் பொருள் படும். கபோதிகா அல்லது கபோதம் என்பது மாடப்புறாக்கள் தங்குவதற்குரிய கூடு (Pigeon house) போன்ற சிறிய கட்டட வடிவமைப்புடைய தாகும். நூற்றுக்கணக்கான துவாரங்களையும், பல்வேறு நிலைகளைக் கொண்டதாகவும் இருக்கும். இக்கட்டடக்கலை வடிவமைப்பை முதன்முதலில் தஞ்சைப் பகுதியில் மராட்டியர் காலக் கட்டிடங்களில்தான் காணமுடிகின்றது. மாடப்புறா தங்குவதற்குரிய இவ்வகைக் கபோத அமைப்பினை, திருவையாறு அரண்மனைச் சுவரின் – நவாப் படித்துறையின் அருகேயும், திருவையாறு ஆற்றுப் பாலத்தின் படி அருகே அமைந்துள்ள சகாநாயக்கர் படித்துறைக் கட்டடத்தின் முன்பாகவும் இவ்வகை கபோதங்கள் கட்டப்பட்டுள்ளன. இதன் வடிவமைப்பு 5 நிலைகளைக் (அடுக்குகளை) கொண்டது. இக் கபோதகத்தின் அடித்தளம் முதல் அதன் மேற்பகுதிவரை அறுகோண வடிவமைப்புடையதாகத் திகழ்கின்றன. *1811*-இல் மாடப்புறாக்கூடு செப்பனிடப் பட்ட செய்தியை மோடி ஆவணம் (*58 — 31*c) குறிப்பிடுகின்றது. இந்த ஆவணக் குறிப்பின் வாயிலாகக் காணும்பொழுது இம்மாடத்தின் வடிவம் மனோரா கட்டிடம் கட்டுவதற்கு முன்பே எழுப்பப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது. எனவே, மனோரா கட்டடத்திற்குரிய வடிவமைப்பு இந்த 'கபோதிகா' வடிவமைப்பே எனக்கூறலாம். மனோரா கட்டடம் கட்டுவதற்

குரிய பொருட்களாகிய செங்கல், சுண்ணாம்பு, மரம் போன்றவை கோடியக் கரையிலிருந்து தோணியில் கடல்மார்க்கமாக எடுத்துச் சென்றமைபற்றிய செய்தியை மோடி ஆவணத்தில் (2—315) காணமுடிகிறது. எனவே, மனோரா கட்டடம் தஞ்சை அரண்மனைக் கட்டுமானப் பிரிவு தொழில் நுட்பக் கலைஞர்களால் கட்டப்பட்டது என்பது தெளிவு. மேலும் கோடியக்கரையிலிருந்து பூச்சுப் பொருட்களும், செங்கல்லும் வந்துள்ளன என்பதால் ஏற்கனவே கோடியக்கரையில் தங்கி அரண்மனைக் கட்டடப்பணிகளை மேற்கொண்டு வரும் நாராயணக் கொத்தன் பிள்ளை, ஆதியப்பக் கொத்தன் போன்றோர் இக்கட்டடத்தைக் கட்டியிருக்கக்கூடும்.

மனோராக் கோட்டைச்சுவர்ப் பகுதிகள் கற்களால் அமைக்கப் பட்டுள்ளன. இச்சுவரிடையே மீன் சின்னம் பொறிக்கப்பட்ட துண்டுக்கல் ஒன்றுள்ளது. இக்கல் பாண்டிய நாட்டுப் பகுதியிலிருந்து எடுத்துவரப்பட்டிருக்கவேண்டும் எனக்கருதலாம்.

அகழிக்கும் மையப் பகுதியாகிய நிலைமாடத்திற்கும் இடையே இரண்டு பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒன்று அதன் முகப்புவாயில், மற்றொன்று அதன் பின்புறத்தேயுள்ள சிறிய அளவில் அமைந்த வாயிலாகும். இவ்வாயில்கள் "தூக்குப் பாலங்களால்" இணைக்கப்பட்டுள்ளன என்பதை அவ்விடங்களில் மீதமுள்ள இரும்புத் தகடுகள் பொருத்திய இடங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இவ்வாறே முதல் வாயிற் பாலமும் சிறிய அறைவட்ட அகழியால் அமைக்கப்பட்டுத் தூக்குபாலத்தைக் கொண்டதாகும். ஆனால் இத்தூக்குப் பாலங்கள் தற்பொழுது இல்லை. இவ்விரண்டு இடங்களிலும் செங்கல்லில் கட்டப்பெற்ற நடைபாதை தற்பொழுதுள்ளன.

இரண்டாம் முகப்பு வாயில் தூண்களின் இருபுறமும் இரண்டு காவலர்கள் நிற்குமிடமும், வாயில்தூண் வடிவமானது ரோமானியர்களின் கட்டடக் கலைப் பாணியிலும் உள்ளன. வளைவுக் கதவும் அதன் அருகேயுள்ள மண்டபத்தில் நான்கு வரிசையில் இரட்டைத் தூண்கள் இரண்டுபுறத்திலும் அழகூட்டுகின்றன. இத்தூண்கள் கிரேக்கக் கட்டடக் கலையில் இடம்பெறும் 'டோரிக்' என்ற கலைவடிவத்தைப் பெற்றுள்ளன. வழவழப்பாக இருக்கின்ற இவ்வட்டத்தூண்கள் அலங்காரமில்லை என்றாலும்கூட கட்டடக் கலைஞனின் பூச்சுத்திறனைப் பாராட்டாமல் இருக்க இயலாது.

அறுகோண அகழியின் நீர்வருகைக்காக இக்கோட்டையின் மேற்புறத்தேயுள்ள குளத்திலிருந்து நேராகக் கிணற்றிற்கும், அதன்பிறகு அக்கிணற்றின் வழியாக அகழிக்கும் நீர் வருமாறு தரையின் கீழ்ப்பகுதியிலிருந்து ஒரு இணைப்புப்பாதை உள்ளது. நீர்வருகின்ற வழித்திறப்பு: அகழியின் மேற்குப்புறத்தில் உள்ளது. அவ்வாறே நீரை வெளியேற்றுவதற்குரிய பாதையின் முகப்பு கீழ்ப்புறத்தில் உள்ளது. இதன் வழியாகக் கடலில்கலந்துவிடுமாறு

முடுபாதை அமைக்கப்பட்டுள்ளது. கடல் அலைகள் இக்கட்டிடத்தை அரித்துச்சென்றுவிடாமலிருக்க கட்டடத்தின் முன்பகுதி மணல்மேடாக அமைக்கப்பட்டும் உள்ளது.

சரபோஜி மன்னரின் மேலைநாட்டுத் தொடர்பால் ஏற்பட்ட பண்பாட்டுத் தாக்கத்தையும் கட்டடக் கலையின்மீது செலுத்திய இவரது ஆர்வத்தையும் காட்டுகின்றது மனோராக் கட்டடம். மனோராவின் நிலைமாடங்களின் தோற்றம் மொகலாயர்களின் கட்டடப்பாணி, இந்துக் கட்டடக் கலைப்பாணியின் கூட்டு வடிவமாகவே திகழ்கின்றது. இதன் அகத்தேயுள்ள வேலைப்பாடுகள் அக்காலக் கிரேக்க, ரோமானியர்களின் கலைத் தாக்கத்தையும் பெற்று விளங்குகின்றன. கோட்டையின் வடிவமைப்பு டச்சுக்காரர்களின் கட்டடப்பாணியைப் பின்பற்றியதாகவும் விளங்குகின்றது. இக்கட்டடம் கட்டடக்கலையின் சிறப்பைமட்டும் வெளிப்படுத்தாமல் மராட்டியர் – ஆங்கிலேயரின் நட்பின் சின்னமாகவும் விளங்குகின்றது.



கலங்கரை விளக்கமாய்த் திகழ்ந்த சரபோஜி மன்னர் வித்யாசாலைகள் பல நிறுவி காலக்கடலில் அறிவெனும் கலம் பல செலுத்தி ஆனந்தமடைந்தார். அவர்தம் ஆக்கப் பணிகள் பலவற்றை நூலகர் **அ. பஞ்சநாதன்** விளக்குகின்றார்.

# மாமன்னர் சரபோஜியின் கல்விப்பணி

இரண்டாம் துளஜாவின் வாரிசாக ஏற்கப்பெற்ற நிலையில் சுவார்ட்ஸ் பாதிரியாரின் உதவியோடு தஞ்சை அரசாட்சியினைப் பெற்று அரசோச்சிய மாமன்னர் சரபோஜி ஆற்றியுள்ள கல்விப்பணிகள் கணக்கில. இவற்றைத் தொகுத்துப் புலப்படுத்த இக்கட்டுரை முயல்கிறது. அவர் ஆற்றியுள்ள சில கல்விப் பணிகளைக் கீழ்வருமாறு காணலாம்,

ஆங்கிலம், பிரெஞ்சு, லத்தீன் போன்ற மொழிகளில் கிடைத்தற்கரிய 4218 நூல்களைச் சேகரித்தார், பல்துறை சார்ந்த நூல்கள் பலவற்றை வாங்கிப் படித்தறிந்து அவைகளை தமக்கும், தமது ஆட்சிக்கும் தேவைக்கு ஏற்ப பயன்படுத்தினார்.

நூலக வளர்ச்சியினை மனத்திற்கொண்டு குறிப்பாக சரசுவதி மகால் நூலகத்தின் வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும் ஆவண செய்துள்ளார். நூல்களை ஒருங்கு திரட்டி பழைய நூல்களைப் பாதுகாத்து தமது புதிய சேகரிப்பு நூல்களையும் அதனுடன் இணைத்து தமது கல்வி நலத்திற்கும், கல்வியாளர்கள், ஆய்வாளர்கள் பொதுமக்கள் இந்நூலகத்தைப் பயன்படுத்துவதற்கு, உரித்தாக்கி வைத்தார்.

நூலகத்தின் செயற்பாட்டிற்கு உரிய நூலகர், உதவியாளர் முதலிய பணிகளில் தக்காரை நியமனம் செய்து நூலகத்தின் செம்மையான நடைமுறையினை உருவாக்கி வைத்துள்ளார். நூலக செயற்பாடு இடர்படா வகையில் உரிய மூலதனத்தை இதற்கென வைத்துப் பயன்படச் செய்துள்ளார். கல்வி வல்லார்களும் பயில்கின்ற மாணவர்களும் படித்து உணர்வதோடு பார்த்துத் தெளிவதற்குரிய வகையில் தாவர இயல், விலங்கியல், உடலியல், வரலாற்றியல் முதலியவற்றை வண்ணப்படங்களாகத் தீட்டி பார்வைக்குரிய படிவங்களாக வைத்துள்ளமை சரபோஜி மன்னரின் பெருந்திறன் எனலாம்.

தமது ஆட்சியில் தஞ்சைமக்கள் அனைவரும் கல்விக்கண் பெறவேண்டும் என்ற சிந்தனையை சரபோஜி மன்னன் நிறைவுறக் கொண்டிருந்தார். அதற்கேற்ற வகையில் ஆங்காங்கே கல்விக்கூடங்களை அமைக்கவும் செய்தார். எல்லோருக்கும் கல்வி என்ற சிந்தனைப்படி செயல்பட்ட மாமன்னர், சாதி, சமய பேதமின்றி அக்கல்விக்கூடங்களில் மாணவர்களைச் சேர்த்து கல்வி புகட்டியுள்ளமையினை மோடி ஆவணங்கள் நன்கு புலப்படுத்துகின்றன.

ஏழை எளிய மாணவர்கள் பொருளாதார இடர்ப்பாட்டினால் கல்விப் பயில இயலாமையை உணர்ந்த மாமன்னர் "சிரேயஸ் சத்திரம்" என்ற அமைப்பினை ஏற்படுத்தி அதன்கண் நூற்றுக்கணக்கான ஏழை, எளிய மாணவர்களைச் சேர்த்து அவர்களுக்கு இலவசக் கல்வியை தரம்பட அளித்ததுடன் அவர்களுக்கு இலவச உறையுள், உணவு, வாழ்வியல் வசதிகள் முதலியவற்றையும் அளித்துள்ளது சிறப்புச் செயலாகும்.

பன்மொழிக் கல்வியை மன்னர் சரபோஜி தமது ஆட்சியில் பரவச் செய்துள்ளார். இதனால் மக்கள் இந்திய, ஐரோப்பிய மொழிகளில் பலவற்றைக் கற்று; பன்மொழி ஆராய்ச்சியாளராகவும், கல்வியாளராகவும் பல தேசத்தவரோடு பழகி மகிழ்வதற்குரிய தகுதிபெற்றவராகவும் வளர்ச்சிப் பெற்றுள்ள சூழலை உணரமுடிகிறது.

தமது சேகரிப்பிலும், தமது பாதுகாப்பில் இருந்த நூல்களிலும் தமது பண்டிதர்களைக்கொண்டு சரபோஜி மன்னர் செய்துள்ள ஆய்வுகளையும் காணமுடிகிறது. அத்தகைய ஆய்வுகள் முற்காலத்திய சிந்தனைகளை அக்காலத்திற்கேற்ப அரிய நூல்களாக அமைந்தன எனலாம். கல்வியாளர்களையும், புலவர் பெருமக்களையும் தாயினும் சாலப்பரிந்து புரந்த சரபோஜி மன்னர் புதிய பல இலக்கிய படைப்புகளுக்கும் காரண கர்த்தாவாக ஆகியுள்ளார். தஞ்சை மக்கள் அரிய நூல்களை எளிதில் பெரும் வகையில் புத்தக அச்சுக்கூடங்களை இவர் நிறுவி பல நூல்களைப் பதிப்பித்து மக்கள் பயனுறச் செய்துள்ளார்.

மரபு வழிப்பட்ட வேதம், சாத்திரம், காவியம், முதலிய பாடங்களை சொல்லித்தர நவவித்யா கலாநிதி சாலையில் சற்றேரக்குறைய 40 ஆசிரியப் பெருமக்களை இம்மன்னர் நியமித்து கல்விப் பணியாற்றியுள்ளார். பன்மொழி பயிற்றுவித்தல் அடிப்படையில் மராத்தி, தெலுங்கு, தமிழ், கிரந்தம் பார்சி, அரபி, ஆங்கிலம், பிரஞ்சு போன்ற எழுத்துக்களை கற்பிக்க ஆசிரியப் பெருமக்களை நியமனம் செய்துள்ளார்.

ஆங்கில மருத்துவம், சோதிடம், வானவியல், விலங்கியல், தாவரவியல் சித்த மருத்துவம் போன்ற துறைகளில் புதிய நெறிமுறைகளைக் கண்டு அவற்றின் அடிப்படையில் மருந்துக்களையும்செய்து தன்வந்திரி வைத்திய சாலையின் வாயிலாக மக்களுக்கு மருத்துவ உதவியும் செய்துள்ள முயற்சி கல்விப் பணியையே சமுதாய நலப்பணியாகவும் சரபோஜி மன்னர் ஆற்றியுள்ள மிக அரிய செயலின் விளக்கமெனலாம். தனித்திறமிக்க புலவர் பெருமக்களை தகுதிபெற அழைப்பித்து அவர்களுக்குச் சிறப்புச்செய்து அவர்களிடம் உள்ள அரிய கருத்துக்களைப் பலருக்கும் பயன்படும் வண்ணம் பதிவுசெய்து பயன் படுத்தி உள்ளமையினை சரசுவதி மகாலின் ஏடுகள் புலப்படுத்தும் வரலாற்று உண்மையாகும்.

நூலகப் பணியில் நூல்களைப் பகுப்பிட்டு அவற்றின் எண்ணிக்கை உள்ளுறைச்செய்தி முதலிய அட்டவணைகளையும் பயன்படுத்துவோர் தாம் பெற்றுத் தெளிவுறத்தக்க வகையில் அட்டவணை செய்துள்ளமை அறியத் தக்கது.

இவ்வாறாக கல்வியியலின் பன்முக நோக்கில் அரும் பெரும் தொண்டு செய்துள்ள மாமன்னர் சரபோஜியின் வாழ்வு கல்வியியலின் பெருவாழ் வென்றே குறிக்கலாம்.



பாலரோக சிகிச்சை, க்ஷயரோக சிகிச்சை, வாதரோக சிகிச்சை, குன்மரோக சிகிச்சை, மூத்திரரோகம், அனுபோக வைத்திய அட்டவணை, பற்பவகை, நானாவித ரோக சிகிச்சை, மச்சமுனி பெருநூல் முதலிய பல வைத்திய நூல்கள் மேற்கூறிய புலவர்களால் எழுதப்பட்டன. இவற்றில் பல நூல்கள் இம்மகால் வெளியீடாக வெளிவந்துள்ளது. இதைத் தவிர அவர் சேகரித்த நூல்கள், தமிழிலும், வடமொழியிலும் ஏராளமாக உள்ளன.

**வடமொழியில் சேகரித்த மருத்துவ நூல்கள் :**

அஷ்டகர்மஸ்தானம், அஷ்டாங்க ஹிருதயம், பதார்த்த சந்திரிகா, சர்வாங்கசுந்தரி, அஷ்டாங்க ஹிருதய தீபிகை, ஆயுர்வேத மஹோததி, உத்பலபரிமளம், நேத்ரரோகநிதானம், கஸ்யபசம்ஹிதா, சமத்காரசிந்தாமணி, சிகித்ஸா கலிகா, சிகித்ஸாம்ருதசாகரம், தன்வந்தரி சாரநிதி, தன்வந்தரி விலாசம், பாலதந்திரம், பாவபிரகாசிகா, பேஷஜகல்பம், மாதவநிதானம், யோகசிந்தாமணி, ரஸராஜலக்ஷ்மி, ரஸஸாரம், வாஜிகரணம், ராஜமிருகாங்கம், வைத்தியசிந்தாமணி, சன்னிபாத சந்திரிகா, சாராவளி, நாகார்ஜுனீயம், சுஸ்ருத ஸம்ஹிதா, மூலிகா பிரகரணம், பாகதர்ப்பணம், போஜனகுதுகலம், அஸ்வ சாஸ்திரம், அஸ்வாயுர்வேதம், கஜசாஸ்திரம், கஜலக்ஷண சிகித்ஸா, ஆனந்த கந்தம், அன்னபானவிதி, கௌசிக சிந்தாமணி, நாடீ பரீக்ஷை, நாடீலக்ஷணம், நாடீ சக்கரம், நாடீ விஞ்ஞானீயம், தைலப் பிரயோகம் முதலியன.

**தமிழ் மொழியில் சேகரித்த மருத்துவ நூல்கள் :**

சித்த புருடர்களாகிய அகஸ்தியர், தேரையர், பிரம்ஹமுனி, தன்வந்தரி யூகிமுனி, திருமூலமுனி, சட்டைமுனி, கொங்கணர் போன்ற சித்தர்கள், மற்றும் பலர் இயற்றிய தமிழ் வைத்திய நூல்களும், சரக்குவைப்பு, ரசவாதம், சரக்கு சுத்தி, கௌளி நாடி, தும்மல் சாத்திரம், நாடீ சாத்திரம், ஜ்வர சாத்திரம், வாஜிகரணம் முதலிய பல நூல்களையும் சேகரித்துள்ளார்.

இவற்றுள் நயனரோக சிகிச்சை என்னும் நூலில் தமிழ்ச் செய்யுட்கள் தேவநாகரி எழுத்துக்களால் எழுதப்பட்டு 'பாவபிரகாசிகா' என்ற பெயருடன் இந்நூலகத்தில் உள்ளது, மேலும் இந்நூலகத்தில் சர்ப்ப சாஸ்திரம், சர்ப்பாரூடம், சித்ராரூடம், முதலான நூல்களும் உள்ளன. இதைத்தவிர காயகற்பம், இரசவாதம், சித்தயோகம் முதலியன தமிழ் மருத்துவப் பகுதியில் இடம்பெற்றுள்ளன.

**மருத்துவமும் சித்திரங்களும் :**

மன்னரால் ஏற்படுத்தப்பெற்ற தன்வந்தரிமகாலின் மருத்துவப் பிரிவில் நோயுற்ற கண்களின் சித்திரங்கள் நன்கு வரையப்பட்டு நோயாளியின் விவரம்,

நோய்களின் விபரம், சிகிச்சை முறைகள் முதலியன ஆங்கிலத்தில் எழுதப் பட்டுள்ளன. இதனை Case Sheets எனலாம் இவை இந்த நூலகத்தின் அருங்காட்சியகத்தில் காட்சிக்காக வைக்கப்பெற்றுள்ளன.

மருத்துவத்திற்காகத் தயாரிக்கப்பட்ட மூலிகைகளின் அடையாளங்களை யாவரும் சுலபமாகத் தெரிந்துகொள்ள இயற்கையான வண்ணங்களைக் கொண்டு வரைந்த சித்திரங்களைத் தொகுத்துள்ளார். இன்னமும் அப் பச்சிலைச் சித்திரங்கள் சிறிதும் மங்காத நிலையில் இந்நூல் நிலையத்தில் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தொடர்ந்து மன்னர் சரபோஜி சேகரித்த உடற்கூறு சாஸ்திரப் புத்தகங்களில் அழகிய பெரிய படங்கள் அடங்கியவை சரீரத்தின் ஒவ்வோர் அங்கத்தின் படமும் இயற்கையான வண்ணங்களால் திட்டப்பட்டு தத்ரூபமாக காட்சியளிக்கின்றன. இத்தகைய அரிய படைப்புக்கள் பல இந்நூலகத்தில் காணப்படுன்றன.

இவ்வாறு மனிதர்களுக்கு மட்டுமின்றி மாடுகள், குதிரைகள், யானைகள் பறவைகள் முதலிய உயிரினங்களுக்கும் மருத்துவம் செய்துள்ளார் என்பதை யும் அவைகளுக்கு மருத்துவம் செய்த மருந்துக்களின் குறிப்புக்களின் வாயிலாக நாம் தெரிந்துகொள்ளமுடிகிறது. இவற்றை 'விலங்கு வைத்தியக் குறிப்புகள்' என்ற தலைப்பில் [1]மோடிக் குறிப்புக்களிலிருந்து அறிய முடிகிறது.

மேற்கூறிய வைத்திய நூல்கள் யாவும் நோய்கள் வந்தபிறகு காத்துக் கொள்வதற்கு உதவும். ஆனால் நோய்கள் வருமுன் காத்தற்குரிய நூல்களில் 'அறுசுவை ரசவர்க்கம்' 'பலவகைச் சிந்தாமணி' என்னும் நூல்களை உதாரணமாகக் கொள்ளலாம்.

இவ்வாறு மக்களுக்குப் பயன்தரும் மருத்துவ நூல்களை இயற்றச் செய்தும், விலைகொடுத்து வாங்கியும் சேகரித்துவைத்த மன்னர் சரபோஜியின் தொண்டு என்றும் புகழுடன் நிலைத்து நிற்கின்றது. மேலும் இந்நூலக வெளியீடுகளில் ஒன்றான 'சித்த மருத்துவச் சுடர்' என்னும் நூலினைப் பாராட்டித் தமிழக அரசு பரிசும், பாராட்டிதழும் வழங்கியுள்ளது. சரசுவதி மகாலில் உள்ள மருத்துவ நூல்கள் பல்லாயிரக்கணக்கான மக்களின் பிணித் துன்பங்களைக் களைந்து ஆரோக்கிய வாழ்வை அளிக்கும் மாபெரும் பெட்டக மாக விளங்கி வருகிறது என்பதில் ஐயமில்லை!

வாழ்க சரபோஜி மன்னர்! வளர்க சரசுவதி மகால்!

---

1 தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும், சமுதாய வாழ்க்கையும்.
— தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு

# வேண்டுகோள்

கருணையுள்ளம்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளை சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

பன்மொழிப்புலவர் பேராசிரியர்
**மு. சதாசிவம்,** எம்.ஏ., எம்.லிட்.,
இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
23—9—89.